விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபத்து நான்கு
Valampurii
சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 09 வியாழக்கிழமை (22.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094


# ஜெனிவாத் தீர்மானம் வாக்கெடுப்பு இன்று!

(நியூயோர்க்)

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை இன்று 22ஆம் திகதி இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணியளவில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைப்பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் இலங்கைக்கு சார்பாக சீனா, ரஷ்யா, கியூபா உட்பட எட்டு நாடுகள் தற்போது தங்களது நிலைப்பாட்டினை வெளியிட்டுள்ளன. தீர்மானத்தை ஆதரிப்பதற்கு 22 நாடுகள் அமெரிக்காவிடம் கூட்டாக இணக்கம் தெரிவித்துள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தளபதி ரமேஷை படையினரே கொன்றனர்

## காணொளி ஆதாரங்கள் சாட்சி



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் ரமேஷ் படுகொலையின் புதிய ஆதாரம் வெளியாகியுள்ளது.

ரமேஷிடம் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொள்ளும் காணொளிகள் வெளியாகிய நிலையில் தற்போது அவர் படுகொலை செய்யப்பட்டுள்ள புகைப்படங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி (02ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் திருத்தம் செய்ய இந்தியா முயற்சி

(ஜெனிவா)

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 19ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்குஎதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில் இந்தியா சில திருத்தங்களைச் செய்வதற்கு முனையும் என்று இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் இத்தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு முன்னர் அதில் சில திருத்தங்களை இந்தியா செய்யும் என இலங்கையின் இராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி இவ்வூடகம் குறிப் பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் இணப் பிரச் (02ஆம் பக்கம் பார்க்க)



# சரணடையுமாறு கே.பி. கூறியதை பிரபாகரன் நிராகரித்தார்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடையுமாறு கே.பி.எனப்படும் குமரன் பத்மநாபன் விடுத்த கோரிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நிராகரித்ததாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கைக்கு எதிரான யோசனையொன்றை ஏன் கொண்டுவந்தீர்கள் என அமெரிக்க உயர்ஸ் (24ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவாத் தீர்மானத்தை உறுப்பு நாடுகள் ஆதரிக்க வேண்டும்

## பிரித்தானிய தொழிற்கட்சி எம்.பிகள் கூட்டாக கோரிக்கை

(ஜெனிவா)

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 19ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்திற்கு உறுப்பு நாடுகள் ஆதரவு வழங்க வேண்டும் என பிரித்தானியத் தொழிற்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் பிரித்தானிய தொழில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பின்ரும் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரங்கள் அமைச்சருமான டக்ளஸ் அலெக்ஸ் சான்டர், நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான



டேவிட் மிலிபான்ட், நாடாளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகார மற்றும் முன்னாள் உள்விவகார அமைச்சருமான ஜக் ஸ்ட்ரோ மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் மார்க்கிறேட் பெக்கெட் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இவர்கள்நால்வரும்கூட்டாகவெளியிட் டுள்ள இந்தவேண்டுகோளில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விவகாரங்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

இலங்கையில் நிலையான சமாதானத்தை அடைவதற்கு மட்டும் இத்தீர்மானம் முக்கிய மானதல்ல. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டங்களின் பெறுமானத்தை பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு சர்வதேச சமூகத்துக்குண்டு.

இலங்கையில் இடம்பெற்ற போரில் பத்தாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட் டுள்ளதாக ஐ.நா. நிபுணர்கள் குழு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இப்போரின்போது போரில் (02ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்களை அறையில் பூட்டினர்

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகத்தினரை மாணவர்கள் அறையொன்றில் வைத்து பூட்டிய சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இம்மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்ட அதேவேளை தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவாதம் கிடைக்கும் வரை கதவைத் திறக்கமாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலைமையினைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்துள்ளதுடன் நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

பல மணித்தியாலங்களின் பின் விரிவுரையாளர்களும் நிர்வாகப் பணியாளர்களும் அறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுப் புதன்கிழமை காலை முதல் மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிலையத்தில் காணப்படும் பல்வேறு ஊழல் மோசடிகளுக்கு எதிராக கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து வகுப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாக மாணவர்கள் தெரிவித்தனர். (ந-8,15)

# மனித உரிமை மீறலில் இராணுவம் ஈடுபடவில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை என இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்த காலத்தில் படையினர் மிகவும் கருணையுள்ளத்துடன் கடமையாற்றியதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்த 3 இலட்சம் அப்பாவி பொதுமக்கள் மீட்கப்பட்டனர்.

மிகவும் மனிதாபிமான முறையில் பாரியளவிலான பொதுமக்களை மீட்டெடுத்த உலகின் முதன்மையான இராணுவமாக இலங்கை திகழ்கின்றது.

வேறு எந்வொரு இராணுவமும் இந்த அளவிற்கு பொதுமக்களின் மீது கரிசனையுடன் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இவ்வாறான ஒரு பின்னணியில் படையினர் மீது எவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மனிதாபிமான மீட்புப் பணிகளை தடுத்து நிறுத்த பல உலக நாடுகள் முயற்சியை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தியுள்ள அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்த சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணியவில்லை என இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ந-8,11)

# மோட்டார் சைக்கிள் சாகசம் மூன்று பேர் படுகாயம்

(யாழப்பாணம்)

துரையப்பா விளையாட்டரங்கில் மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்டிக்கெண்டிருந்த இராணுவ வீரங்கனைகள் இருவர் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவ் விபத்தில் இவர்களுடன் மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவத்தில் குமாரிகா ஜெயசிங்க, சிகானி கோசிலா ஜெயசிங்க ஆகிய இரு வீராங்கனைகள் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் இராணுவத்தினரின் சாகச நிகழ்வுகளில் ஒன்றாக நடைபெற்ற மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கையில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டமையாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ந-4)

# சங்கரன்கோவில் இடைத்தேர்தல் அ.தி.மு.க. அமோக வெற்றி

## கட்டுப்பணத்தையும் இழந்தது தி.மு.க

(சென்னை)

சங்கரன்கோவில் தொகுதி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. தொடர்ந்து ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றுள்ளது. இத்தேர்தலில் போட்டியிட்ட அ.தி.மு.கவின் வேட்பாளர் முத்துச்செல்வி 68 ஆயிரத்து 757 மேலதிக வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.

அ.தி.மு.கவின் வேட்பாளர் முத்துச்செல்வி 94 ஆயிரத்து 977 வாக்குகளை பெற்றுள்ளார். அதேவேளை, இரண்டாவது இடத்தைக் கைப்பற்றிய தி.மு.கவின் வேட்பாளர் ஜவாஹர் சூரியகுமார் 26 ஆயிரத்து 220 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் போட்டியிட்ட ம.தி.மு.கவின் வேட்பாளர் சதன் திருமலைக்குமார் 20 ஆயிரத்து 678 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் தே.மு.தி.கவின் வேட்பாளர் முத்துக்குமார் 12 ஆயிரத்து 144 வாக்குகளையும் பெற்று நான்காவது இடத்தையும் பெற்றுள்ளனர். பாரதிய ஜனதாக் கட்சியின் வேட்பாளர் முருகனுக்கு ஆயிரத்து 633 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

இத்தேர்தலில் போட்டியிட்ட தி.மு.கவின் வேட்பாளர் உட்பட ஏனைய அனைத்து வேட்பாளர்களும் தமது கட்டுப்பணத்தை இழந்துள்ளனர். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் இடம்பெற்ற இடைத்தேர்தலில் தி.மு.க. கட்டுப்பணத்தை இழந்துள்ளமை இதுவே முதல் முறையாகும். (ந-8,11)

# புலிகளின் ...

இராணுவத்தினர் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் கொக்கட்டிச்சோலை அரசடித்தீவை பிறப்பிடமாகக் கொண்ட துரைராஜசிங்கம் தம்பிராஜா என ரமேஸின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

காணொளியில் சாதாரண உடையில் இருந்த ரமேஸிடம் இராணுவ உடைகளை அணியுமாறு பலவந்தப்படுத்திய படையினர் அதன் பின்னர் அவரை படுகொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான ரமேஸ் விடுதலைப் புலிகள் அமைப்பின் சிறப்புத் தளபதியாக பணியாற்றியிருந்தார். அவர் 1986 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

# வீடு புகுந்து கொள்ளை

அதிகாலை வேளை வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களை ஆயுதங்களினால் தாக்கிவிட்டு பணம் மற்றும் பொருள் உட்பட பல லட்சம் பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் நாவலர் வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கணவனும் மனைவியும் கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்ததுடன், கணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொள்ளையர்கள் உள்நுழைந்ததை அவதானித்த குறித்த இருவரும், தமக்கு பாதுகாப்பு தேட முற்படுகையிலேயே கொள்ளையர்களினால் தாக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் லப்டொப் கணனி மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸாரிடம் முறையிட்டதனைத் தொடர்ந்து கொள்ளைச் சம்பவத்தோடு தொடர்புடைய நபரொருவரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

# இலங்கைக்கு எதிரான தீர்...

சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இந்தியா இத்தீர்மானத்தில் உள்ளடக்க விரும்புவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் குறிப்பிடுவதாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுடன் நேற்றுமுன்தினம் சுமார் 20 நிமிடங்கள் தொலைபேசி வாயிலாக உரையாடியிருந்தார்.

உள்நாட்டு அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா கூறியதாக ஜெனிவாவிலுள்ள இலங்கையின் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இத்தீர்மானத்தின் மூன்றாவது சரத்தில் திருத்தங்களைச் செய்வதற்கும் இந்தியா தீவிரம் காட்டி வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விவகாரம் தொடர்பிலான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவை வழங்குமாறும், இலங்கை அரசாங்கத்தை இதனை ஏற்றுக் கொள்ளுமாறும் அத்தீர்மானத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும் என இத்தீர்மானத்தின் மூன்றாவது சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 22ஆவது கூட்டத் தொடரில் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவை வேண்டுவது என இத்தீர்மானத்தின் மூன்றாவது சரத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் ஒரு சர்வதேச அங்கீகாரத்துடனான ஐ.நாவின் நேரடித் தலையீட்டுக்கு வழிகோலும் இந்த சரத்தினை பலவீனப்படுத்தி, ஐ.நாவின் பங்கு வகிப்பதற்கு இந்தியா தீவிரம் காட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானத்தில் சில திருத்தங்களுடன் இந்தியா ஆதரிக்கும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறிய கூற்று, இதனையே கோடிட்டுக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இத் தீர்மானத்தின் உள்ளடக்கத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பில்லை என அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

தமிழக அரசியல் கட்சிகளின் தீவிரமான அழுத்துங்களையடுத்து இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானத்தில் சில திருத்தங்களை செய்து அதனை ஆதரிக்க இந்தியா முடிபுசெய்துள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (ந-8,11)


EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

YAALH ENGLISH ACADEMY

யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:

புதிய உயர் கல்லூரி

விபரங்களுக்கு :0773212711

(7379)





கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணியர்களுக்கான நில ஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வண்ணம்

ஆலய பரிபாலன சபை.

(சி/6075)


# ஜெனிவாத் தீர்மானத்தை...

ஈடுபட்ட இரு தரப்பினர்களும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் ஐ.நா. நிபுணர்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இவ் விடயங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை தவிர்த்து இராணுவ நீதிமன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் எதிர்பார்க்கின்ற பெறுபேறுகளை தரமாட்டாது.

வடக்குக் கிழக்கு பிரதேசங்கள் இராணுவமயப்படுத்தப்படுகின்றமை, தமிழ் மக்களின் அரசியல் சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்படுகின்றமை போன்ற விடயங்கள் ஏற்கெனவே இனங்களுக்கிடையில் பதற்றநிலையை அதிகரித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்படும் தீர்மானம் நல்லிணக்கம் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்றது.

அத்துடன் இப்பரிந்துரைகளை நடைமுறைக்குப்படுத்துவதற்குரிய நிகழ்ச்சிநிரல்களையும், போர் மீறல்கள் தொடர்பில் நம்பகரமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் இவ்விவகாரம் தொடர்பிலான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறும் இத்தீர்மானம் இலங்கை அரசாங்கத்தைக் கோருகின்றது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முதற்படியாக இது அமையும். அவ்வகையில் இத்தீர்மானத்திற்கு ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்புநாடுகள் ஆதரவு வழங்க வேண்டும் என வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பிரித்தானியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)


செல்லா சினிமா-யாழ்ப்பாணம்



பல தடைகளைத் தாண்டி

17.03.2012 முதல்

10.30, 02.30, 06.30, 09.30,

ஆக்ஷன் கிங் அர்ஜுன், ரிச்சா, கபாலி நடித்த

மாசி

(C-6099)

## இன்று ஒரு தகவல்

### பித்து

புதிதாக திருமணம் முடித்த ஒருவன், அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்தான்.

வீட்டுவாசலில் வந்தவன் "ஜான்! ஜான்!" என்று அழைத்தான். உடனே அவனுடைய மனைவி ஓடி வந்து கதவைத் திறந்தாள்.

''எப்படி இருக்கிறாய் ஜான்?'' என்று கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

"இந்த இடத்திலே ஒரு சந்தேகம் வரலாம். இவன் ஜான்... ஜான்... என்று அழைத்தான். அவன் மனைவி வந்து கதவைத் திறக்கிறாளே... அப்படியென்றால் ஜான் என்பது யார்? அது ஆண்பிள்ளையின் பெயர் போல இருக்கிறதே. சந்தேகம்."

அப்படியொன்றுமில்லை அவனது மனைவி பெயர் ஜானகி... அதைச்சுருக்கி "ஜான்" என்று அழைக்கிறான். "கி" யை விட்டு விடுகிறான்.

இதை வாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவிலே சொன்னார் ''இவன் ஜானகியிலேயிருந்த ''கி''யை மட்டுமா விட்டான்... வீட்டுக்கீயையே இப்போது அவளிடம் தானே விட்டுள்ளான்-'' அப்படியென்றார். அதாவது வீட்டுச்சாவியே இப்போது அவளிடம் தான்.

வீட்டினுள் நுழைந்தவன் அவளது கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டான். தேம்பித் தேம்பி அழுவது மாதிரி இருந் தது. உடனே இவன் பதறிப்போனான்.

"ஏன்... என்ன நடந்தது... உனக்கு...? ஏன் இப்படி அழுகிறாய்?" என்றான்.

அதற்கு அவள் சொன்னாள் "உங்களின் அம்மா என்னை உற்று உற்றுப்பார்க்கிறார்" என்றாள்.

உடனே இந்த மகன் கொல்லைப்பக்கம் ஓடினான். அம்மாவைப் பார்த்தான்.

"ஏன் அம்மா "ஜானை"உற்று உற்றுப்பார்க்கிறீர்கள்?"என்று கேட்டான்.

''நான் ஒன்றும் பிழையாகப் பார்க்க வில்லையப்பா... உனது மனைவியில்லையா... அதனாலே ஆசையாகப் பார்த்திருப்பேன்'' என்றார் அவனது தாய்.

இவன் மனைவியின் முகத்தை பார்த்தான். மறுபடியும் அம்மா பக்கம் திரும்பினான்.

"இருந்தாலும் ஏன் அவளைப் பார்த்தாய்?" என்று கேட்டான்.

பெற்று, வளர்த்து ஆளாக்கிய தாயையே அடிக்க ஆரம்பித்து விட்டான்.

இதற்கிடையில் அந்த மருமகள் ஓடி வந்து...

"ஐயோ... அத்தையை அடிக்காதீங்கள்..." என்று சொல்லி அத்தையோட இரண்டு கைகளையும் சேர்த்து இறுகப்பிடித்தாள். அப்போது அவனுக்கு இன்னும் வசதியாகப் போய்விட்டது.

மகனிடம் அடிவாங்கின அந்த அம்மா பின்னேரம் கோயிலுக்குப் போனார். கடவுளிடம் பிரார்த்தித்தார்.

"கடவுளே! அவன் என் பிள்ளை! அவனது மனைவியும் எனக்கு இன்னொரு பிள்ளை மாதிரித்தான். அவர்கள் இருவரும் ஏதாவது அறியாமல், புரியாமல் நடந்து கொள்வார்கள். அதை நீ பெரிதாக எடுத்து அவர்களுக்கு ஏதாவது குறை வைத்துக் கொள்ள வேண்டாம். இப்படியாக அந்த அம்மா ஆண்டவனிடம் மனம் உருகி வேண்டிக் கொண்டார்.

இதைத்தான் "பெத்த மனம் பித்து" என்று சொல்கிறார்கள். இங்கு பித்து என்று சொல்வது ''பைத்தியம்'' என்ற அர்த்தத்திலே இல்லை. பித்து என்பது "மெய்யன்பு".

தனக்கு செய்யும் துன்பத்தை மறந்து பிள்ளைகள் மேலே ஒரு தாய் வைக்கும் மெய்யன்பு இருக்கு அது தான் பித்து.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கனகபுரம் வீதிகளில் அதிகரிக்கும் இளைஞர்களின் சேட்டை

## தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளி. கனகபுரம் 3ஆம், 4 ஆம் வீதிகள் ஊடாக பாடசாலைப்பிள்ளைகள் உட்பட இளவயதானோர் மற்றும் பெண்கள் செல்ல அச்சம் கொள்ளும் வீதியாக மாற்றம் பெற்றுள்ளது.

இப்பாதையால் தனியாக செல்லும் இளம் பெண்கள் மீதும் பாடசாலை மாணவிகள் மீதும் இளைஞர்களின் அட்டகாசம், சேட்டைகள் அதிகரித்து காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைக்கு செல்லும் மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள் என பல்வேறு தேவைகளுக்காகவும் வெளியே செல்லும் பெண்கள் இவ்வாறான கீழ்தரமான செயற்பாட்டின் மூலம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதோடு மன உளைச்சல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

இவ்வாறான அட்டகாசங்களில் ஈடுபடும் இளைஞர்கள் ஆக்கபூர்வமான வழிகளில் தமது நேரத்தையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவார்களேயானால் வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மை ஏற்படும்.

எனவே சம்பந்தப்பட்ட இளைஞர்கள் சிந்தித்து மற்றவர்களை துன்பப்படுத்தும் செயல்களை நிறுத்தி ஆக்கபூர்வமான முறையில்செயற்படவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இவ் இளைஞர்களின் சேட்டைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் தலையிட்டு ஆவன செய்யுமாறும், இளம் சமுதாயம் சீரழிந்து போவதனை தடுத்து நிறுத்த முன்வருமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-7-259)

## நீர் வரி இடாப்பினை தற்காலிகமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனை

கிளி.இரணைமடுக்குளத்தின் நீர் வரி இடாப்பினை விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க தற்காலிகமாக தயாரித்து நடைமுறைப்படுத்த ஆலோசித்து வருவதாக கிளி.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி பாராளுமன்றக் குழுத் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.ஏனெனில் இரணைமடுக்குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் இவ்வாண்டு சிறுபோக நீர் உரிமம் தொடர்பாக மிகவும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இதில் நீண்டகாலமாக காணி உரிமை மாற்றம் செய்யப்படாது இருத்தல், நீர் வரி இடாப்பு புதுப்பிக்கப்படாதுள்ளமை போன்ற காரணங்களால் சிறுபோகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் நீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த 16 ஆம் திகதி கிளி.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். எனினும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவில் மேற்கொண்டு தமக்கு சாதகமான பதிலை தருவார்கள் என எதிர்பார்ப்பதாக தெரிவிக்கின்றனர்.

(அ-7-254)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 35 | 20 | 30 |
| தக்காளி | 15 | 15 | 15 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 20 |
| கரட் | 40 | 30 | 40 |
| பூசணி | 30 | 30 | 25 |
| புடோல் | 25 | 30 | 20 |
| வாழைக்காய் | 35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-60 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 75 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 45 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 60 |
| பயற்றங்காய் | 40-50 | 80 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 | 45 |
| முருங்கைக்காய் | 200-250 | 300 | 200 |
| போஞ்சி | 40 | 60 | 50 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | - |
| கீரை - 1 பிடி | 8-12 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | .25 |
| வெங்காயப்பூ | - | 60 | 60 |

## இராசி பலன்

22.03.2012
(பங்குனி 09, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 8.42 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.49 மணிவரை
இராகுகாலம் 1.46-3.16 மணிவரை
சுபநேரம் 7.46-9.16 மணிவரை
குழந்தைவேற் சுவாமி குருபூசை
அமாவாசை விரதம்

**மேடம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் தாமதமாகும், திடீர் பணவிரயங்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள், தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியநாள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்தகாரியம் கைகூடும், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும், போசனசுகமுண்டு.

**மிதுனம்** அந்நிய உதவிகள் கிடைக்கலாம், தொழில் முன்னேற்றமுண்டு, ஆரோக்கியமான நாள், விருந்து பசாரங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுபசெய்திகள் வந்துசேரலாம்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், பிரயாணங்களால் பலனுண்டு, பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, உயரதிகாரிகளிடம் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது.

**சிங்கம்** கௌரவக்குறைவான நாள், எடுத்த காரியங்கள் தாமதமாகும், எதிர்பாராத கலகங்கள் ஏற்படலாம்,போசன சுகமுண்டு, உடல் நலக்குறைவான நாள்.

**கன்னி** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரும், தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** நன்மைகள் நடைபெறும் நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம், அயலவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், பிறருக்கு உதவி செய்யும் சூழ்நிலை அமையலாம்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம்கூடும், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், செய்தொழிலில் மேன்மையடைவீர்கள், சகோதர வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை கள் வந்து சேரலாம், தொழில் நன்மையுண்டு, போசனசுகமுண்டு.

**கும்பம்** வாக்குமேன்மையுண்டு, பயணாளிகளால் பலன் கிடைக்கும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்டவகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டுப்பெறும் நாள், திட்டமிட்ட வேலையொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

வளவன்

# இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் புதிய 'சுரக்கும' ஒய்வூதியத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் புதிய ஓய்வூதியத் திட்டமான சுரக்கும ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் சமூக பாதுகாப்பு சபையின் மூலம் சுயதொழிலாளர்களை இலக்காகக் கொண்டு சிறந்த ஓய்வூதிய திட்டங்கள் மூன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றில் யாழ். மாவட்டத்தில் 40 ஆயிரம் பயனாளிகள் இணைந்து ஓய்வூதிய பயனாளிகளாக உள்ளனர்.

இவ் ஓய்வூதியத்திட்டங்களில் முதல் இரு திட்டங்களான சகன, திலின திட்டங்கள் ஏற்கனவே இணைக்கப்பட்ட பயனாளிகளுடன் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் இது திட்டங்களில் புதிய பயனாளிகளை உள்வாங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் மூன்றாவது திட்டமான இசுறு திட்டத்துடன் புதிய ஓய்வூதியத்திட்டமான சுரக்கும ஓய்வூதியத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் ஓய்வூதிய திட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட 55 வயதிற்குட்பட்ட அரச உத்தியோகத்தர் அல்லாத சுயதொழிலாளர்கள் இணைந்து கொள்வதன் மூலம் மாதாந்த ஓய்வூதியம், இயலாமை பணிக்கொடை, இறப்பு பணிக்கொடை போன்ற உயர்ந்த நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் சுயதொழிலாளர்கள் பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தர் ஊடாக அல்லது கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக படிவங்களை பெற்று இணைந்து கொள்ள முடியும் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

# ஆன்மீக கருத்தரங்கு

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தினால் இளைஞர், யுவதிகளுக்கான ஆன்மீக கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சகல மதகுருமார்களும் கலந்து கொண்டு ஆன்மீக உரை நிகழ்த்தவுள்ளனர்.(அ-134)

# மாகாண மட்டத்தில் முதலாமிடம்



யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி நிஜானி குமரேசமூர்த்தி 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7-26)

# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபருக்கு ஆறு மாதகால கடூழிய சிறை

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியொன்றினைத் திருடியவருக்கு இரு வருடத்திற்குப் பின்பு 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையை யாழ். நீதிமன்றம் விதித்துள்ளது.

அராலி வீதி ஓட்டுமடத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதியன்று துவிச்சக்கர வண்டியினை பொம்மை வெளியினைச் சேர்ந்த இளைஞரொருவர் திருடியுள்ளார்.

குறித்த இளைஞர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசார்ணைக்குட்படுத்தியபோது அவர் பல குற்றங்களோடு தொடர்புபட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த இளைஞர் 2010 ஆம் ஆண்டே யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு பின்பு சில குற்றங்களுக்காக மீண்டும் கைது செய்யப்பட்டார்.

பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் மறியலில் வைக்கப்பட்ட காலத்தில் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவர் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நபர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையதனாலும் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றமைக்காகவும் 6 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன் நீதிமன்ற கட்டளையின்படி துவிச்சக்கர வண்டிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-4)

# கெற்பெலி பகுதி மணல் அகழ்வை சாவ. நகரசபை தடுக்காதது என்? மக்கள் கேள்வி

(சாவகச்சேரி)

கச்சாய் கெற்பெலி பகுதி கடற்கரையில் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் வாகனங்களில் பெருமளவு மணல் ஏற்றிச் செல்லப்படுவதனால் கடல்ஏரி நீர் கிராமத்திற்குள் புகும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீடு, கிணறு, மலசலகூடம் மற்றும் அத்தியாவசிய கட்டட தேவைகளை உறுதிப்படுத்தி தென்மராட்சி பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் தினமும் 50 இற்கு மேற்பட்ட வாகனங்களில் மணல் கொண்டு செல்லப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பகுதியில் கடற்கரையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்திற்கு அப்பால் கடல் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேலாக தனியார் காணிகளில் இனங்காணப்பட்ட இடங்களில் மணல் அகழ்வு இடம்பெறுகிறது.

கெற்பெலி பகுதியில் மணல் ஏற்றுவதை தடை செய்யக்கோரி சாவகச்சேரி பிரதேச சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் தொடர்ந்து மணல் ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொது மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)




# வடமராட்சி கிழக்குக்கடலில் இந்திய மீனவர்கள் அட்டகாசம்

(குரவெட்டி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்பரப்பில் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய மீனவர்களால் அறுத்து அழிக்கப்பட்டுள்ளதாக உடுத்துறை மீனவர்கள் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

உடுத்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த திங்கட்கிழமை இரவு நூற்றுக்கும் மேற்பட்ட ரோலர் படகுகளில் எட்டுப்பாக எல்லைக்குள் வந்த இந்திய மீனவர்களால் இந்நாசகார வேலை நடைபெற்றுள்ளது.

இதனால் உடுத்துறை மீனவர்கள் அச்சம் காரணமாக தொழிலைக் கைவிட்டு கரைக்கு திரும்பியதாகவும் மீனவர் அம்முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் கீரைமீன், கும்பிளா, திருக்கை போன்ற மீன்கள் அதிகமாக பிடிக்கப்படும் காலமாகும்.

இவ்வேளையில் இந்திய மீனவர்களின் அத்துமீறலில் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் பல இலட்சம் ரூபா நஷ்டத்தையும் எதிர்கொண்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-2-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி. சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம்வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (2)





வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இசையும் அசைவும் நிகழ்த்திய மாணவிக்கு வெற்றிக்கேடயம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ். செல்வதீபன்)

# வவுனியாவில் சீர்கேடுகள் இடம்பெறும் பதினொரு விடுதிகளை மூடுமாறு உத்தரவு

வவுனியா பகுதியில் இயங்கி வரும் பதினொரு விடுதிகளை மூடுமாறும் மூடிய பின்னர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் வவுனியா நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ் ராஜா உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா நகரத்திற்கும் அதனை சூழ் உள்ள பிரதேசத்திலும் மிகவும் மோசமான நிலையில் தங்குமிடங்களில் நபர்கள் சேர்ந்திருந்து நகரத்திற்கும் மக்களுக்கும் அசௌகரியமான காரியங்களில் ஈடுபடுவதாகவும் மது பாவனை அதிகரித்தும் காணப்படுகின்றது.

அத்துடன் விபச்சாரம், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாகவும் இவை விடுதிகளில் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மனுவொன்றினை நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்த வவுனியா பொலிஸார் இவற்றை தடுப்பதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் பதிவு செய்யப்படாத குறித்த விடுதிகளை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக மூடுவதற்கு அனுமதி வழங்குமாறு ஆணையை கோரியிருந்தனர்.

இதனை விசாரணைக்கெடுத்த நீதிபதி சிறுவர் துஷ்பிரயோகம், விபச்சாரம், முறையற்ற சாராய, போதைப்பொருள் பாவனை என்பன அதிகரிப்பதாகவும் அவ்வாறு அதிகரிப்பதற்கு நகர சபையின் கீழோ பிரதேச சபையின் கீழோ பதிவு செய்யப்படாத விடுதிகளும் தங்குமிடங்களும் காரணமாக அமைகின்றன.

குறித்த விடுதிகளையும் தங்குமிடங்களையும் மூடி அறிக்கை சமர்ப்பிக்கும்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் 3 விடுதிகள் வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்டும் 8 விடுதிகள் வவுனியா நகர சபைக்குட்பட்டும் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவற்றை மூடுவதற்கு பிரதேச சபை மற்றும் நகர சபைகளின் ஊடாக நடவடிக்கை மேற் கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேச சபை மற்றும் நகர சபைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட விடுதிகளை அந்தந்த அமைப்புக்கள் ஊடாக கண்காணிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# இரு முஸ்லிம் நபர்கள் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பு ஆட்டுப்பட்டித்தெருவில் வைத்து இரு முஸ்லிம் நபர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை ஆட்டுப்பட்டித்தெருவில் உள்ள மாடிக்கட்டடத் தொகுதி ஒன்றுக்கு அருகில் வைத்தே இவர்கள் இருவரும் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இவ்வாண்டுக்கான பொதுக்கூட்டம்

யாழ்.மாநகரசபையின் நடப்பாண்டிற்கான இராண்டாவது மாதாந்தக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக மாநகரசபை அறிவித்துள்ளது.

இம் மாதாந்தக்கூட்டமானது மாசி மாதம் நடைபெற்றிருக்க வேண்டிய இராண்டாவது பொதுக்கூட்டம் எனவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இக்கூட்டம் நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டு இம்மாதம் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)

# திருடிய 2 பெண்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணை

வீட்டினுள் புகுந்து நகைகளினை திருடிய இரு பெண்களுக்கு யாழ்.நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த தை மாதம் கொழும்புத்துறையிலுள்ள வீடொன்றினுள் அத்துமீறி புகுந்து திருட்டுத்தனமாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய நகைகளினை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த இருவரும் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு சந்தேக நபர்களான இரு பெண்களும் 8 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரனை செய்த நீதவான் இரு பெண்களுக்கும் தலா ஒரு இலட்சம் பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார்.

பிணை நிற்பவர்களில் ஒருவர் யாழ்.நீதிமன்ற எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையடிப்படையில் பிணை வழங்கப்பட்டதோடு குறித்த பெண்களினால் திருடப்பட்ட நகை உரியவர்களிடம் நிபந்தனையடிப்படையில் வழங்கப்பட்டும் உள்ளது. (2-4)

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உதவி மருந்தாளர்கள் பணிப்புறக்கணிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்றைய தினம் வைத்தியசாலை உதவி மருந்தாளர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

மேற்குறித்த வைத்தியசாலை ஊழியர்கள் சம்பள உயர்வை கோரியே இப்பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு வெறிச்சோடி காணப்பட்டதுடன் நோயாளர் விடுதி, கிளினிக் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மந்த கதியில் காணப்பட்டது. (அ-3-24)

# அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலுக்கு கிடைத்த வெகுமானம் அமெ.பிரேரணை

## ஐ.தே.க. எம்.பி கிரியல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் அமெரிக்காவின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பிரபாகரனின் இளைய புதல்வர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான சம்பவம் பற்றி மட்டும் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் கடந்த மூன்று ஆண்டு காலமாக நாட்டில் இடம்பெற்று வரும் கடத்தல்கள், படுகொலைகள் உள்ளிட்ட ஏனைய குற்றச்செயல்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது எனவும் கடந்த மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே இம்முறை தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மனித உரிமைப்பேரவை அமர்வுகளில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக இலங்கை அரசாங்கம் உறுதிமொழி வழங்கியிருந்ததாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியற்ற நடவடிக்கைகளினால் ஏற்பட்ட விளைவுகளுக்கு எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சுமத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-7)


சமூக பாதுகாப்பு சபை

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

அரச ஓய்வூதியக்கொடுப்பனவு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாத உங்கள் அனைவருக்கும் அரச அத்தாட்சி பெற்ற ஓய்வுதியக் கொடுப்பனவு ஒன்று

சுரக்கும திட்டம்

மாதாந்தம் ஓய்வூதியம் 1000 ரூபாவின் மடங்குகளாக் பயனாளி தனக்கான ஓய்வூதியத்ததை தனது பங்களிப்பு இயலுமைக்கேற்ப தானே தீர்மானிக்கக் கூடியதிட்டம்

இயலாமை மற்றும் இறப்பு பணிக்கொடை 50000/=





தொடர்புகளுக்கு

பிரதேச செயலகத்தில்
சமூக சேவை உத்தியோகத்தர்
கிராம உத்தியோகத்தர்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

மாவட்ட செயலகத்தில்
மாவட்ட இணைப்பதிகாரி
021 222 6163

க.செ.கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
94-8, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

ரூபன் ஸ்ரோர்ஸ்
பலசரக்கு பொருட்கள் வியாபாரம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

நிசாந்தன் உணவகம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(சி-6124)

# முள்ளிவாய்க்கால் நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது

## கூட்டமைப்பு உறுதியாகவே உள்ளது என்கிறார் மாவை

**புலிகளை முள்விவாய்க்கால்வரைக்கும் இட்டுச்சென்று அவர்களை சர்வதேசத்திலிருந்து தனிமைப் படுத்தியது போன்ற நிலைமை எமது தமிழினத்துக்கு மீண்டும் வந்துவிடக்கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் அவதானமாக இருக்கிறது என்று கூட்டமைப்பின் செயலாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.**

ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு தமிழ்த் தேசிக்கூட்டமைப்பு செல்லாமைக்கான காரணங்களை விளக்கும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே மாவை சேனாதிராஜா எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தமிழரசு கட்சியின் இளைஞர் அணித்தலைவர் எஸ்.சிவகரனின் ஏற்பாட்டில் மன்னார். நகரசபை கேட்போர் கூடத் தில் இந்தக்கூட்டம் இடம்பெற்றது.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணை விவகாரம் இன்று உலகநாடுகள் பூராகவும் சூடுபிடித்துள்ளது. இந்த வேளையில் ஏன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அங்கு செல்லவில்லை என்ற வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஓர் இக்கட்டான நிலைமை ஏற்படும்போது தலைவர் கூட்டாகவோ அல்லது தனித்துவமாகவோ ஒரு தீர்மானத்தை எடுத்து செயற்படுவது வழமையாகும்.

அவ்வாறே எமது கூட்டமைப்பின் தலைவரும் பலரை சந்தித்ததிலும் பல விடயங்களை அறிந்ததன் நிமித்தமும் ஜெனீவா விடயத்தில் ஒரு தெளிவான முடிவுடன் செயற்பட்டுள்ளார்.

எமது கூட்டமைப்பின் தலைவர் சிறந்த திறமையானவர் என இராஜதந்திரிகளே எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

நாங்கள் இந்த நேரத்தில் ஜெனீவாவுக்கு செல்வதனால் பயனுண்டா இல்லையா என்பதை கடந்த கால வரலாறுகளைப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும்.

புலிகளை முள்ளவாய்க்கால்வரைக்கும் இட்டுச்சென்று அவர்கள் சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டது போன்று நாமும் அத்தகைய நிலைக்கு செல்லக் கூடாது. அத்தகைய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்படாது தடுக்கும் வகையிலேயே நாம் செயற்பட்டுகின்றோம்.

எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் எதிர்பார்புக்களை சர்வதேச மட்டத்தில் எடுத்தியம்பி வருகின்றோம். அதேபோன்று ஆதிக்கமுள்ள நாடுகளின் கருத்துக்களையும் செவிமடுத்து அவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படாத நிலையில் செயற்படுகின்றோம்.

தற்போது அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையே நடப்பது ஆயுதப் போராட்டமல்ல. இரு இனங்களுக்கிடையில் நடைபெறும் போராட்டமுமல்ல. மாறாக இது இராஜதந்திர போராகும்.

எமது அயல்நாடான இந்தியா வெளியுறவு கொள்கையில் விட்ட பிழைகள் தான் இன்று பெரும் பூகம்பமாக வெடித்துள்ளது. இதை நாங்கள் இந்தியாவுக்கு மிகத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம்.

தற்பொழுது எமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடாது சர்வதேச அக்கறையிலிருந்து நாம் விலகிச் செல்லாது இருப்பதற்கு விழிப்பாக இருக்க வேண்டியது அவசிமாகும்.

எமது கூட்டமைப்பை உடைப்பதன் மூலம் தமிழினத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து எம்மை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்க முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதனால் நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என குறிப்பிட்டார். (அ-7)

# கேள்விகளை கேட்கும்போது பதிலளிக்க தயாராகுங்கள்

## சபா நாயகர் அறிவுரை

நாடாளுமன்றத்தில் கேள்விகளை கேட்கும் போதும் பதிலளிக்கும் போதும் அவற்றை தெளிவாக குறிப்பிடும் படி சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஐ.தே.க. பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் சபாநாயகர் சமல் ராஜபக்ச எச்சரித்துள்ளார்.

சஜித் பிரேமதாசவினால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு முறையாக பதிலளிப்பதை அமைச்சர் பெரேரா தவிர்க்க முனைந்த போது அவரை முதலில் சபாநாயகர் எச்சரித்தார்.

தேவையற்ற விபரங்களை கூற முயற்சிக்காமல் பதில்களை தெளிவாகக் கூறுங்கள். கேள்விகளை சரியாக புரிந்து கொண்டு பொருத்த மான பதிலை அளியுங்கள். இது நாடாளு மன்றத்தின் பெறுமதியான நேரத்தை சேமிக்க உதவும் என சபாநாயகர் கூறினார்.

அதேவேளை ஒழுங்குபத்திரத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள பிரதான கேள்விக்கு அளிக்கப்படும் பதில்கள் தொடர்பாக எழும் உபகேள்விகளை கேட்கும் போது தெளிவாக கேட்குமாறு சஜித் பிரேமதாசவிடம் சபாநாயகர் கூறினார்.

எனினும் தான் உபகேள்விகளை கேட்கும் போது இந்த கொள்கையை தான் பின்பற்றி வருவதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார். எனது கேள்விக்கான பதில் அமைச் சருக்கு தெரியவில்லை. அதுதான்பிரச்சினை. சபாநாயகர் உங்களு க்கு எனது கேள்வி விளங்கியுள்ளது. ஆனால் அமைச்சருக்கு விளங்கவில்லை என சஜித்பிரேமதாச தெரிவித்தார். (அ-2)



மூத்த சிறுகதை எழுத்தாளர் அநாதரட்சகனின் நிமிர்வு சிறுகதை தொகுதி வெளியிட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையுரை ஆற்றுவதையும் முதற்பிரதியை உதயன் பூட்வெயர்ஸ் உரிமையாளர் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# யாழ்.குடா நாட்டில் கலாசார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்

## அலென்ரின் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் சகல பிரதேச செயலங்களிலும் கலை, கலாசார நிலையங்கள் அமைக் கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் கலா மன்றங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கிக் கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு தொகை வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கலைஞர்கள் கௌரவிப்பு என்பதும் கலா மன்றங்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளும் இன்றைய காலத்திற்கு அவசியமான ஓர் நிகழ்வு. மூன்று தசாப்த காலமாக தொடர்ந்த யுத்தம் காரணமாக எமது கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் அழிக் கப்பட்டு இருந்ததுடன் கலை, கலாசாரத்தை மேம்படுத்த கூடியதொரு நிலை காணப் படவில்லை.

ஆனால் இன்றைய சமாதான காலத்தில் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தொடுக்ககூடியதொரு சூழல் உருவாகியுள்ளது. எனவே இந்த சாதகமான சூழலைப் பயன்படுத்தி கலைகளை மெருகூட்டுவதுடன் பழம்பெரும் கதைகள் மெருகூட்டப்பட வேண்டும். இன்று மூத்த கலைஞர்களின் இழப்பால் பழம்பெரும் கலைகள் மருவி வருகின்றது.

யாழ். குடாநாடு யுத்தத்திற்கு முன்னர் கலைகள் மேலோங்கி இருந்ததுடன் அவற்றுடன் ஈடுபாடு கொண்டவர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். ஆனால் தற்போது அழிவடைந்து வருகின்றது. இதை மேம்படுத்த பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதனடிப்படையில் யாழ். குடாநாட்டிலுள்ள பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் கலை, கலாசார நிலையங்கள் அமைக் கப்பட்டு கலைகளினை வளர்த்தெடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 'கூகுள்', 'யாகூ' கேள்வியால் திக்குமுக்காடிய அமைச்சர்

(கொழும்பு)

வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத் தின்போது கேள்விகளை கேட்பதற்கு எழுந்த எதிரணி உறுப்பினர் ஒருவர் நீங்கள் கூகுள், யாகூ பயன்படுத்துகின்றீர்களா? என திடீரென கேள்விகளை கேட்டமையால் பதிலளிப்பதற்கு எழுந்து நின்ற அமைச்சர் திகைத்து போன சுவாரசியமான சம்பவமொன்று பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அமைச்சர் பதிலளிக்காமல் திகைத்து போனதை அவதானித்த ஆளும் கட்சியை சேர்ந்த முக்கிய அமைச்சர்களின்ல் சிலரும் வாய்விட்டு சிரித்துவிட்டனர். எனினும் சபா நாயகர் சபையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொண்டார்.

கேள்வி நேரத்தின்போது இலங்கைக்கு பீடை கொல்லிகளை இறக்குமதி செய்கின்ற சட்ட ரீதியான நிறுவனங்கள் எவை? இறக் குமதி செய்கின்ற பீடை கொல்லிகளில் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கின்றவை இருக்கின்றனவா? என ஐ.தே.கவின் எம்.பியான தயாசிறி ஜயசேகர கமத் தொழில் அமைச்சரிடம் கேள்விகளை கேட்டிருந்தார்.

கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு கமநல சேவைகள், வனஜீவராசிகள் அமைச்சர் சந்திரசேன எழுந்தார். உடனடியாக எதிர்ப்பினை தெரிவித்த தயாசிறி எம்.பி. கமத்தொழில் அமைச்சரிடம் கேட்ட கேள்விகளுக்கு கமநல சேவைகள் அமைச்சர் எவ்வாறு பதிலளிக்க முடியும் என்று வினவியதுடன் பௌத்த சாசனமும் மீன்பிடியும் ஒன்றா என வினவினார்.

சரிசரி பரவாயில்லை. நீங்களே கேள்விகளுக்கு பதிலளியுங்கள் என்று கேட்டுக் கொண்ட தயாசிறி எம்.பி. நீங்கள் கூகுள், யாகூ பயன்படுத்துகின்றீர்களா? என வினவினார்.

தயாசிறி எம்.பியின் கேள்வியை சரியாக புரிந்து கொள்ளாத அமைச்சர் சந்திரசேன என்ன என்ன என்று தனக்கு முன்னால் அமர்ந்திருந்த மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தனவிடம் கேட்கையில் அவையில் இருந்த முக்கிய அமைச்சர்களும் எதிரணியினரும் சிரித்து விட்டனர்.

எனினும் அமைச்சர் தன்னை சுதாகரித்துக் கொண்டு பீடை கொல்லி இறக்குமதி தொடர்பில் பதிலளித்துக் கொண்டிருந்தார். எனினும் அமைச்சரின் பதிலில் திருப்தி கொள்ளாத தயாசிறி எம்.பியோ அடுத்தவரின் சீனியை நிறுப்பதற்கு முயன்றதால் இவ்வாறான நிலைமையே ஏற்படும் என்று சுட்டிக் காட்டினார்.

நிலைமையை புரிந்து கொண்ட சபா நாயகர் சமல் ராஜபக்ஷ கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அமைச்சர் தயாரில்லை எனில் உரிய அமைச்சருக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அவைக்குள் வருகைதந்த வேளையில் அமைச்சர் விமல் வீரவன்சவும் அவைக்குள் வந்தார். அப்போது எதிரணியின் பக்கத்திலிருந்து கூகுள் விமல் என்று யாரோ சத்தமிட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை கட்டுப்படுத்த குழுக்கள் அமைக்க பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த மாவட்ட ரீதியிலும் கிராம ரீதியிலும் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்துதல் என்னும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் செட்டித்தெரு வீதியிலுள்ள மனித உரிமை இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபனால் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது இதனைக் கட்டுப்படுத்த மாவட்ட ரீதியிலும் கிராம ரீதியிலும் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையினை முன்வைத்தார்.

அத்தோடு இந்த மாவட்ட ரீதியில் அமைக்கப்படவுள்ள குழுவில் யாழ். அரச அதிபர் உட்பட கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலைய உயரதிகாரிகள், அரச திணைக்களங்களைச் சார்ந்த உயரதிகாரிகள், சகல மதத்தலைவர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள், முச்சக்கரவண்டி சங்கப் பிரதிநிதிகள், தனியார் பேருந்துச் சேவை சங்கப் பிரதிநிதிகள், புத்தி ஜீவிகள் எனப் பல தரப்பட்டவர்களையும் உள்ளடக்க வேண்டும்.

அத்தோடு இந்த மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்படும் குழுவின் கட்டளைகளை நிறைவேற்ற கிராம மட்டத்தில் இன்னொரு குழு அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் பரிந்துரைத்தார்.

இது தவிர வட மாகாணத்தில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கூட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் இன்னும் மூன்று மாதங்களுக்கு இவற்றை முற்றாகக் கட்டுப்படுத்த கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மனித உரிமை இல்லத்தின் இயக்குநர் செல்வி செரின்சேவியர் கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறான பிரச்சினை உலகளாவிய ரீதியில் உள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையில் போருக்குப் பின்பு பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்து செல்கின்றது என அறிக்கைகள் ஊடாக தெரியவந்துள்ளது.

இதில் வடமாகாணத்தில் ஏனைய மாகாணங்களை விட சற்று அதிகம். இதற்கு கடந்த கால யுத்தசூழல் முக்கிய காரணம்.

சிறுமியர் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் யாழ். குடாநாட்டில் அண்மையில் நடைபெற்றது.

இவற்றை முற்றாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளோம்.

அத்தோடு சட்ட வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கு அமைய மாவட்ட ரீதியிலும் கிராம ரீதியிலும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த குழுக்கள் அமைப்பது எனவும் இவ்வாறு வன்முறைகளுக்குட்படுபவர்கள் வன்முறைக்குட்படும் நிலையில் உள்ளவர்கள் தகவல் கொடுக்கும் வகையில் தனியான தொலைபேசி இலக்கத்தை வழங்குவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பாக உரியவர்களுடன் கலந்தாலோசித்து விரைவில் செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் மனித உரிமை இல்லத்தில் வெளிக்கள இணைப்பாளர் செல்வி மேகலா சண்முகம், மனித உரிமை இல்லத்தின் யாழ். அலுவலக பெண்கள் பிரிவு இணைப்பாளர் செல்வி அ.தர்ஷினி, யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி உதயனி, மனித உரிமை இல்லத்தின் சட்டத்தரணி ப.குகனேஸ், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், அரசு சார்பற்ற நிறுவன அதிகாரிகள், ஊடக வியலாளர்கள் எனப் பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சிலரை பல நாள் ஏமாற்றலாம் பலரை சிலநாள் ஏமாற்றலாம்

## எல்லோரையும் ஏமாற்ற முடியாது என்கிறார் மனோ

(கொழும்பு)

இங்கே எவர் என்ன சத்தம் போட்டாலும் என்ன ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினாலும் உலகம் இவற்றை பொருட்டாக கணக்கில் எடுக்கவில்லை என்பதுடன் சர்வதேச சமூகம் அரசாங்கத்தை நம்பத் தயாராக இல்லை என்பது நாளுக்கு நாள் நிரூபணமாகி வருகிறது. வெறும் வாக்குறுதிகளால் அல்ல. நடவடிக்கைகளாலேயே இலங்கை அரசாங்கத்தை உலகம் எடை போடுகிறது.

எனவே சிலரை பலநாள் ஏமாற்றலாம். பலரை சிலநாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா நாட்களும் ஏமாற்ற முடியாது என்ற கசப்பான பாடத்தை அரசாங்கம் கற்றுக்கொண்டு வருகின்றது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னணியின் ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கட்சியின் நிலைப்பாடு குறித்து கட்சி தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த கால ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு கூட்டங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் ஆதரவாக இருந்த நண்பர்கள் இன்று படிப்படியாக தமது நிலைப்பாடுகளை மாற்றி வருவது கண்கூடு.

மனித உரிமை விவகாரத்திலும் சரி தேசிய இனப்பிரச்சினை விவகாரத்திலும் சரி எந்த வித நியாயமான இணக்கப்பாட்டுக்கும் வரமாட்டீர்கள். ஆனால் உலகமும் தமிழ் மக்களும் கண்ணை மூடிக் கொண்டு உங்களை நம்பிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற முட்டாள் தனமான கொள்கை இன்று தோற்றுப் போய் விட்டது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை நல்லபாடம் படித்துள்ளது. வெகு விரைவில் உள்நாட்டிலும் இந்த பாடத்தை படிக்கப் போகின்றது. இதன் எதிரொலியாக அரசாங்கம் வெகு விரைவில் பாரிய அரசியல் பொருளாதார நெருக்கடிகளை உள்நாட்டில் சந்திக்கப்போகின்றது. (அ-2)




ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாத யாத்திரையொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. பொரளை கெம்பல் பார்கிலிருந்து ஆரம்பமான பாத யாத்திரை கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் நிறைவடைந்ததைப் படத்தில் காணலாம்.

# சுண்டிக்குளம் கடற்பரப்பில் 7 ஆம் திகதி இறால் பிடிக்க அனுமதி

(சுண்டிக்குளம்)

சுண்டிக்குளம் கடற்பரப்பில் அடுத்த மாதம் 7 ஆம் திகதியிலிருந்து இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பல நூற்றுக்கணக்கான மீனவர்களின் வருமானம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கரைச்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் நெக்டா நிறுவனத்தின் உயரதிகாரிகள், நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான உபகரணங்கள் எதுவுமின்றி வெறுங்கையுடன் மீள்குடியமர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான மீனவ குடும்பங்கள் தொழில் செய்வதற்கான வசதியின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடினார்கள்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த முன்வந்துள்ள நெக்டா நிறுவனம் இவர்களுக்குத் தொழில் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில் வெளிநாட்டுச் செலாவணியை ஏற்படுத்திக் கொடுக்கும் இறால் வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டது.

இத்திட்டத்தின் அடிப்படையில் கடந்த டிசெம்பர் மாதத்தில் ரூபா 140 இலட்சம் பெறுமதியான 38 இலட்சம் இறால் குஞ்சுகள் விடப்பட்டன. இக்குஞ்சுகள் முழுமையாக வளர்ச்சி பெற மூன்று மாத காலம் தேவையானதால் பங்குனி மாதம் வரை சுண்டிக்குளம் கடற்பரப்பில் இறால் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது இறால் குஞ்சுகள் அறுவடை செய்யக்கூடிய நிலையில் வளர்ச்சியடைந்துள்ளதால் அடுத்த மாதம் 7 ஆம் திகதியிலிருந்து இறால் பிடிப்பதற்கு சமாசத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் வியாபாரிகளிடமிருந்து மீனவர்களைக் காப்பாற்றும் நோக்குடன் நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்கான ஒழுங்குகளையும் சமாசம் மேற்கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# விபத்தில் ஒருவர் பலி

(கரவெட்டி)

வல்வை ஆலை விழுந்தான் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் சோழங்கன் பகுதியில் இருந்து குஞ்சர் கடை நோக்கி வந்த துவிச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து சம்பவத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த கரணவாய் குஞ்சர் கடை பகுதியைச் சேர்ந்த சி.விபுலானந்தன் (வயது 55) என்ற வயோதிபரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார். (அ-3-24)

## போக்குவரத்து நெரிசல்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான உள்நாட்டு, வெளிநாட்டு சதித் திட்டங்களை தோற்கடிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட மற்றுமொரு எதிர்ப்பு நடவடிக்கை தாமரைத்தடாகம் மஹிந்த ராஜபக்ஷ அரங்கம் அருகில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சிலவற்றின் ஊழியர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதனிடையே தற்போது தாமரைத்தடாகம் அரங்கை சூழவுள்ள வீதிகளில் போக்குவரத்து நெரிசல் காணப்படுவதாக பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு தெரிவிக்கின்றது. (அ-2)

# யுத்தத்திலிருந்து மக்களை காப்பாற்ற தீவிர முனைப்புக் காட்டிய நோர்வே

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்காக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளும் காலம் கடந்து விட்டதாக நோர்வே அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கச் செயலாளருக்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதில் நோர்வே தீவிர முனைப்பு காட்டி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் முயற்சிக்கு ஆதரவளிக்கப்பட வேண்டுமெனவும் இந்த விடயம் மூன்றாம் தரப்பு நாடுகளுக்கு வெளிப்படுத்தக் கூடாது எனவும் அவர் கோரியிருந்தார்.

நோர்வேயின் திட்டம் குறித்து புலிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் எவ்வாறு பொது மக்களை வெளியேற்றுவார்கள் என புலிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசியல் தீர்வுத் திட்டத்திற்காக யுத்த நிறுத்தம் செய்யும் காலம் கடந்து விட்டதாகவும் பொதுமக்களை பாதுகாப்பு தொடர்பான கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்க முடியும் எனவும் நோர்வே புலிகளுக்கு அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் நோர்வேயின் முயற்சிகள் குறித்து இலங்கை அரசாங்கம் சந்தேகம் கொண்டிருந்ததாக பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெறும் வலையத்தை விட்டு வெளியேற மக்கள் விரும்பவில்லை என தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டு வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. சாட்சியங்கள் மாறுபட்ட தகவலையே வெளிப்படுத்துகின்றது. தப்பிச் செல்ல முற்பட்ட பொது மக்கள் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். பலர் தப்பிச் சென்றுள்ளனர் என பிளேக் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இடம்பெயர் மக்களுக்கு உரிய நிவாரணங்களையும் பாதுகாப்பையும் வழங்க ஐக்கிய நாடுகள் அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் உதவித்தொகை அதிகரிக்கப்படுமா?

## பாராளுமன்றில் கேள்வி

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான உதவித்தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று புத்திக்க பத்திரன நேற்றையதினம் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.

வருடாந்தம் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மாணவர் உதவித் தொகை எந்த விதத்திலும் போதுமானதாக இல்லையென்பதுடன் அது உரிய முறையில் அல்லது உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இதுவொரு ஊக்குவிப்பு கொடுப்பனவு மாத்திரமே எனவும் அதன்மூலம் அனைவரதும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்றும் இதற்குப் பதிலளித்த கல்விப் பிரதி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார். (அ-2)




இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கு கோப்பாய் பிரிவினரால் யா/ கோப்பாய் மகா வித்தியாலயத்தில் வைத்து அண்மையில் முதலுதவிக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் டாக்டர் பா.சயந்தன் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# துணைமருந்தாளர்களின் வேலை நிறுத்தத்தால் இருவர் உயிரிழப்பு

நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி துணை மருந்தாளர்கள் நேற்றுமுன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன் ஆர்ப்பாட்டத்தினையும் முன்னெடுத்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

துணை மருந்தாளர்களின் சேவை நிறுத்தம் காரணமாக நேற்று இரண்டு நோயாளிகள் உயிரிழந்திருப்பதுடன் மேலும் பலரது உடல்நிலை ஆபத்தான கட்டத்தை அடைந்திருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றும் துணைமருந்தாளர்கள் நீதிமன்ற தடை உத்தரவையும் மீறி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை பாரதூரமான குற்றச் செயல் என்றும் அது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் அமைச்சர் கூறினார்.

துணை மருந்தாளர்கள் தமது கடமைக்கு சமுகமளித்து உரிய முறையில் சேவையாற்றாமை காரணமாகவே இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகவும் சுகாதார பணியாளர்களின் வேலை பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளர்கள் உயிரிழக்க நேரிட்டிருப்பது இதுவே முதற்தடவையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் துணை மருந்தாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக வெளிநோயா ளர் பிரிவுகளுக்கு சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததுடன் வைத்தியர்கள் சிகிச்சையளிப் பதிலும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கினர். துணை மருந்தாளர்களின் கடமை நேர கொடுப்பனவை அதிகரித்தல் உள்ளிட்ட பல கோரிக் கைகளை நிறைவேற்றுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது (அ-2)

# டிக்கோயா பிரதான வீதியில் பஸ் விபத்து

ஹற்றனில் இருந்து நல்ல தண்ணீர் நோக்கி நேற்றுக் காலை பயணத்தை ஆரம்பித்த இலங்கை போக்குவரத்து சபை ஹற்றன் டிப்போ பேருந்து ஒன்று பயணத்தை ஆரம்பித்த சில நிமிடங்களில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹற்றன் டிக்கோயா பிரதான வீதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்தின் பின் சில்லுகள் நான்கும் கழன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என்றும் இதன் போது பேருந்தில் சுமார் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் சிவனொளிபாத மலை யாத்திரிகர்களாவர்.

பேருந்தில் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பேருந்தின் பின்பக்க டயரொன்று கழன்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதன்காரணாமாக இப்பிரதேசத்தின் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பதாகவும் போக்குவரத்துக்கு மாற்று வழி பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-7)

# நாடு நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் கிழக்கு மாகாண சபையால் நிராகரிப்பு

(கொழும்பு)

நாடு நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் கிழக்கு மாகாண சபையினால் நேற்று முன்தினம் ஏகமனதாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வின் போதே ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளின் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைய நாடு நகர திட்டமிடல் திருத்தச்சட்ட மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் திருத்தச் சட்டமூலத்தில் திட்டங்கள் கொண்டுவரப்படுவதாக இருப்பின் கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகளும் உள்ளடக்கப்படவேண்டுமென்றும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகளை அரசாங்கத்திடம் முன்வைப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாத இறுதியில் நடைபெற்ற சபை அமர்வின்போது கட்சித் தலைவர்களின் எதிர்ப்பை அடுத்து இந்தச் சட்டமூலம் தொடர்பான விவாதம் பெப்ரவரி மாதத்தில் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் இந்த திருத்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறைப்பதாக அமைந்துள்ளது என தெரிவித்து அதனை நிராகரிப்பதாக கிழக்க மாகாண சபையின் மாதாந்த அமர்வில் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மன்னாரில் 148 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் அனுஷ்டிப்பு

(மன்னார்)

இலங்கை பொலிஸ் நிலையத்தின் 148 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஷார தலுவத்த தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பொலிஸ் அதிகாரி லக் ஸ்ரீ விஜயசேன கலந்து கொண்டார்.


குறித்த நிகழ்விற்கு விருந்தினர்களாக மன்னார் பிரதேசச் செயலாளர் ஸ்ரான்லி டிமேல் மன்னார் மாவட்ட உதவிச் செயலாளர் பரமதாஸ் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியாம் மதகுருக்கள் மற்றும் மன்னாரில் பொலிஸ் சேவையில் இணைந்து உயிரிழந்த உயிரிழக்காத வீரர்களின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உயிர் நீத்த பொலிஸ் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு மன்னாரைச் சேர்ந்த உயிரிழந்த பொலிஸ் வீரர்களின் குடும்பங்களுக்கு அன்பளிப்பு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது. (2-7)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 77

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை


37 மி.மீ. கனொன் பீரங்கியை தனது இறக்கைக்குக்கீழ் கொண்டிருக்கும் விமானம் -இது வேகம் குறைந்தது, தரையைத் தாக்குவதற்கு பயன்பட்டது.

கூர்ஸ்க் சமரில் ஜேர்மனிய இராணுவத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை? சோவியத் யூனியனின் மேன்மேலும் வலிமை யடைந்துவந்த பொருளாதார, அரசியல், இராணுவ பலம், சோவியத் போர்க்கலையின் மேன்மை, சோவியத் படைவீரர்களின் பெரும் வீரம் மற்றும் ஆண்மை ஆகியவைதான் இக்காரணங்கள் ஆகும். சோவியத் யூனியன் மற்றும் இதன் இராணுவத்தின் வாய்ப்புக்களை மதிப்பிடாததும் தனது வாய்ப்புகளை மிகைப் படுத்தி மதிப்பிட்டதும் பாசிச ஜேர்மனியின் போர்த்தந்திர அதி சாகாசத்தின் சிறந்த வெளிப்பாடாக இருந்தன. கூர்ஸ்க் அருகே அடையப் பட்ட மகத்தான வெற்றி, சோவியத் மக்களும் சோவியத் இராணுவமும் வெல்ல முடியாத சக்தியாகும் என்பதை இன்னுமொரு முறை மெய்ப்பித்தது. இராணுவத் திறமை ஆயுதங்கள் மற்றும் போர்த் தந்திர தலைமையில் ஹிட்லரின் வேர்மஹ்டை விட செஞ் சேனை விஞ்சிநிற்பது உலகம் முழுவதற்கும் தெள்ளத் தெளிவாயிற்று.

**திேனப்பருக்கான சமர் (1943 ஆகஸ்டு -டிசம்பர்)**


கூர்ஸ்க் அரைவட்டத்தில் பாசிச ஜேர்மனிய துருப்புக்கள் அடைந்த படுதோல்வி சோவியத் ஜேர்மனிய போர்முனையில் சக்திகளின் சமன் நிலையை சோவியத் இராணுவத்திற்கு ஆதரவாக மேலும் மாற்றியது. கூர்ஸ்க் சமரின்போது எதிரிக்கு பேரிழப்பு ஏற்பட்டது.

1943-ஆம் ஆண்டு ஆகஸ்டு இறுதி வாக்கில் சோவியத் ஜேர்மனியப் போர்முனையில் இருந்த 226 எதிரி டிவிஷன்களில் (26டாங்கி மற்றும் மோட்டார் டிவிஷன்கள் உட்பட) மிகப் பெரும் பான்மையான டாங்கி டிவிஷன்களும் தரைப்படை டிவிஷன்களில் மூன்றில் ஒரு பங்கிற் கும் அதிகமான டிவிஷன்களும் முந்தைய சண்டைகளினால் கணிசமான அளவு பலவீனமடைந்திருந்தன.

எதிரியின் போக்கு வரத்து மார்க்கங்கள் சோவியத் கொரில்லா படை வீரர்களின் இடையறாத் தாக்குதலுக்கு உள்ளாயின. போர்முனை முழுவதும் தற்காப்பிற்கு மாறி செல்லுமாறு ஹிட்லரின் உயர்மட்ட படைத்தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டது. உக்ரேனில் குறிப்பாக தன்பாஸில் எப்படியாவது தங்கியிருக்க பாசிசத் தலைமை முயன்றது. தன்பாஸையும் மத்திய உக்ரேனையும் விட்டுச் செல்வதானது மிக முக்கிய விமானத் தளங்களில் இழப்பிற்கு இட்டுச் செல்லும். உணவுப் பொருட்கள் நிலக்கரி எரிபொருள் மற்ற மூலப் பொருட்களின் பெரும் பற்றாக் குறையை ஏற்படுத்தும் என்று பீல்ட் மார்ஷல் ஜெனரல் கைடல் குறிப்பிட்டான். வேலிஷ், பிரியான்ஸ்க், சுமி, வடக்கு, த்னேத்ஸ் ஆறு , மியூஸ் ஆறு ஆகிய எல்லைகளில் உறுதியாக நிற்குமாறு பாசிச ஜேர்மனிய துருப்புகளுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ஆழத்தில் போர்த்தந்திர தற்காப்பு எல்லை-நார்வா ஆறு, ப்ஸ்கோவ், வித்தெப் ஸ்க், ஓர்ஷா, சோஷ், திேனப்பர் அற்றின் மத்திய பகுதி, மலோச்னயா ஆறு கோட்டில், கிழக்கு அரண்-தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. திேனப்பரின் உயரமான மேற்குக் கரையில் பலம்மிக்க அரண்களை அமைப்பதற்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பாசிஸ்டுகளின் கணிப்புகளின்படி இவை சோவியத் துருப்புகளுக்கு கடக்க முடியாத தடையாக மாற வேண்டும்.

ஆனால், சோவியத் இராணுவத்தின் பலத்த தாக்குதலை எதனாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. மாஸ்கோ, ஸ்டாலின் கிராட், கூர்ஸ்க் அருகே கிடைத்த வெற்றிகளால் ஊக்க மடைந்து உள்நாட்டிலிருந்து உழைப் பாளிகள் இடையறாது அனுப்பிக் கொண்டிருந்த இராணுவத் தளபாடங்களை பயன் படுத்தி செஞ்சேனை தாக்குதலைத் தொடர்ந்தது. எதிரியை மூச்சுவிடாது மேற்கு நோக்கிப் பின்தள்ளியது.

கூர்க்ஸ் சமரின் போதே சோவியத் உயர் மட்ட படைத் தலைமை வெலீக்கியெ லூக்கிலிருந்து அசோவ் கடல் வரை போர்முனையில் தாக்கு தலை தொடுக்குமாறு கட்டளை பிறப்பித்தது. பிரதான அடி தென்மேற்கு திசையில் வதூதின்) மற்றும் ஸ்டெப்பி சேனை (தளபதி ஜெனரல் கோனவ்) ஆகிய சேனைகளின் துருப்புகள் திேனப்பரின் மத்திய ஓட்டத்தை வந்தடையும் திசையில் நகர்ந்தன. தென்மேற்கு சேனை (தளபதி ஜெனரல் மலினோஸ்க்கிய்) மற்றும் தெற்கு சேனையின் தளபதி ஜெனரல் தல்பூகின்) துருப்புகள் திேனப்பரின் கீழ் ஓட்டம், கிரீமியாவை நோக்கிச் சென்றன. இதன்பின் துருப்புகள் போகிற போக்கில் திேனப்பரைக் கடந்து இதன மேற்குக் கரையில் இருந்த தாக்கு முனைகளைக் கைப்பற்ற வேண்டும். சோவியத் துருப்புகளின் படைத் திரட்டில் 26 இலட்சத்து 33 ஆயிரம் ஆட்களிருந் தனர். 51 ஆயிரத்துக்கும் கூடுதலான சாதாரண மற்றும் மார்டர் பிரங்கிகள், 2ஆயிரத்து 400 க்கும் கூடுதலான டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகள் 2 ஆயிரத்து 850 போர்விமானங்கள் ஆகியன இருந்தன. அதேநேரத்தில் மேற்கு சேனையும் (தளபதி ஜெனரல் சக்க லோவ் ஸ்கிப்) கலீனின் சேனையின் இடப்பிரிவும் (தளபதி ஜெனரல் பெரியோன் மின்கோ) ஸ்மலேன்ஸ்க் திசையில் தாக்குதலைத் தொடுத்து இதன் மூலம் போர் முனையின் இந்த இடத்திலிருந்து எதிரி சக்திகளைத் தெற்கே கொண்டு செல்லாதவாறு செய்யவேண்டும். அஸோவ் கடலின் வடக்குக் கரையோரத்தில் இறக்குபடை யினரை இறக்குவதன் மூலம் அஸோவ் ப்ளீட் (அசோவ் கடற்படை) தெற்கே தரைப்படைகளின் தாக்குதலுக்கு உதவவேண்டும். கெரில்லாப் படை வீரர்கள் எதிரியின் உட்பரப்பில் பரவலாக போராட்டத்தை நடத்தி, எதிரியினுடைய போக்குவரத்து மார்க்கங்களைத்தாக்கி, தம் துருப்புகள் கொடுக்கப்பட்டது. மத்திய சேனை (தளபதி ஜெனரல் ரக்கசோவ்ஸ்கிய்), வரோனிஸ் சேனை (தளபதி ஜெனரல் திேனப்பர் ஆற்றைக்கடக்க உதவ வேண்டியிருந்தது.

திேனப்பர் ஆற்றோடிணைந்த நகர்ப்பகுதி-அண்மைக்காலப் படம்



அசோவ் பகுதியில் அமைந்த புதிய கோட்டை-இங்கிருந்த பழைய கோட்டை இப்போது இல்லை

(தொடரும்)

# பிரபஞ்சம் தேடும் தண்ணீர்...

## இன்று உலக நீர்தினம்

" தாயை பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே" என்பது நமது நாட்டின் சொல் வழக்கு. பெற்ற தாய்க்கு கொடுக்கின்ற மாரியாதையை விட தண்ணீருக்கு கொடுத்த மதிப்பினை நமது பழமொழிகளில் கண்டு கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் சபையும் நீர் தொடர்பான விழிப்புணர்வின் பொருட்டு 1992 ஆம் ஆண்டின் மார்ச் 22 ஆம் திகதி உலக நீர் தினமாகக் கொண்டாட தீர்மானித்தது.

நீரின் அவசியமும் தேவையும் கருதி விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில் இந்நாள் 20 ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

நீர்ச்சிக்கனம், நீர்த்தூய்மை, நீர் சேமிப்பு என்பன குறித்த விழிப்புணர்வு இன்னும் நம்மிடையே உருவாகவில்லை.

**நீருடன் தொடர்புள்ள நோய்கள்**

நீருடன் தொடர்புபட்ட நோய்களை கீழ்கண்டவாறு பட்டியற்படுத்தமுடியும்.

**1.நீரினால் பிறப்பிக்கப்படும் நோய்கள்**

உதாரணமாக வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் என்பன மட்டுமன்றி கல்லீரல் பேதி, சீதபேதி என்பனவுமாகும்.

**2. கழுவும் நீரால் ஏற்படும் நோய்கள்**

**3. நீர் அடிப்படையிலான நோய்கள்**

நீரால் பிறப்பிக்கப்படும் மற்றும் நீர் அடிப்படையிலான நோய்களினை சுத்தமானதும் பாதுகாப்பானதுமான குடிநீரை வழங்குவதன் மூலம் நன்கு குறைக்கப்பட முடியும்.

கழுவும் நீரினால் ஏற்படும் நோய்களை வீட்டுச் சுகாதாரத்திற்கும் தனியாள் சுகாதாரத்திற்கும் போதியளவு நீரை வழங்குவதன் மூலம் நன்கு குறைக்கப்பட முடியும்.

**நீரினால் பரவும் நோய்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்**

✦பாதுகாப்பான நீர் நிலைகளிலிருந்து சுத்தமான கைகளினாலும் பாத்திரங்களினாலும் குடிநீர் எடுக்கப்படல்.

✦குடிநீரை பாதுகாப்பான முறையில் சேமித்தல் அல்லது சேகரித்தல். வீடுகளில் மழை நீர்த்தொட்டிகள் அமைத்து அதனுள் மழை நீரினை சேகரித்து சுத்திகரித்து குடி நீரினைப் பெறுதல்

✦சுத்திகரித்த, கொதித்த அல்லது புற ஊதாக் கதிர்களின் தாக்கத்திற்குள்ளான நீரைப் பருகுதல்

✦கழுவப்பட்ட நீரினதும் சமையலறை கழிவு நீரினதும் ஒழுங்கான வடிகாலமைப்பு. இங்கு வடிகாலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும்.

யாழ். குடாநாட்டில் மக்கள் தங்களது முழுத்தேவைக்கும் நிலத்தடி நீரிலேயே தங்கியிருக்கின்றார்கள். எதிர்காலத்தில் குடாநாடு பெரும் குடிநீர் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும். இதன் காரணமாக நீரையும் சேமித்து நல்ல நீரை நிலத்தின் கீழ் அதிகரிக்க வேண்டும்.

## ஏன் வீண் நீராக...

**நீர்வளம் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

யாழ். குடாநாட்டில் கிடைக்கப் பெறும் நிலத்தடி நீரைப் பாதுகாக்க யாழ். அரச அதிபரின் கீழ் இயங்கும் நீர் சுகாதாரத்தைப் பேண அமைக்கப்பட்ட குழுவும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையும் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன.

சாத்தியமான வகையில் நிலத்தடி நீரைப் பாவித்து நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலமாகவோ, மாநகர சபை மூலமாகவோ, உள்ளூராட்சி சபை மூலமாகவோ குடிநீர் வழங்கல் மூலமும் விவசாயிகள் மழை நீரை கடலுக்கு அனுப்பாமல் வரம்புகள் அமைத்து காணிகளில், குளத்தில், கேணிகளில் சேகரித்தல்.

பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன் முதலியவற்றை நிலத்தின் கீழ் புதைப்பதால் மழை நீரானது உட்புகாது தடைப்படுகின்றது. இப்பொருட்களை எரிப்பதால் ஓசோன் படலம் பாதிப்படைகின்றது. எனவே, மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி தகுந்த கழிவகற்றல் முறையினை மக்களுக்கு அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் நிலத்தடி நீரின் முக் கியத்துவத்தையும் நீரைப் பாது காக்க வேண்டியதன் அவசியத் தையும் உணர்ந்து நாம் செயற்பட வேண்டும். இதற்கான முயற்சி களை தனியாகவும் சமூகமாகவும் இணைத்து நெறிப்படுத்த முனைய வேண்டும். மனிதனின் உடலில் கூட நீரின் அளவு பெரும் பங்கு என்பதுடன் ஒரு தேசத்தின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் நீரின் காத்திரமான பங்கையும் அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் நாம் இனங்காணலாம். நிலத்தடி நீர் வளத்தையே பெரிதும் நம்பியிருக்கும் யாழ். குடாநாட்டு மக்கள் இது பற்றிய முயற்சிகளில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும். எனவே, குடிநீரைப் பாதுகாத்து இயற்கை வளத்தை மேம்படுத்தி தேசத்தின் வளர்ச்சியில் பங்கெடுப்பதன் மூலம் செழிப்பான வாழ்வையும் சுபீட்சமான எதிர்காலத்தையும் எதிர்கால சந்ததிக்கு வழங்க முடியும்.

**இ.உமாரதன்**

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை யாழ்ப்பாணம்.

சுத்தமான குடிநீர் மூலம் நோயற்ற தேசத்தையும் நீர்வளத்தினை பெருக்குவதன்மூலம் விவசாயத் திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதால் செழிப்பு மிக தேசத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

எனவே, நீர் வளத்தை பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டியதும் அமுல்படுத்த வேண்டியதும் மானிட சமுதாயத்தின் தலையாய கடனாகும். குடிநீர் உயிர்ச்சக்தி என்பதால் குடிநீரை பேணிப் பாதுகாப்போம்.

# சேவையால் உயர்வுபெற்று நிற்கும் மூதறிஞர் பண்டிதர் ச.க.தம்பு

## மறைந்தார் மாண்பு

குருக்கள் மாவடி என்னும் திருவூர்,வடக்கு மிருசுவில் கிராம அலுவலர் பிரிவை உள்ளடக்கிய வளமான கிராமம் நீர்வள, நிலவளம், கல்வி வளம் நிரம்பிய இக்கிராம மக்கள் சைவ பாரம்பரிய மரபுகளின்படி வாழ்ந்து தமது வாழ்வை வளமாக்கியவர்கள்.

புராண படனம் செய்வதில் கைதேர்ந்த பலர் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெருமை மிக்க இக்கிராமத்தில் 1925 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தவர் தான் பண்டிதர் ச.க.தம்பு. அன்பும், பண்பும், பரிவும் இயல்பாகக் கொண்ட இவர் நல்மாணாக்கனாக இருந்து ஆரம்ப இடைநிலைக் கல்வியை மிருசுவில் அரசினர் வித்தியாலயத்திலும் உயர்கல்வியை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் பெற்றார்.

1945 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரிய கலாசாலை புதுமுகப் பரீட்சையில் சித்திபெற்று பரமேஸ்வராக் கல்லூரியில் மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சியைப் பெற்றதோடு மதுரைப் பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றார். இதே காலப்பகுதியில் சித்திர ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த சிலரில் இவரும் ஒருவராவார்.

சேர்.பொன் இராமநாதன் முகாமையில் இருந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும்,உப அதிபராகவும் இருபதாண்டுகள் தெளிவு,துணிவு, அர்ப்பணிப்பு ஆகிய தாரக மந்திரங்களைக்கைக் கொண்டு பல ஆயிரக்கணக்கான மாணவர்களை வளமாக்கி, நல்வாழ்வுக்கு அத்திவாரமிட்டவர்.

உயர்தர வகுப்புக்களுக்கு எந்த ஒரு பாடத்தையும் கற்பிப்பதில் வல்லவர். இலங்கை அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைச் சுவீகரித்த காரணத்தால் இவர் அதிபர் பதவி உயர்வு பெற்று, நாவலப்பிட்டி கதிரேசன், புசலாவை சரஸ்வதி, கண்டி மாளிகாவை, கண்டி இந்து ஆகிய கல்லூரிகளில் புகழ்பூத்த அதிபராக இருந்து மலையகப்பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றினார்.

மீண்டும் இடமாற்றம் பெற்று சொந்தக் கிராமப் பாடசாலையாகிய மிருசுவில் அரசினர் வித்தியாலயத்தில் அதிபர் பொறுப்பை ஏற்று இப்பாடசாலையின் பௌதிக வளங்களைப் பெருக்கியதோடு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளையும் உயர்த்தினார். தமது சேவையில் இருந்து 1984 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

ஒருவரிடம் ஒரு துறைசார்ந்த ஆற்றல்கள் அதிகமாக இருப்பதை யாம் பார்க்கின்றோம். ஆனால், இவரிடம் பல்துறை சார்ந்த ஆற்றல்களும் அனுபவங்களும் இருப்பதால் எல்லோரும் இவரை சகலகலாவல்லவன் பண்டிதர் தம்பு என அன்பாக அழைப்பார்கள்.

நல்லாசானாக, புகழ்பூத்த அதிபராக, கல்விமானாக. எழுத்தாளனாக. கலைஞராக. கவிஞராக. நாடக ஆசிரியராக. சமூக சேவையாளனாக, நல்ல குடும்பத்தலைவனாக, சிறந்த விவசாயியாகத் திகழ்ந்த மூதறிஞர் பண்டிதர் ச.க.தம்பு தமது 88 ஆவது அகவையில் 22.02.2012 ஆம் திகதி



சிவராத்திரி சிவவிரததினத்தில் சிவபதம் அடைந்து விட்டார். மனிதப் பிறப்பின் மாண்பினை அறிந்து தமது வாழ்வை வளமாக்கியத்துடன் பலரையும் நல்வாழ்வு வாழச் செய்து சேவையால் உயர்ந்து நிற்கும் மூதறிஞர் பண்டிதர் தம்பு என்றென்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

**க.பேரம்பலம்**

ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்




# சிறுவர் அரங்கம்

47

## அம்புலி மாமா கதைகள்

## அறிவுக்கண்ணைத் திறந்த வடை!

கிராமத்தில் கூலி வேலை செய்யும் ராமு பிழைப் பின்றி தன் மனைவி சரஸ்



வதியுடன் மிகுந்த வறுமை யில் வாடினான். ஒரு நாள் அவன் வீட்டில் எனக்கு வடை சாப்பிடணும் போல இருக்கு.:. பசிக்குது என் றான் ராமு.

உடனே கோபமடைந்த சரஸ்வதி வீட்டுல கொஞ் சம் கஞ்சி தான் இருக்கு இதுவும் தீர்ந்தா அவ்வளவு தான் இதுல வடைக்கு நான் எங்க போவன்? இதுக்கு தான் சென் னைக்கு போய் பிழைப்பு தேடுங்கன்னு சொல்லி கிட்டே இருக்கேன் என கடிந்து கொண்டாள். ஆனால் தன் ஊரைவிட்டு வேறெ ங்கும் போய் வேலை செய்ய ராமுவுக்கு தயக்க மாக இருந்ததால் அவள் பேச்சை கேட்கவில்லை.

அப்போது பக்கத்து வீட்டு குழந்தை தடுமாறி யபடி ராமு வீட்டுக்குள் நுழைந்து கீழே இருந்த கஞ்சிப் பானையை உரு ட்டி கவிழ்த்து விட்டது. அன்றைக்கு உணவுக்காக வைத்திருந்த கஞ்சி கொட் டி விட்டதால் அழுத மனை வியிடம் அடடே. சரி கவ லைப்படாதே நான் வெளியே போய் ஏதாவது கொண்டு வாரன் எனக் கிளம்பினான்.

அக்கிராமத்தில் பல இடங்களில் சுற்றித் திரிந்த ராமு கடைசியாக கிராமத் தலைவர் வீட்டுக்குச் சென் றான்.அங்கு வடை பாயச த்துடன் தடபுடலாக விருந்து ஏற்பாடு நடந்தது. மிகுந்த பரபரப்பில் இருந்த தலை வரிடம் ஐயா.. ஏதாவது வேலை இருந்தா கொடுங்க... கொஞ்சமா கூலி கொடுத்தா போதும் என்றான். அன்றை க்கு தலைவரின் தந்தைக்கு திதி என்பதால் கிணத்துல இருந்து தண்ணீர் எடுத்துக் கொடுக்குமாறு ராமுவிடம் கேட்டார் தலைவர்.

மகிழ்ச்சியுடன் வேகமாக தண்ணீர் இறைத்த ராமுவின் மூக்கை வடை சுடும் வாச னை துளைத்தது. தனக்கு வ டை தருவார்கள் என்ற நம் பிக்கையுடன் கிணற்றில் நீர் இறைத்தான். நீர் இறைத்து முடிந்ததும் அவனுக்கு தலை வரின் மனைவி கொஞ்சம் பணம் கொடுத்தாள். அப்பே பாது ராமு கெஞ்சலுடன் ரொம்ப நன்றிங்க வடை வாசனை நல்லாருக்கு கொஞ் சம் கொடுங்கம்மா என்றான்.. ஆனால் கோபமுற்ற தலைவ ரின் மனைவி எங்களுக்கே சரியா பத்தல.. வடை யெல்லாம் கிடையாது போ போ என பணத்தை அனுப்பி விரட்டி விட்டாள்.

ஏமாற்றத்துடன் நடந்து சென்ற ராமுவை அரிசி மண்டி உரிமையாளர் சோம நாதன் அழைத்தார். அரிசி மூட்டைகளை கிடங்கில் இருந்து கடைக்கு கொண்டு வந்து போட்டால் வடை தருவதாக கூறினார். மிகுந்த



மகிழ்ச்சியடைந்த ராமு வேலையை சுறுசுறுப்புடன் செய்தான்.


சிறிது நேரத்தில் அங்கு விரைந்த ஒரு சிறுவன் சோம நாதனின் மனைவி வடை சுடும் போது எண்ணெய் கை யில் ஊற்றிக் கொண்டதாக கூறினாள். இதைக் கேட்டு பதறிய அவர் ராமுவிடம் கொஞ்சம் அரிசியை மட்டும் கொடுத்து அனுப்பி விட் டார்.

தனது துரதிர்ஷடத்தை எண்ணி நொந்து கொண்ட ராமு வீட்டை அடைந்தான். அவனிடம் எங்க போனீ ங்க? இந்தாங்க உங்களுக்கு பிடிச்ச வடை என முக மலர்ச்சியுடன் லக்சுமி கொடுத்தாள்.

அதைப் பார்த்து ஆச்சரி யமுற்ற ராமு கஞ்சிக்கே காசு இல்லையே வடை எப்படி வந்தது? எனக் கேட்டாள். அப்போது பக்க த்து வீட்டுக் குழந்தை தட்டுத்தடுமாறி ராமு வீட்டு க்கு வந்தது. அந்தக் குழந் தைக்கு பிறந்த நாள் என் பதால் அவர்கள் வீட்டில் வடை கொடுத்தாக கூறி னாள்.

அப்போது தான் நிதர்சன த்தை உணர்ந்து கொண் டான் ராமு. நடக்கப் பழ குற குழந்தை கூட தன் வீட் டை விட்டு வெளியே வந்து உலகத்தைப் பார்க்கத் துடிக்குது ஆனா குடும்ப த்தைக் காப்பாத்த வேண் டிய நான் பிறந்த ஊரை வி ட்டு வெளியே போக அட ம் பிடிக்கிறேன்.

நான் திருந்தி விட்டேன். உடனே சென்னை போகப் போகிறேன் என தீர்க்க மாக தன் மனைவியிடம் கூறினாள்.



ராமுவின் பேச்சைக் கேட்டு லக்சுமி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.இரு வரும் வடையைப் பகிர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

# ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவது அவசியம்

## பொருளாதாரத்தடை இல்லை என்கிறார் பிளேக்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படாது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.**



இலங்கையின் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தின் நோக்கம் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது அல்ல.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கேயாகும்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு நான் வந்த போது கூட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் திட்டம் ஒன்றுக்கு செல்வதற்கு இலங்கை அரசாங்கம் தயக்கத்துடன் தான் இருந்தது.

இலங்கை முழுமையான பயனனையும் அடைவதற்கு நல்லிணக்க ஆணைக்குக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் வகையில் அமைந்துள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டையும் பிளேக் நிராகரித்துள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் 2006, 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசு ஒத்துழைத்து செயற்பட்டதாகச் சுட்டிக்காட்டிய பிளேக்,

ஐக்கிய நாடுகள் சபையின் பல சிறப்பு அறிக்கையாளர்கள் அங்கு சென்று வந்ததாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வது இலங்கைக்கு நன்மை தரும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## பிரபாகரனை பூண்டோடு அழிக்க கங்கணம் கட்டியது இந்தியாவே

### பிரதியமைச்சர் முரளிதரன் கூறுகின்றார்

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பாக இந்திய அரசாங்கமே முதலில் அறிவித்தது என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பூண்டோடு அழிக்க வேண்டுமென இந்தியா கங்கணம் கட்டியது.

இந்தியா விடுதலைப்புலிகளை பல நாடுகள் பயங்கரவாத அமைப்பாக அறிவித்ததன் பின்னரே இலங்கை அரசாங்கம் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வேண்டுமென கோரி வந்த சில நாடுகள் தற்போது அந்த முயற்சியை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. போரின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள சாதக நிலைமையை சில நாடுகள் விரும்பவில்லை.

நாட்டில் மீண்டும் கிளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே அவற்றின் நோக்கமாக அமைந்துள்ளது. கட்சி பேதமின்றி இந்த முயற்சிகளை முறியடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார். (அ-2)

## நல்லிணக்கத்திற்கு வழிகோலவே இலங்கைக்கு எதிரான பிரேரணை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள யோசனைக்கு ஆதரவு வழங்கப்படும் என இந்தியா தெரிவித்ததை அடுத்து அமெரிக்காவின் பத்திரிகைகள் இந்த யோசனையின் உண்மை நிலைமையை வெளிப்படுத்தியிருப்பதாக அரசாங்கத்திற்கு சார்பான இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த யோசனை மூன்று வருடங்களுக்கு முன்னர் இறுதி யுத்தத்தில் நடைபெற்ற சம்பவங்களை மறைக்க முடியாது போகும் எனவும், ஜெனீவாவுக்கான அமெரிக்க தூதுவர் ஐலின் டொனஹோவை மேற்கோள்காட்டி வோல் ஸ்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித படுகொலை தொடர்பான வாக்கெடுப்புக்கு ஐ.நா. மனித உரிமை பேரவை தயாராகி வருகிறது என்ற தலைப்பில் அந்த பத்திரிகை இந்த செய்தியை பிரசுரமாக்கியுள்ளது.

இலங்கையின் நல்லிணக்கத்திற்கு வழிகோலும் எனக் கூறி அமரிக்கா, இலங்கைக்கு எதிரான போர் குற்றங்களை முன்வைக்க முயற்சிக்கின்றது என்பது இதன் மூலம் தெரியவந்துள்ளதாக அந்த இணையத்தளம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் மனித உரிமை பேரவையில் தனது யோசனையை முன்வைத்த அமெரிக்கா இந்த யோசனை மூலம் இலங்கையில் சமாதானத்தின் விதைகளை விதைக்கப் போவதாக தெரிவித்திருந்தது. (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### சமாதானமாக உருவாக உழைப்போம்

சமாதானம் என்பது ஒரு தேடல் அல்ல. அது ஒரு சுயஉணர்வின் தரிசனம் என்றால் மிகையாகாது. அதை மற்றவர்களுக்கு ஏற்படுத்தும் உண்மை நிலையே ஒருமைப்பாடு எனப்படும். ஆனால் இன்று எமது சமுதாயத்தில் சமாதானம் உணர்ந்தறியப்படுவதில்லை. உண்மைகளைப்பேச முடியாத போலி நிலை. பேசுபவர்கள் தமது உண்மையான மனநிலைக்கு மாறாக தமது கட்சி அரசியலையும் தங்கள் சொந்த எதிர்பார்ப்பையும் நிறைவு செய்வதே சமாதானம் என ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று பேசுகின்றார்கள்.



இதனால் சமாதானம் எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு மலிந்துபோன பிரசாரத் தொனியாக விளங்கினாலும் அது ஒரு எட்டப்படாத எதிர்நோக்கலாகவே இருக்கிறது.

யதார்த்த சிந்தனையுடனான தளர்ச்சியற்ற மன வலிமையே உண்மை சமாதானத்துக்கான திறவுகோல். இதற்கு கூட்டு முயற்சியே அதாவது எல்லோரினதும் ஏகமனதான ஒன்றிப்பே அவசியம் என்பதில் ஐயமில்லை.இன்றைய மனிதன் பல வடிவங்களில் தன் திறமைகளை கையாளுவது கண்கூடு. அத்தகைய மனிதன் ஒன்றிணைந்து உலக சமாதானத்தை எண்ணினாலே மனிதர்களில் மனித நேயத்தை புரிந்து கொண்டாலே சமாதானப் பூங்கா உருவெடுக்கும் என்பது உறுதி.

அருட் சகோதரர்
ரமேஸ் அ.ம.தி

எமது நாட்டிலும் பல்லாண்டுகளுக்குப் பின்பு ஓர் சமாதானக் காற்று வீச எத்தனிக்கின்றது. இந்த வேளையில் அரசியல் பேதங்களை மறந்து அதிகாரப் போட்டிகளையும் ஆன்மீக வாதங்களையும் அகற்றி அடிப்படை விமர்சனங்களையும் வியாபார தந்திரங்களையும் நிர்வாக தடங்கல்களையும் மறந்து வாழ முற்பட வேண்டும். ஒரே சமுதாயமாக நமக்கு முன்னேயுள்ள கடமைகளை சரியாக உணர்ந்து செயற்பட வேண்டும். எங்களுக்குள் தளிர் விடும் ஒருமைப்பாடே சமாதானமாக உருவாகும். இயேசு ஆண்டவர் அருளிய உண்மையான சமாதானம் எமக்கும் கிட்ட அதற்காக எமது வாழ்வை ஆயத்தப்படுத்துவோம்.

## மருதானையில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

மருதானை புஞ்சிபொரளையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் காவலாளி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மருதானைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி இரவு இவர் தங்கும் அறையிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரியசேன (வயது 48) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் இவர் தூக்கிட்டு தற்கொலை செய்திருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே இறுதிப் போட்டி அண்மையில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# பிரேரணை முடிபிற்கு பின்னர் ஓராண்டு கால அவகாசம்?

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமை பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பான முடிபு எதுவென்றாலும் ஓராண்டுகால அவகாசம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்கெடுப்பு தோல்வியடைந்தாலும் வெற்றியீட்டினாலும் எதிர்கால நடவடிக்கைகளுக்காக கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பது எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மனித உரிமை பேரவை அமர்வுகளில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இதேவேளை, மனித உரிமை பேரவை தீர்மானம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# அமெரிக்க குடியுரிமை உடையவர்கள் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர்

## ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அமெரிக்க குடியுரிமை உடையவர்கள் இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ச ஏன் அமைதி காத்து வருகின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்க பொருட்களை நிராகரிக்குமாறு கோரும் அமைச்சர் விமல் வீரவன்ச அமைச்சர்களின் அமெரிக்க குடியுரிமைகளை இரத்து செய்யுமாறு ஏன் கோரவில்லை.

அமைச்சரவைக் கூட்டத்தில் அமெரிக்கா எதிர்ப்பு கருத்துக்கள் வெளியிடப்படவில்லை. மக்களிடம் மட்டும் அமைச்சர் வீர ஆவேசமாக அமெரிக்காவிற்கு எதிராக கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இந்த நிலையில் ஜெனீவா விவகாரம் தொடர்பில் தொடர்ந்தும் முட்டாள்தனமான கொள்கைகள் பின்பற்றப்படக் கூடாது. இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்திய பொருட்களையும் நிராகரிக்குமாறு விமல் வீரவன்ச கோருவாரா என திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். கோமாளித்தனமான கருத்துக்களை வெளியிடுவதனை தவிர்த்து பொறுப்புடன் செயற்பட அமைச்சர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் விவகாரம் அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்றுஉள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் பொருட்டு விடுமுறை பெற்றுள்ள அரச ஊழியர்கள் தொடர்ந்தும் சம்பளமற்ற விடுமுறையில் இருப்பவர்களாக கருதப்படுவர் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் நடைபெறவிருந்த புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் இதுவரை செல்லுபடியற்றதாகக்கப்படவில்லை என்பதால் வேட்பாளர்களாகப் போட்டியிடும் பொருட்டு விடுமுறை பெற்றுள்ள அரச ஊழியர்களுக்கான விசேட சந்தர்ப்பமாக கருதி அவர்கள் சம்பளமற்ற விடுமுறையில் சேவையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. (அ-2)

# 2012.03 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1622-வேர்ஜினியாவில் ஜேம்ஸ்டவுன் நகரில் அல்கோன்கியான் பழங்குடிகள் 347 ஆங்கில குடியேற்றவாசிகளைப் படுகொலை செய்தனர்.

★ 1829-கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன வரையறுத்தன.

★ 1873-புவேர்ட்டோ ரிக்கோவின் ஸ்பானிய தேசிய சபையில் அந்நாட்டில் அடிமைத் தொழிலை அழிக்க சட்டமியற்றப்பட்டது.

★ 1895-முதன் முதலாக லூமியேர சகோதரர்கள் அசையும் திரைப்படத்தை பிரத்தியேகமாகக் காண்பித்தார்கள்.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி லித்துவேனியாவிடம் இருந்து மெமெல் பிரதேசத்தைக் கைப்பற்றியது.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: பெலாரசின் காட்டின் நகர மக்கள் அனைவரும் நாசி ஆதிக்கவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.

★ 1945-அரபு கூட்டமைப்பு கெய்ரோவில் அமைக்கப்பட்டது.

★ 1960-ஆர்தர் ஷாவ்லொவ் மற்றும் சார்ள்ஸ் டவுன்ஸ் ஆகியோர் லேசருக்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்கள்.

★ 1965-இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது.

★ 1993-இன்டெல் நிறுவனம் முதல் பென்டியம் chip (80586) இனை அறிமுகம் செய்தது.

★ 1995-சோவியத் விண்வெளி வீரர் வலேரி பொல்யாக்கொவ் விண்ணில் 438 நாட்கள் கழித்து விட்டு பூமி திரும்பினார்.

★ 1997-ஹேல்-பொப் வால்வெள்ளி பூமிக்குக் கிட்டவாக வந்தது.

★ 2004-ஹமாஸ் இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான அஹமது யாசின் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

★ 2006-பாஸ்க் ஆயுதக்குழு ஈடிஏ காலவரையறையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தது.

### பிறப்புக்கள்

★ 1868-ரொபேர்ட் மில்லிக்கன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1953)

★ 1931-பேர்ட்டன் ரிக்டர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

★ 1627-பிலிப்பே டி ஒலிவேரா, யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கேய ஆளுநர்

★ 2005-ஜெமினி கணேசன், தமிழ்த் திரையுலக நடிகர் (பி.1920)

### சிறப்பு நாள்


★ உலக நீர் தினம்



★ 1952- இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் நினைவு தினம் (பி.1884)

# அதிசய உலகம்...

## பிரிட்டனில் 100 ஆண்டுகளுக்கு பழைமை வாய்ந்த காகித விமானம்



இங்கிலாந்து நாட்டின் தென் மேற்கு பகுதியில் டெவோன் நகரில் 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று இருக்கிறது. இதன் சீரமைப்பு பணியை சமீபத்தில் தொடங்கினார்கள்.

அப்போது அதன் கூரைப்பகுதியை இடித்தபோது அங்கு ஏராளமான காகிதத்தில் செய்த விமானங்கள் போன்றவை இருந்தன. அத்துடன் கல்மாவினால் செய்த பென்சில்களும் இருந்தன.

இவை 19 ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 20 ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்யப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் அவை அதிக சேதம் ஏதும் இன்றி இருப்பதால் அவை பிரத்தியேக காகிதத்தில் செயற்பட்டு இருக்கலாம் என்றும் ஆலயத்தில் ஒரு பகுதியில் கணித வகுப்புக்கள் நடத்தப்பட்டு இருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். இது குறித்து தீவிர ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.

## உலகில் மிக நீளமான நகங்களையுடைய பெண்



அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் உலகில் அதிக நீளமான கைவிரல் நகங்களைக் கொண்ட பெண்ணென கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரைச் சேர்ந்த கிறிஸ்டைன் வோல்டன் என்ற 45 வயதான இப்பெண்ணின் கைவிரல் நகங்களின் மொத்த நீளம் 19 அடி 9 அங்குலம்.

இவரது வலது கை நகங்களின் நீளம் 9அடி 7 அங்குலமும், இடது புறத்திலுள்ள நகங்களின் நீளம் 10 அடி 2அங்குல நீளமாகவும் காணப்படுகின்றது. தொழில் சார் பாடகரான கிறிஸ்டைன் தனது 18 ஆவது வயதில் நகங்களை வளர்ப்பதற்கு ஆரம்பித்துள்ளார்.

இவர் தனது நீண்ட நகங்களை வைத்துக் கொண்டே தன்னை அழகுபடுத்திக் கொள்ளுதல், வீட்டு வேலைகள் என்பவற்றையும் செய்துகொள்கின்றார். எனக்கு வீட்டை சுத்தம் செய்வது பிடிப்பதில்லை. ஆனாலும் அதை நான் செய்கின்றேன். மற்றும் எனது மேக்கப்பை சிறப்பாக செய்து கொள்வேன் என கிறிஸ்டைன் தெரிவித்துள்ளார். இவருக்கு முன் உலகிலே அதிக நீளமான கைவிரல் நகங்களைக் கொண்ட பெண்ணாக அமெரிக்காவின் சோல்ட் லேக் சிட்டியை சேர்ந்த லீ ரேமன்ட் என்பவர் இடம் பெற்றிருந்தார். அவரின் நகங்களின் நீளம் 28 அடியாகும். ஆனால் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற கார் விபத்தில் அவரின் நகங்கள் முறிந்தன.

## கின்னஸ் உலக சாதனை நிகழ்த்தியுள்ள பெருச்சாளி



பொதுவாக பெருச்சாளி என்றால் அது தொந்தரவு தரும் விலங்கு என்றே நினைக்க தோன்றும். ஆனால், சீமைப்பெருச்சாளி என்ற ஒரு வகையான பிராணியோ விஞ்ஞான ஆய்வுகளுக்கு பயன்படுத்தப் படுகிறது.

ஸ்கொட்லாந்து நாட்டில் மாகாரி என்பவர் செல்லமாக வளர்த்து வரும் இந்த வகை பெருச்சாளி நீண்ட தூரம் தாண்டி கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.

சுமார் 10 சென்ரி மீற்றர் நீளமே கொண்ட அது 30 சென்ரி மீற்றர் நீளத்தை தாண்டி இருக்கிறது. இந்த நிகழ்ச்சியை கின்னஸ் அதிகாரிகள் முன்னிலையில் கமராக்கள் மூலம் பதிவு செய்து இருக்கிறார்கள்.

## வெட்டிய மரத்துக்குள் வேற்றுக்கிரகவாசி உருவம்




கென்டாப்சன் (வயது-80) எனும் வயோதிபர் அண்மையில் ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு தனது தோட்டத்தில் உள்ள மரத்தினை வெட்டியபோது அதனுள் வேற்றுக்கிரகவாசியின் உருவம் தென்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த வயோதிபர் கென் டாப்சன் இது பற்றி குறிப்பிடுகையில், எனது தோட்டத்தில் வளர்ந்திருந்த இந்த மரத்தை வெட்ட வேண்டும் என நானும் எனது மனைவி ஜேனட்டும் பல வருடங்களாக திட்டமிட்டுவருகிறோம். இருந்தும் ஏதோ காரணங்களால் அது தடைப்பட்டுப்போனது.

தற்போது இந்த மரத்தை நான் வெட்டியதும் எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருக்கிறது.

காரணம் மரத்தின் நடுப்பகுதியில் வேற்றுக்கிரக வாசிகளின் முகசாயல் உருவம் காணப்படுகிறது. இதனைக்கண்ட எனது மனைவியும் பெரிதும் ஆச்சரியப்பட்டார். இம்மரத்தை நாம் விறகு எரிப்பதற்காகவே வெடினோம். ஆனால், இதில் வித்தியாசமான உருவம் காணப்படுவதால் நாம் எரிக்கபோவதில்லை என குறிப்பிட்டார்.

## 18 விதமான பணிகளை புரியும் விநோத றோபோ



தொழில்நுட்ப உலகில் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் றோபோக்கள் மென்மேலும் வளர்ச்சியுடைந்து வருகின்றன.

அதன் அடிப்படையில் 18 விதமான வரவேற்பு வேலைகளை புரியவல்ல றோபோ ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மிகவும் நேர்த்தியாக உருவாக்கப்படும் இந்த நவீன றோபோக்கள் கைபேசி அழைப்புக்களுக்கு விடையளித்தல், உங்களுடைய லக்கேஜ்களை கவ்விச் செல்லுதல் உட்பட 18 விதமான வேலைகளை செய்யவல்லது.

## ஒற்றைச் சில்லு துவிச்சக்கர வண்டி




அதிக தூர பயணத்தை மேற்கொள்வதற்கு பல்வேறு வண்டிகள் காணப்பட்ட போதிலும் நாளுக்கு நாள் அவற்றின் எளிமைத் தன்மை அதிகரிக்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்டையில் துவிச்சக்கர வண்டியை மிகவும் எளிமைப் படுத்தி ஒற்றைச்சில்லைக் கொண்ட நவீன வண்டி உருவாக்கப் பட்டுள்ளது.

இவ்வண்டியின் சில்லு 20 அங்குல விட்டத்தை கொண்ட சில்லைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளதுடன் அதன் கைபிடியானது 50 டிகிரி வரை திரும்பக்கூடியது.

மேலும் இது 13 பவுண்கள் எடையை கொண்டுள்ளது. இந்த நவீன ஒற்றைச்சில்லு வண்டியின் பெறுமதி 250 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# நடைமுறைச்சாத்தியமான திட்டமொன்றை முன்வைக்க இலங்கை அரசு தவறியுள்ளது

## கவலையளிக்கிறது என்கிறார் பிளேக்



(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கை தொடர்பில் இந்த வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஏற்றுக் கொள்ளத் தயார் நிலையில் உள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்க தூதுவர் எலீன் டொனஹியூ தெரிவித்துள்ளார்.

வோல்ட் ஸ்ரீட் ஊடகத்திற்கு அளித்த நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அடையாள வாக்கெடுப்பாக கருதாது அர்த்தமுள்ள முயற்சிகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கத்திறகு ஊக்கமளிப்பதற்கான காத்திரமான நடவடிக்கையாகவே இந்த நகர்வை கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இலங்கை அரசாங்கம் தோல்வி அடையலாம் என்ற அச்சம் நிலவுவதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.


இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட ஒரு சில பரிந்துரைகள் வரவேற்றகத்தக்கவை என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் றொபேர்ட் பிளேக் குறிப்பிட்டுள்ளார். நடைமுறை சாத்தியமான திட்டமொன்றை மேற்கொள்வதற்கு போதிய கால அவகாசம் இருந்த போதிலும் இலங்கை அதனை முன்னெடுக்க தவறியுள்ளமை கவலையளிப்பதாக பிளேக் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## மன்னாரில் சர்வமத கலந்துரையாடல்

மன்னார் சர்வோதயம் ஏற்பாடு செய்துள்ள சர்வமத கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை மன்னார் தாழ்வுபாடு வீதியில் அமைந்துள்ள ஞானோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்னார் சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், உதயமாகியிருக்கும் யுத்த பிற்கால சூழ்நிலையினுள் இனங்களின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டில் முரண்பாடுகளை தீர்த்து கொள்ளுவதின் முக்கியத்துவத்தினை வெளிக்கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-2)



இந்தியா, இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் தலைவி அருட் சகோதரி அகத்தா மேரி எழுதிய **மகிழ்ச்சியான வாழ்வு** எனும் நூலினை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் ஆளுநர் பணிமனையில் வைத்து கையளிப்பதை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# ஜனநாயக கட்சி என்று சொல்லக்கூடிய தகுதி த.தே.கூட்டமைப்புக்கே உண்டு

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

இலங்கையில் இன்று உள்ள 67 அரசியல் கட்சிகளிலும் ஜனநாயக கட்சியென்று சொல்லக்கூடிய தகுதி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டும் தான் உண்டு என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற உடல் திறனாய்வு இல்ல விளையாட்டுப்போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,தமிழ் தேசியக் கூட்டமைப்பை யார் வேண்டுமென்றாலும் விமர்சிக்கலாம். விரும்பினால் கூட்டமைப்பு வேட்பாளர்களின் கொடும்பாவியை கூட எரிக்கலாம். எங்களிடம் ஆயுதங்கள் இல்லை மக்கள் பலம் மட்டும்தான் இருக்கிறது.

எனவே,கூட்டமைப்பு பற்றி எவரும் எந்த இடத்திலும் விமர்சித்து பேசலாம். இதே போன்று சிங்கள் பெரும்பான்மை கட்சிகளும் அரசாங்கமும் கூட கூட்டமைப்பை விமர்சிப்பதற்கு உரிமையுண்டு.

ஆனால், தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினராகிய நான் காத்தான்குடிக்கு சென்று அமைச்சர் ஹிஸ்புல்லாவையோ அல்லது ஓட்டமாவடிக்கு சென்று சுபைரையோ அல்லது வேறு இடத்திற்கு சென்று அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களையோ விமர்சிக்க முடியாது.

எனவே, ஜனநாயக கட்சியென்று சொல்லக்கூடிய தகுதி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டும்தான் உண்டு. ஆனால் இலங்கையில் வேறு எந்த கட்சியையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதை போன்று விமர்சிப்பார்களேயானால் அவர்கள் இனம் தெரியாத நபர்களினால் தாக்கப்படலாம் அல்லது கடத்தப்படலாம் அல்லது கொலை செய்யப்படலாம் அல்லது வெளிநாட்டிற்கு தப்பியோட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம் என்றார். (அ-2)

# கரைச்சி உ.அ.அதிபர் பிரிவின் நடமாடும் சேவை நாளை மறுதினம்

(சிவநகர்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் யூ.என்.டி.பி. **(U.N.D.P)** நிறுவனமும் இணைந்து கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குமான நடமாடும் சேவையை நடத்தவுள்ளனர்.

இந்த நடமாடும் சேவை நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரையும் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சேவையில் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள், முதியோர் அடையாள அட்டை வழங்குதல், பொலிஸ் பதிவுகள், காலம் கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள், திருமணப் பதிவுகள் மற்றும் ஏனைய சேவைகள் நடைபெறவுள்ளதாகவும் இப்பிரிவு மக்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறும் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் ஜி.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(அ-254)

# தேசிய அருங்காட்சியக திருட்டு சம்பவம் அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தேசிய அருங்காட்சியகத்தில் விலை மதிப்பற்ற புராதன பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளது.

இதன் பொருட்டு கொழும்பு பல்கலைக் கழக கனணிப்பிரிவுடன் இணைந்து விசாரணை நடத்துமாறு கொழும்பு பிரதம நீதவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்திற்கு நேற்றைய தினம் விளக்கமளித்ததன் பின்னரே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கண்காணிப்பு கமரா கட்டமைப்பு ஒன்று பொருத்தப்பட்டிருந்ததுடன் கடந்த மாதம் நிலவிய மின்னல் தாக்கத்துடனான கால நிலை காரணமாக அந்த கட்டமைப்பு பழுதடைந்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்தது.

இதேவேளை, ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் தேசிய அருங்காட்சியகத்தில் களவாடப்பட்ட பொருட்கள் தொடர்பாகவும் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.தங்க முலாம் பூசப்பட்ட 10 வாள்கள், 18 வெள்ளி மோதிரங்கள், 93 தங்க நாணயங்கள், 9 ஈய நாணயங்கள் ஆகியன தேசிய அருங்காட்சியகத்தில் களவாடப்பட்டன. (அ-2)

# மனிதனுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய 174 வகையான கிருமிநாசினிகள் இறக்குமதி

## அமைச்சர் சந்திரசேகர தெரிவிப்பு

மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய 174 வகையான கிருமிநாசினிகள் இறக்குமதி செய்யப்படுவதாக கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அதிக பெறுமானங்களையுடைய ஆக்கக்கூறுகளைக் கொண்ட கிருமிநாசினிகள் இறக்குமதி செய்யப்படுவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது ஐ.தே.க.எம்.பி.தயாசிறி ஜயசேகர எழுப்பிய எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கூறியதாவது, 182 கம்பனிகள் இலங்கையில் கிருமிநாசினிகளை இறக்குமதி செய்கின்றன. இறக்குமதி செய்யப்படும் சகல கிருமிநாசினிகளும் மனிதனுக்கும் சூழலுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை.

இலங்கையில் பயன்படுத்தப்படும் சகல கிருமி நாசினிகளிலும் காணப்படக்கூடிய ஆக்கக்கூறுகளையும் அவற்றின் உச்ச வரையறையும் குறிப்பிடுவது சாத்தியமல்ல. ஆகையால் ஐந்து வகையான கிருமிநாசினிகளில் காணப்படும் ஆக்கக்கூறுகளின் உச்ச வரையறை மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# புதுமுறிப்புக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்


(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புதுமுறிப்புக் குளத்தின் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளது. எனவே, இதற்கு முன்னோடியாக இக் குளத்தின் கீழ் நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் புதுமுறிப்பு, சிவநகர், ஜெயந்தி நகர் விவசாயிகள் தமது சிறுபோக நெற்பயிர்ச் செய்கை விதைப்பினை கமக்கார அமைப்பின் அனுசரணையுடன் மிக வேகமாக செய்து வருகின்றனர்.

மேற்படி விதைப்பானது அண்மையில் நடைபெற்ற குளத்தின் கீழான பயிர்ச் செய்கைக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக காலம் தாழ்த்தாமல் முன்கூட்டியே விதைப்பினை மேற்கொள்வதன் மூலம் அறுவடையினை துரிதமாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே, அறுவடையினை துரிதப்படுத்துவதன் மூலம் குளத்து வேலையினை குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ள கூடியதாக இருக்கும் என்பதனை கூட்டத்தில் பங்குபற்றி இருந்த அலுவலர்கள், திணைக்களத் தலைவர்கள் தெரியப்படுத்தி இருந்தமையே இச் சிறுபோக பயிர்ச்செய்கை துரித கதியில் மேற்கொள்ளப்பட்டமைக்கு காரணம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-7-254)

# வாழ்வில் எது மதிப்பு மிக்கது ?



ஆன்மீகம் 13

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

பொருள்களுக்கு மதிப்புக்கள் கூடலாம், குறையலாம் ஆனால், இந்த அண்டவெளி ஒருபோதும் தன் மதிப்பை இழக்காது. இதைப்பற்றி நினைத்துப்பார். நீ ஒரு பானை வாங்கும்போது எதை மதிப்பீடு செய்தாய்? அல்லது உதாரணமாக ஒரு கோப்பை வாங்கும்போது, அதிலுள்ள வெற்றிடத்திற்கு பணம் கொடுத்தாயா? இல்லை அதன் புறச்சுற்று வடிவத்திற்கா? நீ இதை எப்போ தாவது நினைத்துப் பார்த்தது உண்டா? நீ உன் சமயலறைக்காக, ஒரு சமையல் பாத்திரம் வாங்கும் போது எதை மதிப்பீடு செய்கிறாய். அந்தப் பண்டத்திற்கா அல்லது அதிலுள்ள வெற்றிடத்திற்கா? உன் கையில் ஒரு களிமண் கட்டி இருந்தால், அதற்கு விலை மதிப்பு உண்டா? ஆனால், இதே களிமன் கோப்பையாக உருப் பெறும் போது அதிலுள்ள வெற்றிடத்திற்கு மதிப்புக் கொடுக்கிறாய்! அதன் மதிப்பு ஒருபோதும் குறையாது. காலி இடம் தான் பயன்படுகின்றது. எவர் சில்வரோ, சைனா களிமண்ணோ அல்லது வெள்ளியோ அந்தகோப்பைகளுக்குள் உள்ள காலி இடத்திற்குத் தான் உபயோகம் அதற்குத்தான் உண்மையான மதிப்பு. அந்த கொள் இடம் ஒருபோதும் தன் மதிப்பை இழப்பதில்லை.

**ஆகவே எது மதிப்பு மிக்கது?**

எவையெல்லாம் மதிப்பு மிக்கது என்று நீ நினைக்கிறாயோ, அவையெல்லாம் அதிக விலையுடையதாகவும் மிகக் குறைவான பயன்பாடு உடையதாகவும் உள்ளன. அவை குறைந்த அளவே உபயோகப்படுகின்றன. ஒன்றை மக்கள், எந்த அடிப்படையில் மதிப்பீடு செய்கிறார்கள்? அதன் உபயோகத்தை வைத்தா? அல்லது அது அரிதாகத்தான் கிடைப்பது என்பதை வைத்தா? ஏதாவது மிக அதிக அளவில் கிடைத்தால் நீ அதை மதிப்பதில்லை. நீ எதற்காக தங்கத்திற்கும் வைரத்திற்கும் அரிதான கற்களுக்கும் அரிய மதிப்பு தருகிறாய்? ஏனென்றால், அவை சுலபமாக கிடைப்பதில்லை. வீதிகளிளெல்லாம் வைரங்கள் இறைந்து கிடந்தால் அல்லது மலைகள் முழுவதும் வைரங்கள் இருந்தால் யார் வைரத்திற்கு மதிப்பு தருவார்?



**ஆனால் எது அதிக மதிப்புள்ளது?**

எதற்கு அதிக உபயோகம் உள்ளதோ அதுதான். உதாரணமாக, இரும்பையும் தங்கத்தையும் எடுத்துக் கொள்ளலாம். தங்கத்திற்குவிலை மதிப்பு அதிகம், இரும்புக்குத் தேவையும் பயனும் அதிகம். உயிர் வாழ்வதற்கு உன் உடம்பிற்கு ஒவ்வொரு நொடியும் இரும்புச் சத்து தேவை. இல்லையென்றால் நீ தளர்ச்சியடைந்து போவாய். ஆகவே எதற்கு மதிப்பு அதிகம் இரும்பிற்கா? தங்கத் திற்கா?

இரும்புக்குத் தான் மதிப்பு அதிகம். ஏனெனில், அது அதிக உபயோகமுள்ளது.எதெல்லாம் அதிக பயனுள்ளதோ உன் வாழ்க்கைக்கு அதிகம் மதிப்புள்ளதோ-அவையெல்லாம் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. வாழ்க்கைக்கு தண்ணீர் மிக அவசியமானது.நீர், காற்று போன்று வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுபவை எல்லாம் அபரிமிதமாகக் கிடைக்கின்றன.

**ஆகவே எதற்கு அதிகம் மதிப்பு தங்கத்திற்கா? இரும்பிற்கா?**

தங்கம் இல்லாமல் நீ வாழலாம் ஆனால், உன்னால் இரும்பில்லாமல் வாழமுடியாது. இந்த உலகில் தவறான மதிப்பீட்டு முறை வழக்கில் உள்ளது. உபயோகமற்ற பொருள்களுக்கு அதிகவிலை மதிப்பு தருகிறோம்.

ஒரு கல் துணுக்கு (சிவப்பு, மஞ்சள், பச்சை) ஏதோவொன்று மிக அரிதாகக் கிடைக்கின்றது. எனவே அது எவ்வளவு அதிக விலையுள்ளதானாலும், அதை நாம் விரும்புகிறோம். நம் சம்பாத்தியம் முழுவதையும் அதில் போடுகிறோம். அந்த வைரம், வைடூரியம் அல்லது கோமேதகத்தை வாங்குவதற்காக மனிதர்கள் எப்போதும் மாசு படிந்த காற்றைச் சுவாசிக்கிறார்கள். இரவு பகல் பாராது வேலை செய்கிறார்கள். நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள்.பிறகு அதை நகையில் போடுகிறார்கள்.இது சுத்த முட்டாள் தனம் இல்லையா? எது அதிக மதிப்புள்ளதோ-உடல் ஆரோக்கியம்- அதை அழித்துக் கொள்கிறாய். நீ சுத்தமான நல்ல காற்றைச் சுவாசிப் பதில்லை. ஆனால், வைரங்கள் வாங்குகிறாய் வேறு என்னதான் வாங்கவில்லை. இது அறிவில்லாத குறையால் நடப்பது!


இரண்டு விதமான ஞானம் தேடுபவர்கள், சாதகர்கள் இருக்கிறார்கள்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 13

## ரேகைகளும் கிரகங்களும்

சக்தி



ஒருவழியில் திரும்பக்கூடியவர்கள் ஆனால், கீழ்ப்டிபவர்களன்று. தகாத காரியத்தை தகர்ப்பதற்கு விரிவாக விடயத்தை எடுத்துச் சொல்வார்கள் பொதுவாகச் சனி ஆதிக்கம் உள்ளோருக்கு விவாகம் நடப்பது சந்தேகமே. அவர்கள் சங்கீதப்பிரியர்கள். அதிக கஞ்சத்தனம் உடையவர்கள். பணத்தைச் சேமிப்பதிலேயே கருத்தாயிருப்பர். பொழுதுபோக்குக்கு அவர்களுக்குப் புஸ்தகங்களே துணை. தங்கள் அபிப்பிராயத்தை மற்றவர்கள் எதிர்க்கச் சம்மதியார்கள். சோதிடம், ரேகை சாஸ்திரங்களில் இச்சை இருப்பினும் தம்முடைய எதிர்கலத்தைக் கவனியார்கள். இதர கிரகங்களின் ஆதரவால், மிகப் பெரு நோக்குள்ள பிரபுக்களாயும் வாழ்வார்கள். இவர்களைச்சார்ந்துள்ள குடும்பத்தவர்களும் பந்து மித்திரர்களும் இவர்களுடைய செல்வாக்கால், சௌகரியமாயிருப்பர். ஆனால், தாங்கள் மாத்திரம் நிர்க்கதியான எண்ணத்துடன் இருப்பார்கள். கஷ்டப்பட்டு வேலை செய்து களைப்புற்றபோது தங்கள் வருத்தத்தை மற்றவர்களிடம் சொல்லி ஆறுதலடைவார்கள். ஒருவர் உள்ளங்கை மட்டத்திற்கு மேல் விரல்கள் உப்பலாயிருந்தால், மானசீகப் பிரவிர்தியே அவருக்கு அதிகமாகும். படிப்பதிலும் நூல்கள் எழுதி வெளியிடுவதிலும் உற்சாகமுள்ளவராயிருப்பர். கலைஞானியாகவும் விளங்குவர்.

சனி ஆதிக்கம் உள்ளவர், தேகம் கை எல்லாம் சற்று மஞ்சள் நிறம் கலந்திருக்கும்சிலருக்கும் குறிப்பிட்ட விடங்களில் வெண்மை தோன்றி விகாரப்படுத்துவதுமுண்டு.அபாரமான பகுத்தறிவு உள்ளவர்களாதலால், தங்களை மற்றவர்களினின்றும் வேறுபடுத்தி விலக்கிக் கொள்வர்கள். சிலருக்கு சிவந்த நிறம் கலந்திருக்கும். இந்த நிறமுடைய சனி ஆதிக்கம் உடைவர் திடமான ஆரோக்கியத்தோடும் ஊக்கத்தோடும் வாழ்வார். இவருக்குச் சந்தேகமும் ஆகாத காரியமும் கிடையாது.

இனி அங்குலாஸ்தியைக் கவனியுங்கள். ஒருவரது விரலில் முதல் அங்குலாஸ்தி மற்ற இரண்டையும் விட நீளமாயிருந்தால் அவரது விவகாரங்கள் மனோரம்யமாக இருக்கும். நீண்ட யோசனையிலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் இருப்பர். இரண்டாம் அங்குலாஸ்தி நீளமாயிருந்தால் விவசாயம், இரசாயனம், தேச சரித்திர ஆராய்ச்சிகளில் பழக்கமுள்ளவராயிருப்பார். மூன்றாம் அங்கலாஸ்தி நீளமாயியிருந்தால் முன்னேற்றத்தைக் குறிக்கும். சனி ஆதிக்கம் உள்ளவர்கள் பொதுவாக் புத்தியை புலன் வழி செலுத்துபவரல்லராதலால் அவர் கஞ்சத்தனத்தால் செட்டுக்காரராகி, செல்வத்தைச் சேர்த்து வணங்குபவரெனச் சொல்ல வேண்டும். மூன்றாம் அங்குலாஸ்தியின் உற்பத்தி இடுப்பைப்போல ஒடுங்கியிருந்தால், குறிப்பான விடயத்திற்கு அவர், இடைவிடாது ஆராய்ச்சி செய்து வருவதைக்குறிக்கும்.

சனி ஆதிக்கமுள்ளவர் கையும் நகமும் சதுரமமாயிருந்தால், இரசாயனத்தில் புதிய கலப்பையும் டாக்டராயிருப்பின் புதுமுறைச் சிகிச்சையையும் கணக்காளராயிருப்பின் கணக்கைக் கையாள்வதில் நூதன வழியையும் அவர் கண்டு பிடிப்பார்.

ஒருவர் கையில்மற்றவிரல்களை விட இரண்டாவது விரல் குறுகியிருந்தால், அவர்போதுமான சக்தியற்று மற்றவர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பார்.

சனி ஆதிக்கமுள்ளவர் பலவீனமாய் இருப்பதாய் அறிய நேரிடும் போது விரலின் இருபக்கமுள்ள கிரகங்களின் நிலையைச் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். எந்தக் கிரகம் ஆதரவாயிருக்கின்றதோ அதை அனுசரித்தே பலன் அறியத் தக்கது.

(தொடரும்)

# ஈழத்தமிழர் இன்னல் தீர்க்க ஒன்றுபடுவோம்



அன்பிற்கினிய பாரதப் பிரதமர் மாண்புமிகுமன்மோகன்சிங்அவர்களுக்கு.. வணக்கம்!

இந்திய ஜனநாயகம் இந்த எளியவனுக்கும் வழங்கியிருக்கும் உரிமையின் அடிப்படையில் உங்களுக்கு இந்த முடங்கலின் மூலம், என்னை உறங்கவிடாத உணர்வுகளை வெளிப்படுத்த விளைகிறேன். தமிழகத்தில் உள்ளவர்கள் தலைசிறந்த பண்பாட்டுக்கு உரியவர்கள்; அன்பு சார்ந்து, அமைதி காத்து, இந்திய ஒருமைப்பாட்டை இதயங்களில் இருத்தி, சக மனிதர்களை உடன் பிறந்த சகோதரர்களாகப் பாவித்து வாழ்ப்பழகியவர்கள் .ஒன்றுபடுவது ஞானம், வேறுபடுவது அஞ்ஞானம் என்ற வாழ்வியல் விழுமியத்தை, 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற வேத வாசகத்தின் மூலம் உலகுக்கு உணர்த்தியவர்கள். இந்தியாவின் ஓர் அங்கமாக இவர்கள் இருப்பதே இந்த மண்ணின் மகத்தான பெருமை என்பதை மத்திய அரசுக்குத் தலைமை ஏற்றிருக்கும் நீங்கள் முதலில் உணர வேண்டும்.

எங்கள் போற்றுதலுக்குரிய பெரியார், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று குரல் கொடுத்தார். நாங்கள் செவிசாய்க்கவில்லை. அன்பிற்கினிய அண்ணா, 'திண்ணையில் அமர்ந்தாவது திராவிட நாடு கேட்பேன்' என்று மேடை தோறும் முழங்கினார். அவரை நாங்கள் ஆட்சியில் அமர்த்தி அழகு பார்த்தோம். ஆனால், அவருடைய பிரிவினைக் கோரிக்கையை நிராகரித்தோம். சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், 'சுய நிர்ணய உரிமையுடன் கூடிய தமிழரசு காண்போம்' என்று எங்கள் கைகளைப் பிடித்து வேண்டினார். தேசிய மயக்கத்தில் இருக்கும் நாங்கள் அவரைத் திரும்பிப் பார்க்கவும் மறுத்தோம். இன்றும், 'தமிழ்த் தேசியம்' பேசுபவர்களை நாங்கள் பெரிதாக ஆதரித்து விடுவது இல்லை.

எதிர்த்து போர்க்கொடி பிடிக்கவில்லை.சுதந்திர இந்தியாவில் மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது, தெலுங்கர்கள் 'விசால ஆந்திரா' வேண்டும் என்றனர். கன்னடர் 'சம்யுக்த கர்நாடகா' என்று குரல் கொடுத்தனர். மலையாளிகள் 'ஐக்கிய கேரளா' என்ற கோரிக்கை வைத்தனர். இந்தியராய் இருக்க விரும்பிய நாங்களோ அகன்ற தமிழகத்துக்கு ஆசைப்படவில்லை. சித்தூர், புத்தூர், திருப்பதி, திருக்காளத்தி ஆகிய தமிழர் பகுதிகளை தெலுங்கருக்குத் தாரை வார்த்தோம்.மாதேசுவரன் மலை முதல் நந்திமலை வரை வாழ்ந்த நிலப்பரப்பையும் பெங்களூரு முதல் தங்கவயல் வரைசொந்தமான தமிழர் மண்ணையும் எங்கள் கன்னட சகோதரர்களுக்கு சீதனமாக தந்து மகிழ்ந்தோம்.ஏராளமான ஆறுகள் பெருக்கெடுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையின் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை 'குளமாவது? மேடாவது? எல்லாம் இந்தியாவில் தானே இருக்கின்றன' என்று தேசியத் தத்துவம் பேசி மலையாளிகளுக்கு 'மொய்' எழுதிவிட்டு இன்று முல்லை- பெரியாறு அணைக்காக அழுது கொண்டுஇருக்கிறோம் பிரதமரே... இவ்வளவு இழப்புகளும் எதற்காக? இந்தியராய் தமிழர் இருப்பதற்காக!

பிரிட்டன் பிடியில் இருந்து இலங்கை விடுபட்டு 1948 பெப்ரவரியில் சுதந்திரம் அடைந்து ஆறு மாதங்கள்ஆவதற்கு முன்பே காடாய், மேடாய், களர்நிலமாய் இருந்த மத்திய மேட்டு நிலத்தை இறப்பர், கோப்பி, தேயிலை தோட்டங்களக மாற்றி இலங்கையின் பொருளாதார வளத்தை பெருக்குவதற்கு தங்கள் வியர்வையை, இரத்தத்தை சிந்திய எங்கள் தாயக தமிழரின் குடியுரிமையை பறித்து, ஆதரவற்ற அனாதைகளாக்க முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க மூன்று மசோதாக்களை இலங்கை நாடாளுமன்ற சட்டமாக்க முயன்றபோது நேருவின் மத்திய அரசு மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது.மலையகத் தமிழர்களின் உரிமை காக்க 1939 இல் 'இலங்கை இந்தியன் காங்கிரஸ்' என்ற அமைப்பை ஆரம்பித்து வைத்ததே நேரு தான் என்பது எவ்வளவு பெரியஇயற்கை முரண்!

விடுதலை பெறுவதற்கு முன் இலங்கை நாடாளுமன்றத்தில் எட்டு உறுப்பினர்களையும் 'செனட்' எனப்படும் மூத்தோர் அவையில் இரண்டு உறுப்பினர்களையும் பெற்றிருந்த இந்தியத் தமிழர்கள், ஒரு நொடியில் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். இந்த அநீதியை எதிர்க்காமல் அவர்களை அகதிகளாக்க 1964 இல் சாஸ்திரி சிறிமாவோ ஒப்பந்தத்தை இந்திய அரசு அங்கீகரித்தது. ஐந்து இலட்சம் தமிழர்களை திரும்ப அழைத்து நடுத்தெருவில் நிறுத்தி நிலைகுலையச் செய்த போதும் நாங்கள் ஈர விழிகளுடன் பார்த்துக் கொண்டு தான் இருந்தோம், 'இந்தியர்' என்ற மகுடத்தை இழந்து விடாமல் இருக்க!

தமிழகத்தின் தென் பரப்பில் உள்ள இராமேஸ்வரத்தில் இருந்து17 கி.மீ தூரத்தில் உள்ள கச்சதீவு எங்களுக்கு சொந்த மானது. பல நூற்றாண்டுகளாக ஒரு தேசிய இனத்துக்கு சொந்தமான நிலப்ப ரப்பை அந்த இனத்தின் அனுமதி இன்றி பக்கத்து நாட்டுக்கு பரிசாக வழங்கும் பாதக செயலை எந்த



அரசும் செய்யத் துணியாது. ஆனால், இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தன்னுடைய சீதனப் பொருளை அடுத்தவருக்கு தருவது போல் திருமதி பண்டார நாயக்காவிடம் 1974 இல் கச்சதீவை ஒப்படைத்தது எந்த வகையில் நியாயம்?

காங்கிரஸை 1969 இல் தன் சுயநலத்துக்காக இரண்டாக பிளந்த இந்திராகாந்தியின் குடும்ப அரசியலை, அன்று தொட்டு எதிர்த்த கூட்டத்தில் நான் ஒருவன். இந்திராகாந்தியின் எந்த அரசியல் நிலைப்பாட்டையும் ஏற்றவன் இல்லை நான். உலகின் மீன்வளம் நிறைந்த பகுதிகளில் ஒன்றான கச்சதீவை நேருவின் மகள் சட்ட வரம்பை மீறி இலங்கையிடம் சமர்ப்பித்த போதும் எதிர்ப்புக் குரல் எழுப்பியதோடு நிறுத்திக் கொண்டோம் ஏன்..? இந்தியராய் இருப்புதற்கு!

இந்தியப் பிரதமரே... உலகில் உள்ள கடற்கரைநாடுகள் அனைத்திலும் மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பது உண்டு. எல்லை தாண்டி மீன் பிடித்தார்கள் என்று சொல்லி எந்த நாட்டுக் கடற்படையும் மீனவரைச் சுடுவது இல்லை. நம் பகை நாடான பாகிஸ்தான் கூட, குஜராத்தில் உள்ள சௌராஷ்டிராப் பகுதியில் மீன்பிடிக்கும் இந்தியரை எல்லை தாண்டியதாக ஒரு முறையும் சுட்டது இல்லை. ஒருவரையும் கொன்றதும் இல்லை. உலகிலேயே மீனவரைச் சுட்டுக் கொல்லும் ஈனச் செயலை இலங்கை மட்டும்தான் இன்று வரை செய்து வருகிறது. ஆயிரக்கணக்கான தமிழகத்து மீனவரை அதாவது நம் 'இந்திய' மீனவரை ஊனப்படுத்தி, 400 இற்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்களின் அதாவது 'இந்திய' மீனவர்களின் உயிர் குடித்த இலங்கை அரசுக்கு வெண்சாமரம் வீசும் வேலையில் உங்கள் அரசு ஆனந்தம் அடைவதைப் பார்த்தும் நாங்கள் ஆத்திரப்படவில்லை. 'தேசிய உணர்வு' எங்களைத் தேம்பி அழச் செய்வதோடு தடுத்து விடுகிறது; எங்கள் முதல்வர்களை உங்களுக்குக் கடிதம் எழுதுவதோடு நிறுத்தி விடுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எங்கள் உயர்தமிழுக்குவட்டாரமொழிக்குரியதகுதியைத் தான் தந்திருக்கிறது. 'இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட மொழியே உயர்தனிச் செம்மொழி' என்று மொழியியல் அறிஞர்கள் வைத் திருக்கும் வரையறையைப் புறந்தள்ளி, எங்கள் தமிழோடு கன்னடமும் தெலுங்கும் கூட 'உயர் தனிச் செம்மொழிகள்' என்று அங்கீகரித்திருக்கும் உங்கள் 'அரசியல்' நியாயமானது என்று எந்த நேர்மையாளரும் ஏற்க முடியாது.

இந்தியைப் போன்று தமிழும் தேசத்தின் ஆட்சி மொழி அந்தஸ்தைப் பெற வேண்டும் என்று மதுரை ஒத்தக்கடை வீதியில் நாங்கள் ஓங்கிக் குரல் கொடுப்பதற்கு மேல் எதையும் செய்ய மாட் டோம். எங்களுக்குத் தமிழா முக்கியம்? 'இந்தியர்' என்ற அடையாளம் அல்லவா அதி முக்கியம்! போகட்டும். இந்தியராய் இருப்ப தற்கு இழக்கக் கூடாதவற்றை எல் லாம் இழந்து விட்டோம் எங்கள் இனம் ஈழத்தில் அழிவ தற்கு இலங்கை அரக்கரிடம் ஆயு தம் அளித்தீர்களே.. அதைப் பொறுத்தோம். முள்ளிவாய்க்காலில் ஒரே நாளில் 40 ஆயிரம் தமிழர் பலியிடப்பட்ட போதும் இலங்கை ஜனாதிபதிக்கு டில்லியில் 'இரத்தினக் கம்பள வரவேற்பு' வழங்கி இரசித்தீர்களே... அதையும் பொறுத்தோம். முள்வேலிக் கம்பிகளுக்கிடையில் மூன்று இலட்சம் தமிழர் முடக்கப்பட்ட போதும் இலங்கை அரக்க அரசுக்கு 1000 கோடி ரூபாய் தருவதாக அறிவித்துக் கொலை காரக் கூட்டத்தையே மறுவாழ்வு தரும்படி வேண்டி நின்றீர்களே... அதையும் பொறுத்தோம்.

'உயிரினும் சிறந்ததன்று கற்பு' என்று போற்றி வாழ்ந்த எம் குலப்பெண்களைச் வன்புணர்ச்சி செய்து வதைத்த செய்தி வந்ததே... அதையும் பொறுத்தோம். பிரிட்டனின் 4 ஆவது சனலில், எம் இனத்தவரை எட்டி உதைத்து, கைகளைப் பின்னால் கட்டி, கண்களைத் துணியில் மறைத்துச் சுட்டு வீழ்த்திய மனித குல அநாகரிகத்தைக் கண்டபோதும் பொறுத்துக் கொண்டோம். இன்னமும் பொறுப்பதற்கு என்ன இருக்கிறது பிரதமரே?

தமிழினப் படுகொலையைத் திட்டமிட்டு நடத்தியவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று 24 நாடுகளின் ஆதரவோடு ஐ.நா வில் சுவிட்சர்லாந்து கொண்டு வந்த தீர்மா னத்தை முறியடிக்க இந்திய அரசு முனைந் தது நியாயந்தானா? இன்று ஜெனீவாவில் மனித உரிமைகள் அமைப்பின் முன் இல ங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த அமெரிக்கா கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை உங்கள் அரசு ஆதரிக்கத் தயங்குவது நாகரிக அரசின் நல்ல அடையாளமா? அபிசீனியா மீது ஆக்கிரமிப்பு நடத்தியதற்காக, உரோமாபுரியில் விமானத்தில் வீற்றிருந்த நேருவை விருந்தோம்ப வருந்தி அழைத்த முசோலினியைச் சந்திக்க மறுத்த ஆசியஜோதி அமர்ந்து ஆட்சி நடத்திய நாற்காலியில் நீங்கள் அமர்ந்து இருப்பதை மறந்து விட்டீர்களா? ஈழப்போரில் இலங்கை இராணுவம் நிகழ்த்திய மனித உரிமை மீறல் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இலங்கை அரசின் மீது நடவடிக்கை எடுக்க மற்ற உலக நாடுகளுடன் சேர்ந்து பிரிட்டன் குரல் கொடுக்கும் என்றும் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்தது உங்கள் செவிகளில் சேரவில்லையா? 'சனல் 4 ஒளிப்பதிவைக் கண்டு உறைந்து போய்விட்டேன்' என்று பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் சொன்னது உங்கள் சிந்தையில் பதியவில்லையா? அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கண்டனம் உங்கள் கண்களில் படவில்லையா?

மாண்புமிகு பிரதமரே... உங்கள் மனச் சான்றோடு கொஞ்சம் பேசிப் பாருங்கள். காஷ்மீர் தீவிரவாதிகளை அழிக்க இந்திய இராணுவம் என்றாவது விமானத் தாக்குதல் நடத்தியது உண்டா? 'ஈழத் தமிழரும் இலங்கை மக்களே' என்று சொல்லும் இலங்கை அரசு சொந்த மக்கள் மீதே வான் வழியாக இரசாயனக் குண்டுகளைப் பொழிந்து பல்லாயிரம் வரைப் படுகொலை செய்தது மனித உரிமை மீறல் இல்லையா? இன அழிப்பு இல்லையா? சர்வதேசப் போர் விதிமீறல் இல்லையா? எந்த நாட்டுக்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவருவது இந்திய மரபு இல்லை என்று சொல்லி இந்த மண்ணின் பண்பாட்டுப் பெருமையைப் படுகுழியில் தள்ள எப்படி உங்கள் அரசுக்கு மனம் வந்தது?

'தமிழன் தன்னை இந்தியன் என்று கருதியதால், தமிழ்நாட்டையும் தமிழர் வீரத்தையும் கலையையும் நாகரிகத்தையும் மறந்தான்' என்றார் பெரியார். உண்மைதான் முல்லை - பெரியாறு, காவிரி, பாலாறு என்று எந்தப் பிரச்சினையிலும் தமிழர் உரிமை நிலைத்திட 'இந்தியன்' என்ற உணர்வு இதுவரை உதவவில்லை. 'ஆட்சிக்கு முட்டுக் கொடுத்தால், மம்தாவுக்கு அள்ளிக் கொடுப்போம். சாமரம் வீசவில்லை என்றால், 'தானே' புயல் அழிவுக்கும் கிள்ளியே கொடுப்போம்' என்று ஓரவஞ் சனையோடு நடக்கும் நியாயமற்ற உங்கள் அரசு எங்களுக்கு எதற்கு?

கட்சி ரீதியாக நாங்கள் பிரிந்துகிடந்தது வரை எங்களை உங்களால் எளிதில் புறக்கணிக்க முடிந்தது. இன்று உலகின் எட்டாவது அதிசயமாய் முதல்வர் ஜெயலில்தாவும் கலைஞரும் காங்கிரஸ் உட்பட அனைத்துக் கட்சிகளும் ஈழத் தமிழரின் இன்னல் தீர்க்க ஒன்றுபட்டு நிற்கின்றனர். இலங்கைக்கு ஆதரவாக இந்திய அரசு இனி இருந்தால் தமிழ் நிலத்தில் காங்கிரஸ் கல்லறைக்குச் சென்று விடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பிரதமர் என்ற சரித்திரம் படைத்த உங்களுக்கு அது குறித்துக் கவலைப்பட நேரம் இருக்காது. ஆனால், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கவலைப்பட்டாக வேண்டும். இந்திய அரசு, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து எங்களை முதலில் தமிழராகவும் முடிவில் இந்தியராகவும் இருக்கச் செய்ய வேண்டும் என்று உங்களை அன்புடன் வேண்டுகிறேன். உங்கள் நம்பிக்கைக்குரிய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தமிழில் தீட்டப்பட்ட என் கடிதத்தின் சாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உங்களுக்குச் சொல்வார் என்று நம்புகிறேன். இன உணர்வை மதித்து என்னை இந்தியனாக இருக்க விடுவீர்கள் என்று ஆழ்ந்த நம்பிக்கையுடன்,

**தமிழருவி மணியன்**

# உலகில் முதல் தர நகரமாக கொழும்பை மாற்றுவதே அரசாங்கத்தின் இலக்காகும்

## கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

உலக தரம் வாய்ந்த முதல் தர நகரங்களில் ஒன்றாக கொழும்பை மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். அதேபோன்று யாழ்ப்பாணம், கண்டி, காலி, அம்பாந்தோட்டை ஆகிய நகரங்களும் அபிவிருத்தி செய்யப்படும் என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேபோன்று அரசாங்க அலுவலகங்கள் மற்றும் கட்டடங்கள் கொழும்புக்கு வெளியே உள்ள நிர்வாக தலைநகரமான ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டைக்கு கட்டம் கட்டமாக கொண்டு செல்லப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். தெற்காசிய பிராந்திய நகரமயமாக்கல் தொடர்பான அறிவுப் பரிமாற்றம், தெற்காசிய நாடுகளின் நகர்ப்புற புத்துணர்வு என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இரண்டு நாள் செயலமர்வு நேற்று முன்தினம் சினமன் கிரேண்ட் ஹோட்டலில் ஆரம்பமானது.

உலக வங்கி ஏற்பாடு செய்த இந்த செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் உரையாற்றுகையில், கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த பயங்கரவாத பிரச்சினையிலிருந்து நாடு மீண்டு மூன்று வருடங்களே கடந்துள்ளன.

யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார சீரழிவுக்கு பின் காணப்பட்ட பொருளாதார ஸ்தம்பித நிலைமையை தற்போது ஏற்பட்டுள்ள அமைதி சூழலில் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று பெருந்தொகையான முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காண்பித்து வருகின்றனர். பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வரும் அதே சமயம் இலங்கையின் நகர அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளது.

(அ-2)

# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்ய நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்யும் வேலைத்திட்டத்தினை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா அலுவலகம் கடந்த திங்கட்கிழமையில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அதிகாரசபையின் வவுனியா இணைப்பாளர் செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை துஷ்பிரயோகங்கள், விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு பாடசாலை சேவை வாகனங்களை பதிவு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் அவ்வனுமதிப்பத்திரம் இல்லாத வாகனங்களை போக்குவரத்து பொலிஸார் மூலமாக கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாகனப் பதிவில் முச்சக்கரவண்டிகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

# கட்டுநாயக்க விமான நிலைய வசதிகள் 2012 இறுதிப் பகுதியில் மேம்படுத்தப்படும்

## தினேஷ் பதில்; அஸ்வரின் கேள்வியால் சிரிப்பொலி

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 2009 ஆம் மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஒரு கோடியே 7 இலட்சத்து 61 ஆயிரத்து 488 பயணிகள் கையாளப்பட்டுள்ளனர் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாய் மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது ஆளும் கட்சியின் எம்.பியான ஏ.எச்.எம். அஸ்வர் எழுப்பியிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் எம்.பியான அஸ்வர் தனது கேள்வியில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கையாளப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை, விமான நிலையத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளதா? வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எவை உள்ளிட்ட கேள்விகளை கேட்டிருந்தார்.

பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன 2009 ஆம் ஆண்டு 48 இலட்சத்து 18 ஆயிரத்து 244 பயணிகளும் 2010 ஆம் ஆண்டு 59 இலட்சத்து 43 ஆயிரத்து 214 பயணிகளும் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக கையாளப்பட்டனர்.

விமான நிலையத்தின் வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதன்போது இடையிட்டு கேள்வி எழுப்பிய அஸ்வர் எம்.பி.இந்த செயற்றிட்டம் எப்போது நிறைவடையும் என்று வினவினார். அப்போது அவையில் இருந்த எதிரணியினர் பலத்த குரலில் சிரித்துவிட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவே இல்லை என சுட்டிக் காட்டினர். சற்று சுதாகரித்து கொண்ட அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எதிரணிக்கு பொறாமை அதிகம். அதுதான் சிரித்து கொண்டே இருக்கின்றனர் என்று கூறிவிட்டு வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள் நிறைவடையும் என்றும் குறிப்பிட்டார்.

(அ-7)

# உதவிகளுடன் கூடிய விசேட கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

தொழில் பயிற்சி அதிகார சபையானது கனேடிய உலகபல்கலைக்கழக (WUSC) சேவை நிறுவன அனுசரணையுடனும் யுனிசெவ் நிறுவன ஆதரவுடனும் வீட்டு மின்னிணைப்பு (NVQ III) கற்கை நெறியினை ஆரம்பிக்கவுள்ளது. இக்கற்கை நெறியினை பயில விரும்புவோர் எதிர்வரும் 27 ஆம்திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல 375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறியினை பயில விரும்பும் பயிலுநர்களுக்கு உடனடியாக பயணத்தை இலகுவாக்குவதற்கான உதவிகளும் தொழில் செய்வதற்கான உபகரணப் பெட்டியும் வங்கிக் கடன் வசதிகளும் தொழில் அபிவிருத்தி வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் பிரான்பற்று தொழிற் பயிற்சி நிலையத்துடனோ அல்லது பிரதேச செயலக திறனபிவிருத்தி உதவியாளருடனோ அன்றி தத்தம் பிரதேச கிராம அலுவலருடனோ தொடர்பு கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் முன்னுரிமையின் அடிப்படையிலேயே பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-7)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நிறைவாழ்வு மையத்தினால் வன்னி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# ஜெனீவா பிரேரணையை கொண்டுவர இந்தியாவே யோசனை வழங்கியது

## விக்ரமபாகு கருணாரத்ன கூறுகிறார்

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் பிரேரணையை கொண்டு வருவதற்கான யோசனையை அமெரிக்காவிற்கு இந்தியாவே வழங்கியது என்று இடது சாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை- கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

தமிழ் நாட்டின் எதிர்ப்பலைகளால் இந்தியா- இலங்கையை ஆதரிக்கும் போக்கில் தளர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது, இலங்கைக்கு எதிரான பிரேரணை அமெரிக்காவின் தேவைக்காக கொண்டு வரப்பட்ட தொன்றல்ல. இந்தியாவின் வழிகாட்டலுக்க மையவே இப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் மூலம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே அமுல்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றதே யொழிய தமிழ் மக்களுக்கு பெரிதாக எதுவும் வழங்கப்படவில்லை.

அதேவேளை இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் கோட்பாட்டையே இந்தியா கடைப்பிடிக்க இருந்தது.

ஆனால், தமிழ் நாட்டின் கடுமையான அரசியல் அழுத்தங்களால் மன்மோகன்சிங் அரசாங்கம் தடுமாறிப்போய் இப் பிரேரணைக்கு சில திருத்தங்களுடன் ஆதரவு வழங்க தயாரென தெரிவித்துள்ளது. ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான கடும் போக்கு இன்று அதிகரித்துள்ளது. எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கட்டாயம் அமுல்படுத்த வேண்டிய நிலை உருவாகும். ஏனெனில் வாழ்க்கை செலவு அதிகரிப்பால் சிங்கள மக்கள் பாரிய நெருக்கடியில் சிக்கித்தவிக்கின்றனர். தாம் மேற்கொள்ளும் போராட்டங்களில் சிங்கள மக்களின் பங்களிப்பு இதனை பறை சாற்றியது எனவும் தெரிவித்தார்.

(அ-2-7)

# வலது குறைந்தவர்களுக்கு ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பு?

## சமூக சேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வலது குறைந்தவர்களுக்காக ஆயிரம் வீடு களை நிர்மாணிக்க உள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்காக சஜித் பிரேமதாச எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

சமூக சேவை அமைச்சு அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்வாதார உதவி, வீடமைப்பு உதவி, சுய தொழில் உதவி, வைத்திய உதவி, கல்வி உதவி என்பனவற்றை வழங்கி வருகிறது.

அங்கவீனமுற்ற நபருக்கு ஆகக்கூடுதலான வாழ்வாதார உதவியாக 3 ஆயிரம் ரூபாவும் வீடமைப்பு உதவியாக இரண்டரை இலட்சம் ரூபாவும் சுயதொழில் உதவியாக 25 ஆயிரம் ரூபாவும் கல்வி உதவியாக 10 ஆயிரம் ரூபாவும் வைத்திய உதவியாக 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது.

ஐ.தே.க. காலத்துடன் ஒப்பிடுகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலே அங்கவீனர்களுக்கு கூடுதலான நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. (அ-2)

# தமிழ்மொழித்தினப் போட்டி

(விசுவமடு)

கண்டாவளை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான தமிழ்மொழித் தின போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக கண்டாவளை கோட்டக்கல்வி பணிப்பாளர் வீ.இராஜ குலசிங்கம் அறிவித்துள்ளார்.

(அ-255)

# தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதா கபடம் ஆடுகிறார்- கருணாநிதி



(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினையிலும் கூடங்குளம் விவகாரத்திலும் முதல்வர் ஜெயலலிதா தான் கபட நாடகம் ஆடுவதாக தி.மு.க தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை இலங்கை தமிழர் பிரச்சனையில் மத்திய அரசு தாமதமன்றி தலையிட்டு போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென கேட்டு விடியற்காலை நான் கட்சிக்காரர்களோ உதியாளர்களோகூட உடன் வராத நிலையில் தனியாக அண்ணாதுரை நினைவிடம் சென்று உண்ணாவிரதம் ஆரம்பித்தேன். அதன் பின்னரே அச்செய்தி டில்லி வரை சென்று மத்திய அமைச்சர் சிதம்பரமும் பிரதமர் மன்மோகன் சிங்கும் சோனியாவும் தலையிட்டனர். இலங்கை நிலை குறித்து விளக்கி என் உடல்நிலை கருதி உண்ணாவிரதத்தைநிறுத்திக் கொள்ள கேட்டுக் கொண்டார்.

அப்போது வெளியுறவு அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி விடுத்த அறிக்கையில் போர் நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுவிட்டதென்றும் கனரக துப்பாக்கிகள், போர் விமானங்கள், வான்வழித் தாக்கும் போராயுதங்களை பயன் படுத்தக் கூடாது என ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது என தெரிவித்திருந்தார். இதனடிப்படையில் தான் அன்று பிற்பகலில் உண்ணாவிரதத்தை திரும்ப பெற்றேன். இலங்கை தமிழர்களுக்காக அதைக் கூட செய்ய முன்வராத போர் என்றால் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என அறிக்கை விட்டுவிட்டுபிரதமருக்கு கடிதம் எழுதுவதையே வாடிக்கையாக கொண்டு திசைதிருப்பும் ஜெயலலிதா நான் ஏதோ மூன்று மணி உண்ணாவிரத நாடகம் நடத்தியதாக திரும்ப திரும்ப சொல்லி வருகிறார்.

ஆனால் ஜெயலலிதா பிரதமர் கடிதம் எழுதியதை தவிர என்ன செய்தார். தி.மு.க. ஆட்சியிலிருந்த போது பிரதமருக்கு கடிதம் எழுதினால் மட்டும் போதுமா? நேரில் சென்று எடுத்துக் கூறவேண்டாமா? என எத்தனை அறிக்கை வெளியிட்டார்.

தற்போது ஏன் அவர் முக்கிய பிரச்சனைகளில் கூட டில்லி சென்று பிரதமரிடம் முறையிடவில்லை. மாறாக பிரதமரே கருணாநிதியின் கபட நாடகத்திற்கு துணைபோகிற அளவுக்கு நடந்த கொள்கிறார் என இந்தகபடநாயகி அவதூறு அறிக்கை விடுவது பாராளுமன்ற நடவடிக்கைகளிலே அவமதிக்கிற செயல் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பேருந்து கால்வாயினுள் வீழ்ந்ததில் 14 குழந்தைகள் பரிதாபமாக பலி



ஆந்திராவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் கால்வாய்க்குள் கவிழ்ந்ததில் 14 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.


நேற்று முன்தினம் பாடசாலை முடிந்ததும் மாணவர்களை வீடுகளில் விடுவதற்காக பேருந்துகள் புறப்பட்டன. அவற்றில் ஒருபேருந்தில் 50 மாணவர்கள் பயணித்தனர். துங்காரம் என்ற கிராமம் அருகே சென்ற போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதுவதை தவிர்ப்பதற்காக சாரதி பேருந்தை விலக்கி ஓட்டினார். அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியோரத்தில் இருந்த கால்வாய்க்குள் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 10 மாணவர்கள் சம்பவ இடத்திலே பரிதாபமாக பலியாகினர். மேலும் நான்கு பேர் வைத்தியசாலையில் உயிரிழந்தனர். கிராமமக்கள் உடனடியாக ஓடி வந்து மாணவர்களை மீட்டதால் ஏனைய குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர். இவர்களில் 20 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி அதிர்ச்சி தெரிவித்துள்ளார். (அ-2)

## பாரதச் செய்தி

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கக்கோரி உண்ணாவிரதம்

### புதுக்கோட்டை தமிழ் உணர்வாளர்கள் களத்தில்



புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் அருகில் உள்ள அணவயல் புளிச்சங்காடு கைகாட்டியில் அப்பகுதி தமிழின உணர்வாளர்கள் சார்பில் ஐ.நா. அவையில் அமெரிக்கா கொண்டு வரும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்திய அரசு ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் நடந்தது. உண்ணாவிரதத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பி. முத்துக்குமாரன் தொடங்கி வைத்து உரையாற்றுகையில்,

தொடர்ந்து இந்திய அரசு தமிழர்களை வஞ்சித்தே வருகிறது. இப்போது போராடும் தமிழர்களுக்கு பதில் சொல்ல பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரியைச்சேர்ந்த நாராயணசாமி என்ற மத்திய அமைச்சரை மத்திய அரசு நியமித்துள்ளது. அவரது பதில்களும் பயனுள்ளதாக இல்லை. ஈழத்தமிழர் பிரச்சனையில் இந்திய அரசு தொடர்ந்து மந்தமாகவே இருந்து வருகிறது. முள்ளிவாய்காலில் பொதுமக்களை இலங்கை அரசுடன் கூட்டு படைகள் குண்டுகளை கொட்டி அழித்தன. அதனால் தான் இத்தனை மக்களும் கொல்லப்பட்டனர்.

அதுபோல இப்போது அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கிறோம் என்று பிரதமர் சொல்லி இருந்தாலும் அதை நாங்கள் நம்ப மாட்டோம். முன்பு நடந்து கொண்டது போல வாக்கெடுப்பு முடியும் வரை சொல்லி விட்டு பின்னர் எதி ராக வாக்களித்து விடுவீர்கள். அதனால் இலங்கை போர்க்குற்ற நாடு தான் என்று வாக்களிக்கும் வரை இதுபோல தமிழின உணர்வாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடக்கும். அதே ஐ.நா. மன்றத்தில்தனிதமிழீழநாடு அமைச்சு அனைத்து நாடுக ளும் ஆதரிக்க வேண்டும் என்ற புதிய தீர்மானத்தை இந்திய அரசு கொண்டு வர வேண்டும். அதற்காகவும் நாம் போராட வேண்டும் என்றார். (அ-2)

# இரட்டைமடி வலைப் பயன்பாட்டுக்கு தடைவிதிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்



(இராமநாதபுரம்)

இரட்டைமடி வலையை பயன்படுத்த தடை விதிக்கக்கோரி இராமநாதபுரத்தில் முற்றுகையிட சென்ற மீனவர்களை தடுத்த பொலிஸாருடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அனுமதியின்றி இரட்டை மடி சுருக்குமடி மீன்பிடிப்பை தடை செய்ய கோரி நாட்டுப்படகு மற்றும் சிறு தொழில் மீனவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டம் முடிந்த பின் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட செல்ல பொலிஸார் அமைத்திருந்த தடுப்பு வேலியை தாண்டி வந்தனர்.

பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர். அப்போது பொலிஸாருக்கும் மீனவர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு பதற்றம் நிலவியது.

இதைதொடர்ந்து எம்.எல்.ஏ. உள்ளிட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள் 15 பேர் கலெக்டர் நந்தகுமாரிடம் பேச்சு வார்த்தை நடத்த அனுமதிக்கப்பட்டனர். பின்னர் எம்.எல்.ஏ. கூறியதாவது,

இரட்டை மடி வலை மூலம் மீன் பிடிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் ஐந்து குதிரைத்திறனுக்கு பதிலாக 12 குதிரைத்திறன் மோட்டார் பயன்படுத்தும் படகுகள் மீது நடவடிக்கை எடுக்கவும் விதிகளை மீறுவோரை மீனவர்களே பிடித்து தரலாம். பிடித்து கொடுக்கப்படும் படகுகளின் ஆர்.சி.புத்தகம் டீசல் மானியம் நிறுத்தப்படும் என அவர் உறுதி அளித்தார். (அ-2)

# இலங்கைக்கு எதிரான் தீர்மானத்தில் தமிழீழம் கோரி திருத்தம் வேண்டும்

### ராமதாஸ் தெரிவிப்பு



இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் தமிழீழம் கோரி திருத்தம் செய்ய வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கை, ஈழத் தமிழர் தொடர்பான இந்தியாவின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் இருந்தால் அதை இந்தியா ஆதரிக்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு போதுமானது இல்லை.

இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தை ஆதரிப்பதாக இந்தியா வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். பிரதமர் கூறியிருப்பதைப் போன்று இலங்கையில் உள்ள தமிழர்கள் சுயமரியாதை, கண்ணியம் ஆகியவற்றுடன் வாழ்வதற்கு தமிழீழம் அமைப்பதே ஒரே தீர்வாக இருக்கும். அதற்காக உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே ஐ.நா. அமைப்பின் மூலம் பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கான பிரிவை அமெரிக்க தீர்மானத்தில் சேர்க்க வேண்டும்.


இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில் தமிழீழம் அமைப்பதுதான் இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்வதாக அமையும்.

இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கொடூரமான முறையில் படு கொலை செய்த இலங்கை ஜனாதிபதி ராஜபக் ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்த பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர வேண்டும் என்ற பிரிவையும் தீர்மானத்தில் சேர்க்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)



இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு மத்திய அரசு உறுதியான ஆதரவு தர கோரியும் இலங்கை ஜனாதிபதியை குற்றவாளியாக அறிவிக்க ஐ.நா. வை வலியுறுத்தியும் கோயம் பேடு வியாபாரிகள் நேற்று முன்தினம் கடைகளை அடைத்து உண்ணாவிரத போராட்டம் நடத்தினர். இதில் சில வியாபாரிகள் அங்கேயே மொட்டை அடித்து எதிர்ப்பு தெரிவித்ததை படத்தில் காணலாம்.

# பசளை விற்பனை மையம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் சேதன பசளை விற்பனை மையம் நேற்றைய தினம் திறந்து வைக் கப்பட்டது.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா தலைமையில் யாழ். மாநகர சபை வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண மத்திய சுற்றாடல்அலுவலக பணிப்பாளர் திருமதி விஜித்தா சத்தியகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, யாழ். கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ். மாநகர சபை சுற்றுச்சூழல் அதிகாரி ந.சூரியராஜ், கௌரவ விருந்தினராக யாழ். மாநகர சபையின் சுகாதார குழுத்தலைவர் சு.விஜயகாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-6)

# இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பு நடைபெறாது விடக்கூடிய சாத்தியம்

## ரணில் எதிர்வுகூறல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படாமல் விடப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டத்தின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தீர்மானம் நிறைவேற்றும் திட்டம் தொடர்பில் அமெரிக்காவுடன் தொடர்ந்தும் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

சில வேளைகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்படாமல் விடப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றும் யோசனையை அமெரிக்கா கைவிடக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவின் அறிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். சுயாதீன பொலிஸ் நீதிமன்ற தேர்தல் மற்றும் பொதுத்துறை ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் போன்ற கடுமையான நிபந்தனைகளை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதிக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் சகல யோசனை திட்டங்களையும் இலங்க அரசாங்கம் நிராகரித்தமையே இன்றைய சூழ்நிலைக்கான பிரதான காரணம் எனவும் தெரிவித்துள்ளார். (அ-7)

# நெருக்கடியான சூழலில் வன்னிமக்கள் வாழ்க்கை

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

வன்னி மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்வதற்கு வீடின்றி நெருக்கடியான சூழலில் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்று ஐ.தே. கவின் பொதுச்செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அங்கு சிவில் நிர்வாகம் இல்லை. முற்று முழுதாக இராணுவத்தின் பிடியிலேயே மக்கள் வாழ்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், அண்மையில் எமது தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்.குடாநாட்டுக்கும் வன்னி பிரதேசத்திற்கும் விஜயம் செய்தோம். அங்கு மக்களை சந்தித்து குறை நிறைகளை கேட்டறிந்தோம்.

இதன்போது அம் மக்கள் தமக்கு அடிப்படை வசதிகள் இல்லையென்றும் வாழ்வாதாரமில்லாது துன்பத்தில் வாழ்வதாகவும் வன்னியில் அனைத்து விடயங்களிலும் இராணுவத்தின் தலையீடுகள் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதனை நாங்கள் கண்கூடாக பார்த்தோம். அரசாங்கம் தமிழ் மக்களை சரியான முறையில் மீள்குடியேற்றவில்லை. சிவில் நிர்வாகத்தையும் அங்கு காணக்கூடியதாக இல்லை. அனைத்தும் இராணுவ மயமாகியுள்ளது என குறிப்பிட்டார்.

(அ-7)

# குப்பை கூழங்களால் நிறையும் யாழ்.குடா கடற்கரையோரம்



(மல்லாவி)

யாழ். மாவட்டத்தின் கடற்கரை யோரங்கள் குப்பை கூழங்களால் மாசடைந்து வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டு கடற்கரையானது அண்மைக்காலமாக மிக மோசமாக குப்பை கூழங்களால் நிறைந்து வழிகின்றது. கொழும்புத்துறையில் இருந்து நாவாந்துறை வரையான கடற்கரையோரங்களில் பிளாஸ்ரிக் பொருட்கள், குப்பைகள், இறந்தவிலங்குகளின் உடல்களின் எச்சங்கள் உட்பட சுற்றுலா பயணிகளால் வீசி எறிந்து விட்டு செல்லும்கழிவுப் பொருட்களுடன் உடைந்த மற்றும் வெற்று மதுப்போத்தல்கள் அதிகமாக காணப்படுகின்றன. அத்துடன் மீனவர்கள் தமது வலையில் அகப்படும் மீன் அல்லாத ஏனைய கடல் வாழ் உயிரினங்களை கடற்கரையிலே வீசி விட்டுச் செல்கின்றனர். யாழ். நகரப் பகுதியில் இருந்து கால்வாய்கள் வழியாக வரும் கழிவு நீர், குப்பைகள் என்பன நகரத்திற்கு அண்மையில் உள்ள பண்ணைக்கடலில் கலக்கிறது. எனவே இது தொடர்பாக அனைவரும் ஒன்றுபட்டு எமது அழகிய குடாநாட்டு கரையோரங்களை துப்புரவாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டுமென கூறுவதோடு காரைநகர் கயூரினா கடற்கரையின் ஓரங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு மதுப்பிரியர்கள் சுற்றுலா வருகையின்போது மதுப்பாவனை செய்து முடிந்ததும் வெற்றுப் பேத்தல்களை உடைத்து எறிவதுடன் அதை மணலால் மூடிவிட்டு செல்கின்றனர்.

இதன் மீது நடந்துசெல்லும் ஏனைய மக்கள் மிக மோசமான நிலையில் காயமடைகின்றனர். பொதுமக்கள் கூடும் இவ் இடங்களில் மதுப்பாவனையை தடைசெய்வதுடன் சட்டத்தை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் இதை ஓரளவேனும் குறைக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அனைவரும் இதில் கவனமெடுத்து எமது குடாநாட்டின் கடற்கரை ஓரங்களினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# வடக்கு முஸ்லிம்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய விசேட திட்டம்

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசித்துவரும் முஸ்லிம்களை வாக்காளர் பட்டியல்களில் பதிவதற்கு விசேட செயற்றிட்டமொன்று விரைவில் முன்னெடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உறுதிமொழி வழங்கியிருப்பதாக தேசிய மக்கள் காங்கிரசின் தேசிய இணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹுனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.

இரண்டு இடங்களில் பதிவு செய்த வாக்காளர்கள் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்தில் கட்சித் தலைவர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் ஒரு இலட்சத்து 66 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் இரண்டு இடங்களில் பதிவு செய்துள்ளனர். ஆனால், புத்தளத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் எந்தவொரு இடத்திலும் பதிவு செய்யவில்லை.

முல்லைத்தீவிலுள்ள 2 ஆயிரம் பேர் மாந்தை மற்றும் மன்னார் பகுதிகளில் தமது பதிவுகளை மேற்கொள்வதற்காகச் சென்ற போது உரிய ஆவணங்கள் இல்லையென அவர்கள் திருப்பியனுப்பப்பட்டிருந்தனர்.

இதுகுறித்து நாம் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தோம். இவர்களைப் பதிவு செய்வதற்கான விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படும் என்றும் நோன்புக்கு முன்னர் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எம்மிடம் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

அதேநேரம் இரண்டு பதவிகளை மேற்கொண்ட வாக்காளர்களுக்கு ஏதாவது ஒரு இடத்திற்கு தேர்தல்கள் செயலகத்தினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இக்கடிதத்துக்கு உரிய பதில் வழங்காத பட்சத்தில் கடிதம் அனுப்பப்பட்ட பகுதியிலுள்ள பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நேற்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தார். (அ-2)

# உழவியந்திரங்கள் வழங்கல்

(சிவநகர்)

கிளிநொச்சி இலங்கை வழங்கியின் ஊடாக கிளி. விவசாய முற்போக்கு முன்னணியின் ஏற்பாட்டில் இலகு தவணை அடிப்படையில் விவசாய உழவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த இலகு தவணை அடிப்படையில் முதற்கட்டமாக 10 விவசாயிகளுக்கு விவசாய உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் நகுலேஸ்வரன் கீதாஞ்சலியின் அனுசரணையுடன் கிளி.மாவட்ட விவசாயிகள் 100 பேருக்கு உழவு இயந்திரங்கள் வழங்கல் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-254)

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தா லும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.
~ மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## புதிய அரசியல் தலைமைக்கு தமிழ் மக்கள் தயாராக வேண்டும்

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் வாக்கெடுப்புக்காக காத்திருக்கின்றது.

அமெரிக்காவால் கொண்டு வரப்படும் தீர்மானம் வெற்றிபெறுமா? தோற்கடிக்கப்படுமா? என்பதில் தென் பகுதியில் ஏற்பட்டுள்ள கலக்கம் உச்சமடைந்துள்ளது.

தீர்மானம் நிறைவேறினால், அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்ற ஏக்கம் என்பதற்கப்பால்,

குற்றவாளிக் கூண்டில்– யார் யார் ஏற வேண்டி வரும் என்ற அந்தரிப்புகளும் கூடவே, குழப்பிக் கொள்கிறது.

தீர்மானம் நிறைவேறினால் அரசில் இருந்து அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்சவும் முதலில் வெளியேற்றப்படுவர்.

இதுவே அரசின் முதல் நடவடிக்கையாக இருக்கும்.

சம்பிக்க ரணவக்கவினதும், விமல் வீரவன்சவினதும் நாவால்தான் நாடு கெட்டுப் போனது என்று குற்றஞ்சாட்டப்படும்.

எனவே,இவ்விருவரையும் வெளியேற்றினால் தான் விமோசனம் என்ற கருத்து மேலோங்கும்.

இது அரச பக்கமாக இருக்க,

தமிழ்ப் பகுதியில் என்ன நடக்கும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலு பௌவியமாக இருக்கிறது.

தீர்மானம் நிறைவேறாமல் போனால், நாங்கள் போகாமல் விட்டதனால்தான் தீர்மானம் நிறைவேறவில்லை.

எனவே அரசு எங்களுடன் பேசவேண்டும். அரசைக் காட்டிக் கொடுக்கும் செயலை நாங்கள் செய்யவில்லை என்று கூட்டமைப்பின் முக்கிய தலைகள் கூறிக் கொள்ளும்.

மாறாக தீர்மானம் நிறைவேறினால், கூட்டமைப்பு செய்ய வேண்டியதெல்லாம் செய்துவிட்டு அமைதியாக இருந்தது.

எங்கள் முயற்சி வெற்றி பெற்றுவிட்டது என்று உரிமை கோரும்.

சிலவேளைகளில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை நாங்கள் சந்தித்து எங்கள் பிரச்சினையை இடித்துரைத்தோம் என்று அவர்கள் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் தமிழ் மக்கள் எதனையும் அறிய விரும்பாதவர்களாக அல்லது அறிந்தவற்றை வெளியில் சொல்லப் பயந்தவர்களாக இருக்கின்றனர். கூட்டமைப்புக்கு இதுபோதும்.

அமெரிக்காவால் ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானம் நிறைவேறினாலும் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமாயின் அப்பளுக்கற்ற–தியாக உணர்வுள்ள – நேர்மையான அரசியல் தலைமை உடனடியாகத் தேவை.

தங்களுக்கு வசதியும் வாய்ப்பும் கிடைக்கின்ற போது மட்டும் கருத்துக் கூறுகின்ற அரசியல் தலைமைகளும், பொதுமக்கள் சார்ந்த சமூக அமைப்புகளும் பதவிக்கும் புகழுக்குமானவேயன்றி அவற்றால் பிரயோசனம் ஒரு போதும் கிடைக்கமாட்டாது.

எனவே ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறினாலும் –நிறைவேறாவிட்டாலும் முதலில் தமிழ் மக்கள் தமக்கான தூய அரசியல் தலைமை பற்றி சிந்திக்க வேண்டும்.

இந்த சிந்தனையில்லையாயின், அமெரிக்கா அல்ல; அந்த ஆண்டவன் நேரில் வந்தாலும் எங்களுக்கு எந்த உதவியும் செய்யவே முடியாது.

# படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு தயாராகிறது - திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரின் சில நடவடிக்கைகள் மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டிருப்பதாக நோக்க முடிபதாகவும் அவை தொடர்பில் இராணுவ நீதிமன்றம், சிவில் நீதிமன்றங்களூடாக விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

இதன்மூலம் படையினருக்கு எதிராக செயற்பட அரசு தயாராகி வருவதை அவதானிக்க முடிகிறது. நாட்டைக் காப்பாற்ற போராடிய படைவீரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராகும் அரசாங்கம் சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்த அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, கருணா அம்மான், கிழக்கு முதலமைச்சர் பிள்ளையான் போன்றோர்க்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறுகின்றது எனக் கேட்ட விரும்புகின்றோம்.

இந்த விடயத்தில் கூட அரசாங்கம் இரட்டை வேடம் போட முற்பட்டிருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தியா எடுத்திருக்கும் முடிபுக்குக் கூட அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி மீது பழிபோட முற்பட்டாலும் வியப்பதற்கில்லை எனவும் அத்தநாயக்க குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் செய்தியாளர் மாநாட்டில் மேலும் விளக்கமளிக்கையில் கூறியதாவது,

அமெரிக்காவின் பிரேரணையை ஏற்றுக் கொள்ளப் போவதாக இந்தியா அறிவித்துள்ளதை அடுத்து அது தொடர்பில் இலங்கை அரசாங்கத் தரப்பினர் முரண்பாடான அறிவித்தல்களை வெளியிட்டு வருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டி இருக்கின்றது.


ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் தீர்மானத்தை ஆதரிப்பதென இந்தியா அறிவித்ததையடுத்து இந்தியாவின் முடிபை கௌரவமாக ஏற்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரட்ன அமுனுகம தெரிவித்திருந்தார். ஆனால் அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்சவும் இந்தியா துரோகமிழைத்து விட்டதாக விமர்சிக்க முற்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் இந்தியா அதன் நிலைப்பாட்டை அறிவித்துள்ளது. இலங்கை தமிழ் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டே இந்த முடிபை எடுத்திருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உற்பத்திகளை பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்த விமல் வீரவன்ஸ இப்போது இந்தியப் பொருட்களையும் பகிஷ்கரிக்க வேண்டும் என கூறத் தலைப்பட்டு விட்டார். ஹெல உறுமயவின் எம்.பியான அமைச்சர் சம்பிக்க ரணவக்க இலங்கைக்கு இந்தியா துரோகமிழைத்து விட்டதாக கூறி விமர்சிக்கத் தொடங்கியிருப்பதோடு இந்தியாவுக்கு எதிராக மக்களை அணி திரட்டவும் தயாராகி விட்டார்.

இந்தியா எடுத்திருக்கும் இந்த முடிபு தொடர்பில் இலங்கை அரசாங்கம் இரட்டை வேடம் போடத் தொடங்கிவிட்டது. அடுத்துவரக்கூடிய நாட்களில் இந்தியாவின் இந்த முடிபு குறித்து அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மீது பழியைப் போட்டாலும் வியப்பதற்கில்லை. அரசாங்கம் எடுக்கும் தவறான நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்பேற்க முடியாது.

அரசாங்கம் இந்த விடயத்தில் சர்வதேசத்தை அச்சுறுத்துவதை கைவிட்டு ராஜதந்திர ரீதியில் செயற்பட வேண்டும். இன்றேல் மேலும் நெருக்கடிகளையே நாடு சந்திக்க நேரிடலாம். இந்த விடயத்தில் அமெரிக்காவை எதிர்ப்பவர்களில் பலர் அமெரிக்க பிரஜாவுரிமை பெற்றவர்களாகவும் கிரீன் காட் வைத்திருப்பவர்களாகவே காணப்படுகின்றனர். அமெரிக்க உற்பத்திகளைப் பகிஷ்கரிக்குமாறு மக்களைக் கோரும் இவர்கள் முதலில் தமது அமெரிக்க பிரஜாவுரிமையையும் கிரீன் காட்களையும் திருப்பிக் கொடுக்க முன்வரவேண்டும்.



அமெரிக்கா அதன் தீர்மானத்தில் நாட்டுக்கு எதிராக குற்றஞ்சுமத்தவில்லை. அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு எதிராகவே குற்றச்சாட்டு சுமத்தியுள்ளது. ஐ.நா. செயலாளர் பான்கீ மூன் நியமித்த தருஸ்மன் குழுவின் அறிக்கை யோடு அரசின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை ஒப்பிட்டு கருத் துத் தெரிவித்திருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவற்றில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில அம்சங்கள் சமாந்தரமாகவுள்ளதாகவும் அவை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்படுவதாக அவர் பான் கீ மூனுக்கு எழுதிய கடிதத்திலும் தெரிவித்திருக்கிறார்.


படைத்தரப்பினரை பலிக்கடாவாக்கி மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் இருந்து அரசு தப்புவதற்கு முயற்சிக்கிறது. இதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் எனவும் அத்தநாயக்க தெரிவித்தார்.

## கண்டிய நடனம்

(சாவகச்சேரி)

திருமறைக்கலாமன்றம் கலைத்தூது அழகியற்கல்லூரி அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய அனுசரணையுடன் கண்டிய நடன நிகழ்வு எதிர் வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை கலைத்தூது அழகியற் கல்லூரியின் ஒருவருட கற்கை நெறியில் பயிற்சி பெற்ற இளையோர் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## மரணவீட்டிற்கு சென்று வந்தால் துவைத்து குளிக்க வேண்டுமா?

மரண வீட்டில் விசாரித்து விட்டு வரும் நபரை துணி துவைத்து குளிக்காமல் வீட்டிற்குள் நுழைய அனுமதிப்பதில்லை, முற்காலத்தில். இதை இப்போது யாரிடமாவது கூறினால் இது வெறும் மூட நம்பிக்கை என்றும் நம் இளைஞர்கள் கூறுவர். இறந்து போன நபரின் ஆவி, மரணம் விசாரிக்கச் சென்றவரை தாக்கும் என்றும் அதை தவிர்க்கவே வீட்டிற்குள் நுழையும் முன் அணிந்திருக்கும் ஆடைகளை துவைத்து, குளித்துச் செல்ல வேண்டும் என்று நம்பியிருந்தனர்.

இவ்வாறு கூறுவது மூட நம்பிக்கைதான். ஆனால் இதன்பின் உள்ள விளக்கம் முற்றிலும் ஏற்கத்தக்கதாகும். ஒருவர் இறந்த பின் அவர் சடலத்திலிருந்து ஏராளமான விஷஅணுக்கள் சுற்றுசூழலில் பரவி இருக்கும். சடலத்தை தொடவோ, அதன் அருகில் செல்லவோ செய்யும் போது இந்த விஷஅணுக்கள் இயல்பாகவே, செல்பவரின் உடலிலும் உடைகளிலும் சென்று தங்கும். இந்த பாதிப்பை தாமதமில்லாமல் துரத்த வேண்டியது மிக அவசியம்.

இதற்காகவே துணியையும் துவைத்துக் குளித்த பின்னரே வீட்டிற்குள் செல்ல வேண்டும் என்று கூறுவது உடலில் தண்ணீர் விழுந்து குளிரும் போது மூளையில் இருந்து மின்சக்தி புறப்பட்டு உடல் முழுவதும் புதிய சக்தி பரவுகின்றது. இந்த மின்சக்தியின் செயற்பாட்டினால் விஷ அணுக்கள் அழிந்து போகின்றன. உடைகளில் இருக்கும் கிருமிகளும் துவைக்கும் போது அழிந்து விடுகின்றன.

# குற்றவாளிகளைக் கண்டறிந்து தாக்குவதற்கு நவீன ஆயுதத்தை கண்டறிந்துள்ள அமெரிக்கா



குற்றவாளிகளை கண்டறிந்து சுடுவது, கலவரத்தில் அப்பாவி பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துபவர்களை தாக்குவது போன்ற செயல்களுக்காக அமெரிக்கா புதுவித அதி நவீன ஆயுதத்தை கண்டறிந்துள்ளது.

இந்த ஆயுதம் ஒரு கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும். இதனால் உடலில் காயங்கள் ஏதும் ஏற்படாது. ஆனால், உடல் தீப்பிடித்தது போல எரியும்.

ஆனால், இந்த ஆயுதத்தின் மூலம் சில சமயம் மக்களும் காயம் அடைகின்றனர். இதனால் இதற்கான மாற்று தீர்வை கண்டறியும் முயற்சியில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளது.

ஆக்டிவ் டினையல் சிஸ்டம் (ஏடிஎஸ்) என்று பெயரிடப்பட்டுள்ள மைக்ரோவேவ் கதிர்வீச்சு ஆயுதத்தை அமெரிக்க இராணுவம் உருவாக்கியுள்ளது.

இந்த செயற்பாடு குறித்து இராணுவ் அதிகாரிகள் கூறியதாவது,

மரணம் ஏற்படுத்தாத வகையில் தாக்குதல் நடத்தும் ஆயுத ஆராய்ச்சியில் அமெரிக்கா நீண்ட காலமாக ஈடுபட்டு வருகின்றது.

15 ஆண்டு முயற்சிக்கு பின்னர் ஏடிஎஸ் ஆயுதம் உருவாக்கப்பட்டுள்ளது. துப்பாக்கியில் இருந்து தோட்டா வெளிப்படுவது போல ஏடிஎஸ் கருவியில் இருந்து மைக்ரோ வேவ் ரேடியோ கதிர்வீச்சு வெளிப்படும்.

வீட்டு உபயோக பொருட்களில் (மைக்ரோவேவ் ஓவன்) இருக்கும் கதிர்வீச்சைவிட இது 100 மடங்கு வலுவாக இருக்கும். சக்திவாய்ந்த லென்ஸ் கருவி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் எதிரியைக்கூட துல்லியமாக குறிபார்த்து சுடமுடியும்.

கருவியில் இருந்து 95 ஜிகா ஹெர்ட்ஸ் என்ற அளவுக்கு கதிர்வீச்சு பாயும். சாதாரண நிலையில் மனிதனின் உடல் வெப்பநிலை 98.6 டிகிரி பரன்ஹீட் 2 வினாடிக்கு இந்த கதிர்வீச்சு உடலில் பாய்தாலோ 130 டிகிரி பரன்ஹீட் அளவுக்கு வெப்பம் பாயும். உடல் எரியும்.

அதிவேகத்தில் பாய்ந்து செல்லும் கதிர்வீச்சு எதிரியை தாக்குவதால் உடல் முழுவதும் பற்றியெரிவது போல எரிச்சல் ஏற்படும். எதிரி நிலைகுலைந்து விடுவார். ஆனால், தோலில் மிக மிக சொற்பமான ஆழத்துக்கு மட்டுமே கதிர்வீச்சு இறங்கும் என்பதால் காயம் ஏற்படாது.

மனிதர்கள் மீது 11 ஆயிரத்துக்கும் அதிகமான முறை இந்த கதிர் வீச்சு இறங்கும் என்பதால் காயம் ஏற்படாது.

மனிதர்கள் மீது 11 ஆயிரத்துக்கும் அதிகமான முறை இந்த கதிர் வீச்சு பாய்ச்சி சோதனை செய்யப்பட்டது. அதில் இரண்டு முறை மட்டுமே லேசான காயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனவே, இது மிகவும் பாதுகாப்பானது. ஆப்கான் போரின் போது ஏடிஎஸ் ஆயுதம் கொண்டு செல்லப்பட்டது. ஆனால் ஒரு முறைகூட பயன்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் கூறினர். (அ-2)

## மெக்சிக்கோவில் நிலநடுக்கம்; ஒபாமாவின் மகள் தப்பினார்



மெக்சிக்கோவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் அந்நாட்டு பாடசாலை விடுமுறைக்காக சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மகள் மலியா (வயது 13) எவ்வித காயமுமின்றி பத்திரமாக இருப்பதாக தகவல்கள வெளியாகியுள்ளன. லத்தீன் அமெரிக்க நாடான மெக்சிக்கோவின் மத்திய மாகாணமான கெரேரோ மாகாணத்தை மையம் கொண்டு நள்ளிரவு ஒரு மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில். 7.6 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல்வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. ஒக்ஸாகாவில் நிலநடுக்கம் உணரப்பட்டதால் கட்டடங்கள் குலுங்கின. ஆயி ம் வீடுகள் தரைமட்டமாயின. இடிபாடுகளினுள் அநேகமானோர் அகப்பட்டுள்ளனர் என அஞ்சப்படுகின்றது. எனினும் அவருக்கு எவ்வித காயமுமில்லை எனவும் பாதுகாப்புடன் உள்ளதாக வெள்ளை மாளிகை அலுவலகமும் இதனை உறுதி செய்துள்ளது. (அ-2)

# ஈராக்கில் அமெ.படைகள் வெளியேற்றம்; தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரிப்பு

## 43 பேர் பலி; 232 பேர் காயம்



ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய பின் அங்கு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் பல்வேறு நகரங்களில் நேற்றுமுன் தினம் தொடர்ச்சியாக குண்டுகள் வெடித்ததில் 43 பேர் பலியாகினர்.

ஈராக்கின் கெர்பாலா, கிர்குன், டியாலா மற்றும் பக்தாத் புறநகர் போன்ற இடங்களில் தொடர்ச்சியாக குண்டுகள் வெடித்தன.

இவற்றில் பெர்பாலா என்ற இடத்தில் நடந்த தாக்குதலில் 13 பேர் இறந்தனர்.48 பேர் படுகாயம் அடைந்தனர்.

கிர்குக் நகரில் பொலிஸ் அலுவலகம் அருகே கார் குண்டு வெடித்ததில் 9 பேர் பலியானார்கள். 17 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதேபோன்று பக்தாத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 4 பேர் இறந்தனர். ஏனைய இடங்களில் நடந்த குண்டு வெடிப்புக்களில் 17 பேர் உயிரிழந்தனர். சுமார் 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

மொத்தமாக நேற்று முன்தினம் நடந்த தொடர்குண்டுத் தாக்குதல்களில் 43 பேர் இறந்தனர். 232 பேர் காயம் அடைந்தனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அடுத்த வாரம் 3 நாட்கள் அரபு நாடுகளின் கூட்டமைப்பு மாநாடு நடைபெற இருக்கின்றது. இந்த சூழ்நிலையில் வெடிகுண்டு தாக்குதல் நடந்திருப்பது அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# சிரியாவில் வன்முறையை ஒடுக்கவேண்டும்; அனைத்து நாடுகளும் அணி திரளவேண்டும்

## பான் கீ மூன் வேண்டுகோள்



சிரியா நாட்டில் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக நடைபெற்று வரும் கிளர்ச்சியில் சுமார் 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஓராண்டாக நடந்து வரும் இந்த போராட்டம் முடிவுக்கு வரவில்லை. இதனை தடுக்க ஐ.நா. சபையும், அரபு நாடுகளும் எடுத்து வரும் நடவடிக்கைளை சிரியா தனது ஆதரவு நாடுகளான ரஷ்யா, சீனா நட ஆகியவற்றின் துணையுடன் முறியடித்து வருகிறது.

தற்போது ஐ.நா. சபை பொதுச்செயலாளர் பான்கீமூன் இந்தோனேசியாவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அங்குள்ள ஜகர்தா நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் அவர் பேசுகையில்,சிரியாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் ஏற்க முடியாதது.

எனவே, பாதுகாப்பு குழுவில் இடம்பெற்ற அனைத்து நாடுகளும் இணைந்து ஒரே நிலைப்பாட்டுடன் குரல் கொடுக்கவேண்டும். அங்கு வன்முறையை தடுக்க சுமுக பேச்சுவார்த்தைக்கு ஐ.நா. முக்கியத்துவம் கொடுக்கும் என்று குறிப்பிட்டார். (அ-2)

# அமெ. உறவு புதுப்பிக்கப்பட வேண்டுமெனில் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்

## பாகிஸ்தான் அறிவிப்பு

அமெரிக்கா உடனான உறவுகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றால் பல்வேறு நிபந்தனைகளை அந்நாடு நிறைவேற்ற வேண்டும் என பாகிஸ்தான் கூறியுள்ளது. குறிப்பாக இந்தியா-அமெரிக்கா அணு சக்தி ஒப்பந்தம் போல பாக்.-அமெரிக்கா அணு சக்தி ஒப்பந்தம் நிறைவேற்றப்படவேண்டும் என பாக். தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தானின் சலாலா எல்லைச் சாவடி மீது நேட்டா விமானங்கள் நடத்திய திடீர் தாக்குதலில் 24 பாக். இராணுவவீரர்கள் பலியாயினர். இத்தாக்குதலையடுத்து அமெரிக்கா-பாக். உறவுகள் சீர்குலைந்தன. ஆப்கானில் உள்ள நேட்டோவுக்கு செல்லும் பொருட்களின் பாதையை பாக். அடைத்தது. அச்சம்பவம் குறித்து அமெரிக்கா வருத்தம் தெரிவித்ததே தவிர மன்னிப்பு கேட்கவில்லை. பாக். தரப்பில் வந்த தகவல் கோளாறால் தான் அது நடந்ததாக அமெரிக்கா கூறுகிறது.

இந்நிலையில் பாக். வெளியுறவுக் கொள்கை மற்றும் அமெரிக்கா உடனான உறவுகள் குறித்த பாக். பாராளுமன்ற சிறப்புக் கூட்டம் நேற்று முன்தினம் கூடியது. இதில் தேசியப் பாதுகாப்புக்கான பாராளுமன்ற நிலைக்குழு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் அமெரிக்கா-பாக். உறவுகள் தொடரவேண்டுமானால் பல நிபந்தனைகளை அமெரிக்கா நிறைவேற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் விவரம் வருமாறு,

பாக். எல்லைப்பகுதியில் அமெரிக்கா நடத்தி வரும் ஆளில்லா விமானத்தாக்குதல்களை நிறுத்த வேண்டும். பாக். எல்லையில் அமெரிக்கா எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது. அப்படியே எடுத்தாலும் அது பாக். சட்டத்திற்குட்பட்டு வெளிப்படையாக இருக்க வேண்டும். அமெரிக்கா -இந்தியா இடையேயான அணு சக்தி ஒப்பந்தத்தால் இந்த மண்டலத்தில் அரசியல் சமநிலை மாறியுள்ளது. அதனால் அமெரிக்கா மற்றும் மற்றும் பிற நாடுகள் பாகிஸ்தானுடன் அணு சக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். சலாலா எல்லைச் சாவடி விவகாரத்தில் அமெரிக்காவின் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரப்பட வேண்டும். அத்தோடு அச்சம்பவத்திற்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.எதிர்காலத்தில் அமெரிக்க நேட்டோ சர்வதேச பாதுகாப்பு கூட்டணிப் படை ஆகியவற்றால் பாக். இறையாண்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்ற உறுதியையும் பாக். பெற வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# உலக தரிசனம்

## அதிக ஊழியர்களை கொண்ட நிறுவனங்களின் பட்டியலில் அமெரிக்க இராணுவம் முதலிடம்

உலகில் அதிகம் பேரை வேலைக்கு அமர்த்தியுள்ள நிறுவனத்தின் பட்டியலில் அமெரிக்க இராணுவம் முதலிடம் பிடித்துள்ளது.

இங்கு மொத்தம் 32 இலட்சம் பேர் பணி புரிகின்றனர். இதற்கு அடுத்த இடத்தில் இருப்பது சீன இராணுவம். இதில் இருப்பவர்களே 23 இலட்சம் பேர். அமெரிக்கா தன் படையில் வேலைசெய்யும் சிவிலியன்களையும் மிகவும் அவசரமாகத் தேவை ஏற்படும் போது மட்டுமே படைக்கு அழைக்கப்படும் ரிசர்வ் துருப்புக்களையும் தனது மொத்த படை எண்ணிக்கையில் சேர்த்துள்ளது. சீனாவை பொறுத்தவரை படைவீரர்களின் எண்ணிக்கை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.ஐந்தாம் இடத்தைப் பிடித்துள்ள பிரிட்டனில் உள்ள தேசிய சுகாதார சேவையில் 17 இலட்சம் பேர் வேலை பார்க்கின்றனர். சீனாவின் தேசிய பெற்றோலிய நிறுவனத்தில் 16 இலட்சம் பேரும் மற்றொரு அரச நிறு வனமான மின்தொகுப்பு நிறுவனத்தில் 15 இலட்சம் பேரும் வேலை பார்க்கின்றனர்.

இந்தப் பட்டியலில் 14 இலட்சம் ஊழியர்களைக் கொண்ட இந்திய ரயில்வேயிற்கு எட்டாவது இடமும் 13 இலட்சம் பேர் கொண்ட இந்திய இராணுவத்துக்கு 9 ஆவது இடமும் கிடைத்துள்ளன. ஆப்பிள் ஐ போன் , ஐபேட் போன்றவைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள பாக்ஸ்கான் பத்தாவது இடத்தில் இருக்கின்றது. அதன் ஊழியர்களின் எண்ணிக்கை 12 இலட்சம். (அ-2)

ஆசிய கிண்ண கிரிக்கெட்

# இறுதிப் போட்டியில் இன்று பாக்.-பங்களாதேஷ் மோதல்




(டாக்கா)

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த கடைசி லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் 5 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணியை தோற்கடித்தது.

பங்களாதேஷ் வெற்றி பெற்றிருந்ததால் இந்திய அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

லீக் முடிபில் பாகிஸ்தான் 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் 9 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை பிடித்தது. இலங்கைக்கு எதிராக அந்த அணி போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்றிருந்தது.

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் தலா 8 புள்ளிகள் பெற்றன.

லீக் ஆட்டத்தில் இந்திய அணி பங்களாதேஷிடம் தோற்றிருந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 2-ம் இடத்தைப் பிடித்தது.

முதல் இரண்டு இடங்களைப் பிடித்த பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

இலங்கை அணி தான் விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் தோற்று புள்ளிகள் எதுவும் பெறவில்லை. இந்திய, இலங்கை அணிகள் வெளியேற்றப்பட்டன. இதனால் பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் மோதும் இறுதிப்போட்டி இன்று டாக்காவில் நடக்கின்றது.

பாகிஸ்தான் லீக் ஆட்டங்களில் பங்களாதேஷ், இலங்கையை வென்றதுடன் இந்தியாவிடம் தோற்றது.

பங்களாதேஷ் அணி இந்தியா, இலங்கை அணிகளை வென்றதுடன் பாகிஸ்தானிடம் தோற்றது.

பங்களாதேஷ் அணி முதன்முறையான ஆசிய கோப்பை இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.


உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் அந்த அணி முதன்முறையாக ஆசிய கோப்பையை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

பங்களாதேஷ் அணி எல்லா வகையிலும் பாகிஸ்தானுக்கு சவால் கொடுத்து விளையாடும்.

பாகிஸ்தான் அணி ஆசிய கோப்பையை ஒரு முறை கைப்பற்றி உள்ளது. 2000-ம் ஆண்டு அந்த அணி சம்பியன் பட்டம் பெற்று இருந்தது. தற்போது 2 ஆவது முறையாக ஆசிய கோப்பையை வெல்ல பாகிஸ்தானுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது. நியோ கிரிக்கெட் சனலில் இந்த போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றது.

# ஆஸி-மேற்கிந்திய தீவுகள் ஒருநாள் போட்டி சமநிலையானது



(சென்.வின்சன்ட்)

அவுஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் புனித வின்சன்ட் மைதானத்தில் இந்தப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அணித்தலைவர் ஷேன் வோட்சன் 10, டேவிட் வோர்னர் 37, மைக்கல் ஹசி 67, ஜோர்ஜ் பெய்லி 59 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சிறந்த பந்துவீச்சினால் அவுஸ்திரேலிய அணியின் இறுதி நிலை துடுப்பாட்ட வீரர்கள் மூவரும் எவ்வித ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ளாமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சுனில் நரைன் 3 விக்கெட்டுக்களையும், மார்லன் சாமுவேல்ஸ், கேமர் றோச் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

221 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமாட ஆரம்பித்த மேற்கிந்திய அணி சார்பில் கீரன் பவல், ஜோன்சன் சாள்ஸ் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.


அணியின் மொத்த ஓட்டம் 27 ஆக இருக்கும் நிலையில் 12 ஓட்டங்களுடன் பவல் ஆட்டமிழந்தார். ஜோன்சன் சாள்ஸ் 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் ஷேன் வோட்சன் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இதுவரையும் 3 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன.

தொடரின் 4-வது போட்டி நாளை க்ராஸ் தீவுகளில் நடக்கின்றது.



# இருபது -20 உலகக்கிண்ண நுழைவுச்சீட்டு விற்பனை உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

2012 ஆம் ஆண்டு இலங்கையில் இடம் பெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது - 20 தொடருக்கான நுழைவுச் சீட்டு விற்பனை உத்தியோகபூர்வ தொடக்க விழா நாளை மறுதினம் காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு மாலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிகழ்வில் முதலாவது நுழைவுச் சீட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொள்ளவுள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட், இலங்கை ஆண்கள், பெண்கள் அணி சார்பாக பிரதிநிதிகளும், விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும், பிரபல இசைக் கலைஞர்களும் நடனக் கலைஞர்களும் பிரபலங்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். ரசிகர்களுக்கு போட்டிகளுக்கான 800 நுழைவுச்சீட்டுக்கள் இந்நிகழ்வில் வழங்கப் படவுள்ளன. 20 போட்டிகளுக்கான 20 சோடி நுழைவுச்சீட்டுக்கள் வீதம் வழங்கப் படவுள்ளது.

காலி முகத்திடல் நிகழ்வுக்கு வருகை தரும் அனைவருக்கும் வாயிலில் வைத்து வழங்கப்படவுள்ள அட்டை ஒன்றை வைத்து இடம்பெறும் குலுக்கல் அடிப்படையில் இந் நுழைவுச் சீட்டுக்கள் வழங்கி வைக்கபடவுள்ளன.

பொதுமக்களுக்கான நுழைவுச்சீட்டுக்களின் விற்பனை மார்ச் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் இலங்கை ரசிகர்களுக்கென ஆரம்பிக்கவுள்ளது. 4 நாட்கள் இலங்கை ரசிகர்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனைக்காக விசேடமாக ஒதுக்கப் பட்டுள்ளது.

குழுநிலைப் போட்டிகளுக்கு ஒருவர் ஆகக்கூடியதாக தலா 6 நுழைவுச் சீட்டுக்களும் சுப்பர் 8 போட்டிகள், அரையிறுதி, இறுதிப் போட்டிகளுக்கு ஒருவர் அதிகபட்சமாக 4 நுழைவுச் சீட்டுக்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இணையத்தளம் மூலமும் நுழைவுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்பவர்கள தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டைக் காட்டி நுழைவுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


குழுநிலைப் போட்டிகளுக்கான பெறுமதி நுழைவுச்சீட்டு ஒன்று 0.25 ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து ஆரம்பிப்பதுடன், இறுதிப் போட்டிக்கான நுழைவுச் சீட்டு 2.50 ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 45 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது - 20 தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி முதல் ஆரம்பித்து ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானம், பல்லேகல சர்வதேச மைதானம், அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளன.

இத்தொடரில் 12 சர்வதேச அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியின் தோல்விகளுக்கு போட்டி அட்டவணை காரணம் இல்லை

## -மஹேல ஜெயவர்த்தன



ஆசிய கிண்ணப் போட்டிகளில் ஏற்பட்ட தோல்விகளுக்கு இறுக்கமான போட்டி அட்டவணைகள் காரணம் இல்லை என இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற முக்கோண ஒருநாள் தொடரில் பங்குபற்றிய இலங்கை அணி அங்கிருந்து நேரடியாக பங்களாதேஷிற்கு திரும்பி போட்டிகளில் பங்குபற்றவேண்டி ஏற்பட்டது. முதற்போட்டிக்கு முன்னதாக இலங்கை அணி எந்தவொரு பயிற்சி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை. எனினும் இறுக்கமான போட்டி அட்டவணையே இலங்கை அணியின் தோல்விக்கு காரணமாக குறிப்பிட விரும்பவில்லை என்றார்.

இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் தவறுகள் செய்ததாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, அவுஸ்திரேலியாவில் சிறப்பாக விளையாடியிருந்தாலும் அந்தத் தரத்தை பங்களாதேஷில் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தார்.

இந்தியாவுடனான போட்டியில் இலங்கை அணிக்கு வெற்றி பெற வாய்ப்பு இருந்த போதிலும் அந்த வாய்ப்பை இலங்கை அணி தவற விட்டிருந்ததாக மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

300இற்கு மேற்பட்ட ஓட்டங்களை துரத்திக் கொண்டிருக்கும்போது 200 ஓட்டங்களுக்கு 2 அல்லது 3 விக்கெட்டுக்களை இழந்திருக்கும்போது அப்போட்டியை வெல்ல முயற்சித்திருக்க வேண்டும் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, நாம் தொடர்ச்சியாக சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தத் தவறியதாகத் தெரிவித்தார்.

இத் தொடரில் துடுப்பாட்ட வீரராகவும் அணித் தலைவராகவும் விமர்சனங்களைத் தவிர்த்த மஹேல ஜெயவர்த்தனவிடம் அணித் தலைமையில் ஏதாவது பிழைகள் காணப்படுகின்றனவா எனக் கேட்கப்பட்டமைக்கு, அவுஸ்திரேலியாவில் இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்ததை நினைவுபடுத்திய மஹேல ஜெயவர்த்தன, ஓர் இரவில் தான் திடீரென மோசமான அணித் தலைவர் ஆகமுடியாது எனத் தெரிவித்தார்.

அத்தோடு தான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று அணி எந்தளவு சிறப்பாக இருக்கிறதோ அந்தளவுக்கே அணித்தலைவர் சிறப்பாக செயற்பட முடியும் எனத் தெரிவித்தார்.

# இலங்கை வெற்றி பெறுவது கடினம்

## நியூயோர்க் ரைம்ஸ்

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இலங்கை தனக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணையில் தனக்கு சார்பாக வெற்றியைப் பெற்றுக்கொள்வது கடந்த தடவையைவிடக் கடினமானதாக இருக்கும் என நியூயோர்க் ரைம்ஸ் இதழில், ஜெனிவாவில் இருந்து **NICK CUMMING-BRUCE** எழுதிய செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

இலங்கையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட உள்நாட்டுப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சி, ஜெனிவாவில் இராஜதந்திரி ரீதியான விவாதத்தை உருவாக்கியுள்ளதுடன், இலங்கையை கோபம் கொள்ளவும் செய்துள்ளது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அனைத்துலக சட்ட விதிமுறைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான மீறல்கள் தொடர்பாக நம்பகமான, சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன், இவ்வாறான மீறல்கள் இடம்பெறக் காரணமாக இருந்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமெரிக்காவின் ஆதரவுடன் முன்வைக்கப்படும் பிரேரணை தொடர்பாக விவாதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் விவாதத்துக்கான கூட்டத்தொடர் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கை அரசாங்கத்தால் மனித உயிர்களைக் காப்பாற்றும் நடவடிக்கை என்ற பெயரில் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வந்த யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் 40,000 உயிர்கள் வரைகாவு கொள்ளப்பட்டதாக கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யுத்தத்தில் பங்கு கொண்ட இரு தரப்பினரும் யுத்தம் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான மீறல்களை மேற்கொண்டதற்கான நம் பகமான சாட்சியங்களை வல்லுநர் குழுவினர் தமது விசாரணைகள் மூலம் கண்டறிந்துள்ளனர்.

தற்போது அமெரிக்காவினால் ஆதரிக்கப்படும் பிரேரணையானது இலங்கையுடன் புரிந்துணர்வுடன், கூட்டாக இணைந்து மேற்கொள்வதற்கான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யுத்தகால மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பயனுள்ள, உறுதியான பரிந்துரைகளை துரிதமாக அமுல்படுத்துவதை நோக்காகக் கொண்டே முன்வைக்கப்படுவதாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்கத் தூதுவர் எலீன் டோனஹே தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சரியான திசையில்



பயணிப்பதை ஊக்குவிப்பதற்கான நேர்மையான, உண்மையான முயற்சியாகவே இப்பிரேரணை உள்ளதாகவும், பல மாதங்களாக இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இரு தரப்புத் தொடர்பாடலுக்கு பின்னரே தற்போது இப்பிரேரணை முன்வைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பிரேரணைக்கு எதிராக வாக்களிக்குமாறு இலங்கை அரசாங்கம் பல நாடுகளின் ஆதரவை கோரி நிற்கின்றது. இந்தவகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசாங்கத் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அமெரிக்காவின் இப்பிரேரணைக்கு எதிராக இந்நாடுகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் ஆதரவுடன் முன்வைக்கப்படும் பிரேரணை அனைத்துலக சமூகத்தை இரு துருவங்களாக பிளவுபடுத்துவதற்கு வழிவகுப்பதாகவும் இது இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்பட்டு வரும், தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஆதரவைத் திரட்டுவதற்காக ஜெனிவீவிற்கு 70 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்றை இலங்கை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம் ஒன்றை ஏற்கெனவே வரைந்துள்ளதாக பெப்ரவரி மாத முடிபில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமைச்சரும் மனித உரிமைகளுக்கான சிறப்புத் தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

முன்னர் யுத்த வலயங்களாக இருந்த பகுதிகளை புனரமைப்புச் செய்வதற்கான கால அவகாசம் இலங்கைக்கு தேவைப்படு வதாகவும், இது தொடர்பில் வெளிநாடுகளிடமிருந்து இலங்கை மீது அழுத்தங்களோ அல்லது தேவையற்ற பிரேரணையோ முன்வைக் கப்படுவதற்கான நேரம் இதுவல்ல எனவும் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளின் தீர்மானத்தை எதிர்த்து இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளதுடன், பிரேரணைக்கு ஆதரவாக தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் ஆர்வலர்கள் தோற்கடிக்கப்பட்ட புலிகளின் ஆதரவாளர்கள் என இலங்கை அரசாங்க சார்பு ஊடகங்களால் முத்திரை குத்தப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளன.

தமது நடவடிக்கைகளில் அரசாங்க பிரதிநிதிகள் குறுக்கீடு செய்வதாக ஜெனிவாவில் பிரசன்னமாகியுள்ள இலங்கையைச் சேர்ந்த அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன், மனித உரிமைகள் பேரவையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் கூட தமது குழு உறுப்பினர்களை மீண்டும் மீண்டும் அரசாங்கப் பிரதிநிதிகள் குழு ஒளிப்படம் எடுத்ததாகவும் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இம் முறைப்பாடுகளை பேரவையின் தலைவரான உருகுவேயைச் சேர்ந்த **Laura Dupuy Lasserre** ஆல் மீளவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக மேற்கொள்ளப்படும் விவாதத்தின் வெளிப்பாடானது இலங்கைக்கான சோதனைக்களமாக இருப்பது போல், மனித உரிமைகள் பேரவைக்கான சோதனைக் களமாகவும் உள்ளது.

2009இல், அதாவது இலங்கையின் உள்நாட்டுப் போர் நிறைவடைந்த கையோடு, கூட்டப்பட்ட சிறப்புக்கூட்டத் தொடரின் போது ஆசியாவைச் சேர்ந்த இலங்கையின் அயல் நாடுகள் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் ஆதரவுடன் இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மீறல்களுக்கு எதிராக முன்வைக்கப்படவிருந்த பிரேரணையை வெற்றி கொண்டது.

ஆனால் இந்த தடவை இலங்கை தனக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணையில் தனக்குச் சார்பாக வெற்றியைப் பெற்றுக் கொள்வதென்பது கடந்த தடவையை விடக் கடனமானதாக இருக்கும் என இராஜதந்திரிகள் மற்றும் பேரவையின் அவதானிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களை மட்டுமல்ல அரசாங்கத்தை விமர்சிப்பவர்களையும் பாதிப்படையச் செய்வதாகவும் மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இலங்கையில் 32 வரையான ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போன சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக அனைத்துலக மன்னிப்புச்சபை கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை முன்னர் போன்று பிராந்திய ஒருமைப்பாட்டை எதிர்பார்த்து நிற்க முடியாது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பாகிஸ்தான் மற்றும் தாய்லாந்து ஆகியன பரிந்துரையை எதிர்த்து குரல் கொடுத்துள்ளன.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தளவில் அதன் உள்நாட்டுக்குள் பல்வேறு அரசியல் அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் மறுபுறத்தில் இந்தியா, இலங்கையின் அயல்நாடாகவும், கூட்டாளி நாடாகவும் உள்ளது.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணையை ஆதரிப்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த திங்களன்று நாடாளுமன்றில் அறிவித்துள்ளார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## ஜெனிவாத் தீர்மானம்...

இதேவேளை ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் குறித்த இறுதிநேர பரபரப்புகள் தீவிரமடைந்துள்ளன. அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஹிலாரி கிளின்டன் ஜெனிவாவுக்கு நேரடியாகவந்து களத்தில் குதித்துள்ளார். அவர் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகள் குழு தீர்மானத்தை ஆதரிக்குமாறு கோரி ஏனைய நாட்டுப்பிரதிநிதிகளுடன் தீவிரப்பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது.

தீர்மானவரைவின் மீதான வாக்கெடுப்பு இன்றுமாலை அல்லது நாளை காலை இடம் பெறும் என்று உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக இந்தியப்பிரதமர் அறிவித்தாலும் ஹிலாரி கிளின்டன் களத்தில் குதித்துள்ளமையும் அடுத்து இலங்கை விவகாரத்தில் மேலும் சூடுபிடிக்கிறது என்று ஜெனிவாவிலுள்ள இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

தீர்மானத்திற்கு முடிந்தவரையில் அதிகூடிய நாடுகளின் ஆதரவைப்பெறுவதில் அமெரிக்கா தற்போது முனைப்புக்காட்டிவருகிறது. நேற்று முன்தினம் மாலைவரை ஹிலாரியுடன் நடத்தப்பட்ட ராஜதந்திர சந்திப்புக்களை அடுத்து இலங்கைக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறிய நாடுகள் சில தீர்மானத்தை ஆதரிப்பதாக அமெரிக்காவுக்கு வாக்குக் கொடுத்துள்ளன என்றும் அறியவருகிறது.

இதற்கிடையே இலங்கை மீதான தீர்மானம் குறித்து நேற்று ஐ.நா.மனித உரிமைகள் சபையில் உப நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது. வாஷிங்டனை தளமாகக்கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இந் நிகழ்வில் பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர். இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரிப்பதன் அவசியம் என்ன என்பதை இந்த நிகழ்வு வலியுறுத்தியுள்ளது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதுமட்டுமன்றி இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படுவதன் அவசியமும் இந்தநிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் தீர்மானம் நிறைவேறாமல் தடுப்பதற்கான பகீதர முயற்சியில் இலங்கை அரசும் அதன் அதிகாரிகளும் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார்கள். அமெரிக்க எதிர்ப்பு நிலை விவாதத்தை முன்வைத்து இலங்கை எடுத்துவரும் முயற்சிகளுக்கு தற்போது ஆதரவு குறைந்து வருகிறது என்கின்றனர் இங்கிருக்கும் இராஜதந்திரிகள். (ந-8,11)

## சரணடையுமாறு...

தானிகரகத்திடம் வினவியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்பின்னர் தமிழ் மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள விடயங்களில் தெளிவுத்தன்மை இல்லாததன் காரணமாகவே இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக அந்த உயர்ஸ்தானிகரகம் தெரிவித்ததாகவும்,

இது தொடர்பில் தெற்காசிய நாடுகளுக்கான உதவி இராஜாங்கச் செயலாளரான றொபேட் ஓ பிளேக்கிடம் தாம் வினவிய போது அதற்கு அவர் எந்தப் பதில்களையும் வழங்கவில்லை எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். (ந-8,11)


விற்பனைக்கு

நெல்லுடைக்கும் இயந்திரம் (ஜப்பான்) -Japan, 25H.P மோட்டார் (England) விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

0779687653

(C-6125)



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

சனி ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் 24.3.2012

182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - காலை 8 - 9
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 10 - 11

பாடசாலை மாணவர்களின் சனி, ஞாயிறு பிரிவு

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - மாலை 1 - 2
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - மாலை 3 - 4

(முதலில் வருவோருக்கே அனுமதிக்கு முன்னுரிமை)

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.